Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

NAZHIKAI London

OCTOBER 2013

# நாழிகை

International Tamil Newsmagazine





இலங்கை:

## மக்கள் அறையும் செய்தி

## தமிழின் தனி நாயகம்

தனிநாயக அடிகள் நூற்றாண்டு

# SURYAA New Improved Taste!




Special packs
**900g Curry Powder**
with
**1kg Flour**





**Hurry ! Limited Packs Only**




**Only £3.99**

**Great Offer** for a **Great New Taste!**





08 | இலங்கை
மக்கள் அறைந்த தீர்ப்பு

10 | இந்தியா
தெலங்கானா மாநிலம்
ஆதரவும் எதிர்ப்பும்


12 | நடப்பு விவகாரம்
அமெரிக்காவின்
உலக அச்சுறுத்தல்

14 | உலக விவகாரம்
- எகிப்து
நிலைக்கும் கலவரம்

22 | தனிநாயக அடிகள்
நூற்றாண்டு
கீழைத்தேயவியலும்
தமிழியலும்

30 | தனிநாயக அடிகள்
நூற்றாண்டு
ஒப்பில்லா திருக்குறள்

38 | விருந்தினர் பக்கம்
மகாராணி வணங்கும்
அதி மகாராணி



18 | இங்கிலாந்து
டயானா மரணம்
கொலையா?



42 | கலை - இசை
அழகின் ஜொலிப்பு

40 | சினிமா
திரைப்படங்கள்
தலைவா
மெட்ராஸ் கஃபே




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: VIII, No: 6 & 7
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews Limited 123 Twyford Road Harrow Middx HA2 0SJ
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 728 2334 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
www.nazhikai.com

**Anual Subscription** (12 issues)**: UK** £22.00 **Europe** £30.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews Limited**
**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6 **Tel: 416 613 2770**

# தமிழின் தனி நாயகம்

யுவான் சுவாங் (கி. பி. 600 - 664) என்ற புகழ்பெற்ற சீன பௌத்த அறிஞர், காஞ்சிபுரத்துக்கு வந்து பௌத்த அறவியலைக் கற்றுத் தேர்ந்துசெல்லும் அளவுக்கு சிறப்புமிக்க கல்வி மையங்களைக்கொண்டதாக திகழ்ந்தது தமிழ்நாடு. ஆனாலும், தமிழ் மொழியின் உலக வியாப்தி என்பது, கடந்த முந்நூறு ஆண்டுகளில்தான் உணரப்பட்டது.

சீகன்பால்கு, றொபர்ட் கால்டுவெல், ஜி. யூ. போப், கமில் ஸ்வெலபில், எல்லிஸ், ஜோசப் பெஸ்கி, ஜோர்ஜ் ஹாட் போன்ற பிறமொழி தமிழ்ப் புலமையாளர்கள் தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழ் இலக்கியங்களின் ஆழத்தையும் உணர்ந்து, அவற்றை உலகின் கவனத்துக்கு எடுத்துச்செல்ல உழைத்தனர்.

இரண்டாயிரம் ஆண்டுகால செவ்விலக்கிய, இலக்கண மரபுகளுடன் செழித்த தமிழ் மொழியின் மேன்மை, வட இந்தியாவிலேனுங்கூட அறியப்படவில்லை. கீழைத்தேயவியல் என்பது சமஸ்கிருதம் என்று மாத்திரமே அறியப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழ் இலக்கண, இலக்கிய மரபு ஏனைய உலக செவ்விலக்கியங்களுடன் கொண்டிருக்கும் உறவையும் உயர்வையும் தனது பன்மொழிப் புலமையால் ஒப்பீட்டு ரீதியில் நிரூபித்து, உலக அளவில் தமிழை நிலைநாட்டிய முதல் தமிழர் - ஒரே தமிழர், தனிநாயக அடிகள். தமிழ் செவ்விலக்கிய மரபோடு, தமிழரின் தத்துவ மரபு, அற மரபு ஆகியவை உலக தொல் மரபுகளுடன் கொண்டுள்ள உறவையும் அவர் வெளிப்படுத்தினார். கீழைத்தேயவியலுக்கு நிகராக தமிழியலையும் உலக அரங்கில் நிறுத்தினார்.

இத்துணை சிறப்புப்பெற்ற இலக்கியத்தையும், இதனைத் தோற்றுவித்த மொழியையும் பரப்புதல் வேண்டுமெனும் துணிவின் உந்தலில், 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்; தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே' என்று, தமிழ் மொழியின் வியத்தகும் இயல்புகளையும், தமிழரின் இயற்கை ஈடுபாட்டையும், ஐந்திணை இலக்கணத்தையும் உலகம் முழுவதும் உணர்த்தி, தமிழ்த் தூது சென்றவர்.

'அறிவுஉரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றும்; செறிவுடையான் செல்க வினைக்கு' என்ப, இயற்கை அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப்பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் பெற்ற அடிகளார், தாம் சென்ற வினையில் வென்றார். தமிழ் மொழியின் வரலாற்றில் ஒரு தனி நாயகமாக சிறக்கிறார்.

இலங்கையில் பிறந்த இவரின் நூற்றாண்டில், ஒரு சிறப்பு மலராக இதனை வெளியிடவே எண்ணியபோதும், இரு கல்வியாளர்களின் கட்டுரைகளுடனான இதழாக வெளிவருகிறது.

# ஏழை அழுத கண்ணீர்

'கையறுநிலையில்' இருந்த மக்கள், அறைந்து சாற்றும் தன்மான உணர்வை, இலங்கையின் வட மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் முழு உலகுக்கும் உணர்த்தியிருக்கின்றன. மக்கள் அளித்த வாக்குகளில் வெற்றியைப்பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பும், தோல்வியை அடைந்த அரசாங்கமும், அந்த வாக்குகள் தமது வெற்றியையும் தோல்வியையுமன்றி, இரு தரப்பினருக்குமான தார்மீக பொறுப்பையே தெளிவாக உணர்த்துவதை இரு சாராருமே தமது விசுவாச சிந்தையில் புரிந்து கொள்வார்கள்.

அலரி மாளிகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நிகழ்ந்த முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனின் சத்திய பிரமாண பதவியேற்பை, இவ்விருசாராரினதும் இத் தார்மீக புரிதலுடனான செயல்பாடுகளுக்கான கால்கோளாகவே கொள்வோம். பதவியேற்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பூஜை அறையிலிருந்த விநாயகர் விக்கிரகத்தை விக்னேஸ்வரனுக்கு அன்பளிப்பாக அளித்ததை, இருவரும் இச் செயல்பாடுகளில் இட்ட 'பிள்ளையார் சுழி' என்றும் நம்புவோம்.

'தூர நோக்கின் அடிப்படையிலும், கிட்டிய நோக்கின் அடிப்படையிலும் கடமையாற்றும்படி மக்கள் எனக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். தூர நோக்கு, எமது தனித்துவத்தை வலியுறுத்துவது. அதனை அடைய நாம் எமது கடந்தகால போராட்டங்கள், அரசியல் அணுகுமுறைகள், அநுபவங்கள் யாவற்றிலுமிருந்து பாடங்களைக் கற்றே முன்னேற வேண்டியுள்ளது.

'போருக்குப் பின்னரான எமது மக்களின் தேவைகளை காலதாமதமின்றி பூர்த்திசெய்வதான, கிட்டிய நோக்கில் உதவுவதாகவும் எமது செயல்பாடு அமைந்துள்ளது' என்று, பதவியேற்ற பின்னர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்த வார்த்தைகளிலும் இலங்கைத் தமிழர்கள் நம்பிக்கை கொள்ளட்டும்.

தமது பாரிய அர்ப்பணிப்புடன், தாம்கொண்ட நம்பிக்கையில் நொந்துபோனவர்கள் இம் மக்கள். 'ஏழை அழுத கண்ணீராய்' அவர்கள் இத் தேர்தல் வாக்களிப்பில் சொல்லியிருப்பதை, அரசு ஏப்படியோ ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு முதலில் நிச்சயமாக, அசலாகவே புரிந்துகொள்ளும் என்பது முதல் நம்பிக்கை. ■

# உலகம்



கனடா

## பொதுநல நாடுகள் உச்சி மாநாடு

# பிரதமர் கலந்துகொள்ளமாட்டார்

கனடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர், இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுநல நாடுகள் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டாரென அறிவித்துள்ளார். இலங்கையில், மனித உரிமைகள் துஷ்பிரயோகத்தை காரணம்காட்டி அவர் இதனை அறிவித்துள்ளார்.

பொதுநல நாடுகள் தலைவர்களின் உச்சி மாநாடு இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறும் வாய்ப்பைப் பயன்படுத்தி, இலங்கை அரசு அங்கு மனித உரிமை நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, இனங்களுடனான நல்லிணக்கம், யுத்த மீறல்களுக்கான பொறுப்பு ஆகியவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் எதிர்பார்த்தபோது, துரதிருஷ்டவசமாக இவை அங்கு நடைபெறவில்லை. சுதந்திரம், ஜனநாயகம், மனித கௌரவம் என்ற பொது நல நாடுகள் அமைப்பின் அடிப்படைச் சித்தாந்தங்களை கனடிய மக்கள் பெரிதும் போற்றுகின்றபோது, இப் பண்புகளில் இலங்கை தவறுவது தெளிவாக தெரிகையில், அங்கு நடைபெறும் இம் மாநாட்டில் கனடாவின் பிரதமராக நான் அதில் கலந்துகொள்ளமாட்டேன்; இது ஆழ்ந்து சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவு என்று ஹார்ப்பர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் பாலித்தீவில் நடைபெற்ற, ஆசிய - பசிபிக் பொருளாதார கூட்டு கூட்டத்தில் ஹார்ப்பர் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

கனடாவின் சார்பில், கனடிய வெளிவிவகார, சர்வதேச மனித உரிமைகள் அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர் டீபக் ஒப்ராய் கலந்துகொள்வார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஜேர்மனி

## புதிய கூட்டு அரசாங்கம்?



புதிய கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அதிபர் அஞ்சலா மேர்க்கல், தனது இடதுசாரி வைரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் அஞ்சலா மேர்க்கலின் கிறீஸ்தவ ஜனநாயக கட்சி அறுதி பெரும்பான்மையைப் பெற சொற்ப வாக்குகளில் தவறியபோது, அவரது அரசில் கூட்டுச்சேர்ந்திருந்த லிபரல் கட்சி ஓர் ஆசனத்தையும் வெல்லவில்லை.

பலத்த முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும், சோசலிச ஜனநாயக கட்சியுடன் புதிய அரசை அமைக்கும் பேச்சுக்களில், வரி விவகாரங்களும் உத்தேச தேசிய அதி குறைந்த ஊதியமும் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன.

அஞ்சலா மேர்க்கல், சோசலிச ஜனநாயக கட்சியுடன் முன்னரைப்போல ஒரு புதிய கூட்டு அரசாங்கத்தை அமைப்பின், யூரோ வலயத்தின் பெரும் பொருளாதாரத்தை மீள் சமப்படுத்துவதும், யூரோ வலயத்தின் கடனையும் வங்கி பிரச்னைகளையும் சமாளிப்பதில் ஜேர்மன் மக்களின் ஆதரவை வெல்வதுமான இரு பெரும் சவால்களை அது எதிர்கொள்ள நேரும்.



சிரியா

## இரசாயன ஆயுதங்கள் ஒப்படைப்பு

ஐ. நா. தீர்மானத்தையடுத்து சிரியா தன்வசமுள்ள இரசாயன ஆயுதங்களை மிகவும் திருப்திகரமான விதத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்களிடம் கையளித்துவருதாக தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, அதிபர் அல்-அசாத் அரசுக்கு இதுதொடர்பில் பாராட்டும் தெரிவித்திருக்கிறார்.

தலைநகர் டமாஸ்கஸ் அருகே ஒகஸ்டில் இடம்பெற்ற இரசாயன ஆயுத தாக்குதலையடுத்து எழுந்த உலகளாவிய விசனத்தையடுத்து ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஏற்பட்ட இணக்கத்தில், சர்வதேச கண்காணிப்பாளர்களிடம் ஆயுதங்களை ஒப்படைக்கும் ஐ. நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒகஸ்டில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் இரசாயன பொருள் உள்பட ஆயிரம் தொன்னுக்கு மேற்பட்ட நிறைகொண்ட இரசாயன பொருள்களுடன், மேலும் அதிகமான ஆயுதங்கள் சிரியா வசம் இருப்பதாக கூறப்படுகிறது. ஒகஸ்ட் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட இரசாயன பொருளை கள்காணிப்பாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த இத் தாக்குதலை சிரிய அரசுப் படையினரே மேற்கொண்டதாக அமெரிக்கா, பிரிட்டனும் ஏனைய மேலை நாடுகளும் குற்றம் சுமத்தியபோது, தீவிரவாதிகளே இவ்விரசாயன தாக்குதலை நடாத்தியதாக அல்-அசாத்தும் ரஷ்ய அதிபர் புட்டினும் தெரிவித்தனர்.

அமெரிக்க - ரஷ்ய உடன்படிக்கையின்படி, சிரியா வசமுள்ள ஆயுதங்கள் 2014ஆம் ஆண்டின் நடுப்பகுதியுள் அகற்றப்படவேண்டும்.

மாலைதீவு

## ஜனாதிபதி தேர்தல் ரத்து

ஜனாதிபதி தேர்தலுக்கான முதல்சுற்று தேர்தல் முடிவுகளை நிராகரித்து தீர்ப்பு வழங்கியுள்ள மாலைதீவு உயர் நீதிமன்றம், ஒக்ரோபர் 20ஆம் தேதி புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு பதவியிலிருந்து நீக்கப்பட்ட மொஹமெட் நஷீட், 45 வீத வாக்குகளைப் பெற்றிருந்தபோதும், ஆட்சியை அமைப்பதற்கு போதுமான வாக்குகளை அவர் பெறவில்லை. அதனையடுத்து நடைபெறவிருந்த இரண்டாவது சுற்று தேர்தலை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.


புதிய தேர்தலின் பின்னரும் இரண்டாவது சுற்று வாக்களிப்பு தேவைப்படின், நவம்பர் 11இல் புதிய ஜனாதிபதி பதவியேற்பதற்கு வாய்ப்பாக, நவம்பர் 4ஆம் தேதிக்கு முன்னதாக அதனை நடத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தேர்தலில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்த ஹாசிம் இப்ராஹிம் தாக்கல் செய்திருந்த தேர்தல் முறையீடுகள் தொடர்பில் நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியது.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற மாலைதீவின் முதலாவது ஜனநாயக தேர்தலில் ஆட்சிக்குவந்த நஷீட், கடந்த ஆண்டு சதி முயற்சியென குற்றஞ்சாட்டப்படும் நடவடிக்கைகளில் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். முப்பது ஆண்டுகள் பதவியிலிருந்த முன்னாள் அதிபர் அப்துல் கயூமின் சகோதரரான அப்துல்லா யமீன் இத் தேர்தலில் 25 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இரண்டாவது சுற்று வாக்களிப்பைத் தவிர்ப்பதற்கு 50 வீத வாக்குகள் ஒருவருக்கு தேவை.




Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers & Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

# என்ன தவம், நம் தவம்!

## காங்கிரஸ்காரர்களுக்கு ஊழல்தான் செய்யத்தெரியும், வாதம் செய்யத் தெரியாது

லண்டனின் 'ஹைட் பார்க்' பூங்காவில் ஒரு மூலையில், யாரும் எதுவும் பேசலாம். அங்கே பொழுதுபோக்க வருபவர்கள் பேச்சைக்கேட்டு ரசிப்பார்கள். ஒரே ஒரு நிபந்தனை உண்டு. அதாவது, ராஜ குடும்பத்தைப்பற்றி யாரும் எதுவும் பேசக்கூடாது.

இங்குள்ள ராஜ குடும்பத்தையும் யாரும் விமரிசிக்கக்கூடாது என்பது எழுதப்படாத விதி. தொலைக்காட்சி சனல்களில் விவாதக் களம் அமைப்பவர்களும் சோனியாவை, ராகுலை விமரிசிப்பதில்லை. அநேகமாக, எல்லோருக்கும் அவ்வளவு ராஜ விசுவாசம் இருக்கிறது. எலிசபெத் மகாராணி போல் சோனியா பரம்பரை ராணி அல்ல. ராகுலை இளவரசர் என்று சிலர் குறிப்பிடுவது கிண்டல். ஆனாலும், காங்கிரஸ்காரர்கள் அதை நிஜமாக எடுத்துக்கொண்டு அவரை ராஜமரியாதைப்படி வணங்கி வருகிறார்கள். ஏவல் பணி செய்யும் பிரதமர் மன்மோகன் சிங்கும் இப்போது ராஜகுடும்ப உறுப்பினராகிவிட்டார். எனவே, அவரையும் யாரும் குறைசொல்லக்கூடாது.

முதலாளியின் பியூனுக்கும், முதலாளியின் டிரைவருக்கும் நிறுவன ஊழியர்கள் ஒரு மேலாளருக்குக் கொடுப்பதைவிட அதிக மரியாதையைக் கொடுப்பது வழக்கம். காங்கிரசில் மன்மோகன்சிங் பெறும் முக்கியத்துவம் அப்படிப்பட்டதே. அது காங்கிரஸ் கட்சியின் தலைவிதி. மற்றவர்களை அது கட்டுப்படுத்தாது. ஆனாலும், எல்லோருமே ராஜ குடும்பத்தை நிந்திக்காமல் பேசவேண்டும் என்று காங்கிரஸ் எதிர்பார்க்கிறது. இது நியாயமற்றது. அடிமைகளுக்கு சுதந்திர உணர்வு வராது. அதனால்தான் மன்மோகன் சிங்கை விவாதத்திற்கு வரத்தயாரா என்று நரேந்திர மோடி அழைத்ததற்காகக் காங்கிரஸ் கட்சியின் சொல்லோலக்காரர் மணீச் திவாரியும் நிந்தனை வேந்தன் திக்விஜய் சிங்கும் கொதித்துக் கூப்பாடு போடுகிறார்கள்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தன் சுதந்திர தினவிழா உரையில் பிரதமர் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு சவாலுக்கு அழைத்தது பொருத்தமற்றதாகவே இருக்கட்டும். அது மரபு மீறல் என்றாலும், எங்கள் பிரதமர் விவாதத்திற்குத் தயார் என்று காங்கிரஸ் சொல்லியிருக்கலாமே; ஏன் சொல்லவில்லை? பிரதமராவது வேறுவழியில்லாமல் ஏதோ அரை குறையாக பதில் சொன்னார். நேரடி விவாதம் என்றால் விரல் நுனியில் விவரங்களை வைத்துள்ள நரேந்திர மோடி பொருள்பொதிந்த கேள்விகளைக் கேட்பார். மன்மோகன் சிங் முகத்தை மட்டும் காட்டுவார், உதட்டை அசைப்பார். மற்றபடி அவரால் சுயமாக பதில் கொடுக்க முடியுமா? மூளைச் சலவை செய்யப்பட்ட அவரிடம் அந்தத் திறமையும் ஞானமும் இல்லை.


நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்திக்கும் வெளிநாட்டுக் கடனுக்கும் இப்போதைய விகிதாசாரம் என்ன என்று கேட்டால் மாஜி பொருளாதார நிபுணர் மன்மோகன் சிங் பக்கத்தில் உள்ளவரைப் பார்க்க, அவர் நிதித்துறை செயலாளரிடம் சொல்ல அவர் குறிப்புகளை எடுத்து நிதி அமைச்சரிடம் தர, நிதி அமைச்சர் அதை சோனியாவிடம் காட்டி ஒப்புதல் பெற்ற பின்னரே பதில்வரும். அதுவரை மேடையில் மோடி உண்ணாவிரதம் இருக்கலாம். இடையில் ஜகார்த்தாவில் ஒரு சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள உலக சமாதானத் தூதர் மன்மோகன் சிங் புறப்பட்டுவிடுவார்.

உங்கள் மாநிலத்தின் பொருளாதாரச் சிறப்புகள், நீங்கள் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் என்னவென்று கேட்டால் கையில் எந்தக் குறிப்பும் வைத்துக் கொள்ளாமல் தகவல்களைத் தரும் அளவுக்கு நரேந்திர மோடி நிர்வாகத்தில் ஒன்றிப் போயிருக்கிறார். அந்த மாதிரி மன்மோகன் சிங் பேச வேண்டுமென்றால் யாராவது எதையாவது எழுதித்தந்து மாட்சிமை தாங்கிய மகாராணியும் சூப்பர் பிரதமருமான சோனியா அதற்கு ஒப்புதல் தரவேண்டும். நாட்டின் தலைமை நிர்வாகியான பிரதமர் மன்மோகன் அப்படிக் கயிறு இல்லாத பொம்மலாட்ட பொம்மை. என்ன தவம் நாம் செய்த தவம்!

நரேந்திர மோடி - மன்மோகன் சிங் இருவரையும் மேடையில் ஏற்றிவிட்டு, குஜராத் பற்றியும் தேசிய நிலமை பற்றியும் கேள்விகள் கேட்டால் மோடி பதில் சொல்வார். மன்மோகன் சிங்கிடம் கஷ்டமான கேள்விகள் எதுவும் கேட்க வேண்டாம். ஒரே ஒரு கேள்வியும் அது தொடர்பான சில துணைக் கேள்விகளையும் கேட்டால் போதும். அதற்கு அவர் சரியாக பதில் சொல்லிவிட்டால் தேர்தலே நடத்தாமல் அல்லது தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் அவரையே பிரதமராக பணியாற்ற அழைக்கலாம்.

அந்த முக்கிய கேள்வியும் துணைக் கேள்விகளும்: உங்கள் மந்திரி சபை உறுப்பினர்கள் எத்தனை பேர்; கேபினட் அமைச்சர்கள் எத்தனை; இணை, துணை அமைச்சர்கள் எத்தனை; அமைச்சுகளின் இலாக்காக்கள் என்ன; இவர்களுக்கு முந்திய அமைச்சர்கள் யார் யார்? அவர்களைப் பற்றிய சுருக்கமான குறிப்புகளைச் சொல்ல முடியுமா?

இந்த சாதாரணமான கேள்விகளுக்கு பதில் அளிக்கத் திணறும் மன்மோகன் சிங்கை நரேந்திர மோடி வாதத்திற்கு அழைப்பது தவறுதான். காங்கிரஸ்காரர்களுக்கு ஊழல்தான் செய்யத்தெரியும், வாதம் செய்யத் தெரியாது. இதை காங்கிரஸ்காரர்களின் கூப்பாடுகளுக்குப் பிறகு மோடி புரிந்து கொண்டிருப்பார். இந்த நிலையில் ஏனோ ஒரு தமிழ்ப் பழமொழி நினைவுக்கு வருகிறது - 'ஆடத் தெரியாத தேவடியாள் கூடம் கோணல் என்றாளாம்'. ■




## வட மாகாண சபை தேர்தல்

# மக்கள் அறைந்த தீர்ப்பு

**பெரும்பான்மை பலத்துடனும் சட்ட அறிவார்ந்த முதலமைச்சர் ஒருவரின் தலைமையின்கீழும் இயங்கவுள்ள மாகாண சபை, அரசுடனான சதுரங்கத்தை ஆரம்பிக்கிறது**

தண்டாயுதன்

இலங்கையின் அரசியல் விவகாரங்களை உன்னிப்பாக அவதானிக்கும் அனைவருமே மூக்கில் விரலைவைவக்கும் விதத்தில் வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன.

இலங்கையின் மொத்தம் ஒன்பது மாகாணங்களில் எட்டு மாகாணங்களில் ஆளும் கட்சியும் அதனோடு கூட்டிணைந்த அரசியல் கட்சிகளுமே ஆட்சிசெலுத்துகின்றன. கிழக்கு மாகாணசபையில்கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆளும் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது. ஆனால், வட மாகாண சபை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் கோட்டையாக, தமிழ் மக்களின் ஏகோபித்த பலத்தை நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் பிரதிபலித்துக் காண்பித்திருக்கிறது.

தென்னிலங்கையின் ஏனைய மாகாணங்களைப்போன்று வடக்கிலும் தனது கையை ஓங்கச்செய்வதற்காக அங்கு தன்னோடிணைந்த கட்சிகளுடன், குறிப்பாக ஈழ மக்கள் ஜனநாயக

கட்சியுடன் (ஈ. பி. டி. பி.) இணைந்து அரசு தரப்பு அங்கு தேர்தலை வெல்ல பகீரத பிரயத்தனத்தை மேற்கொண்டது. தேர்தலை அண்மித்து வடக்கே பாலங்கள் திறக்கப்பட்டன. கிளிநொச்சிவரை ரயில் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த காணிகள், வீடுகள் ஆகியவையும் வடக்கே சில பிரதேசங்களில் அவற்றின் உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டன. அரசாங்கத்தின் அனைத்து அமைச்சர்களும் வடக்கே முகாமிட்டிருந்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அரச தரப்புக்கு ஆதரவாக இராணுவமும் பிரச்சார வேலைகளில் பின்னணியில் நின்றது.

ஆயினும், அரசாங்கதத்தின் அனைத்து நேரடியான மற்றும் மறைமுகமான தேர்தல் வியூகங்களையெல்லாம் முறியடித்து, வடபகுதி மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை சுடர்விட்டெரியவைத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்ததையடுத்து தமிழினத்தையே வெற்றிகொண்டு விட்டதுபோன்ற மமதையிலேயே அரசு தனது நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கில் மேற்கொண்டுவந்தது. ஆனால், கிழக்கில் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி'விடும் அரசியல் நடவடிக்கையை மேற்கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உதவியோடு ஆளுந்தரப்பு தனது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. அதுபோலவே, வடக்கிலும் ஈ. பி. டி. பி. யுடன் இணைந்து தனது திட்டங்களை நிறைவேற்ற அரசு முயற்சித்தது. ஆனாலும், தாம் ஏமாளிகளோ அல்லது கையாலாகாத்தனமானவர்களோ அல்லர் என்பதை வடபகுதி மக்கள் நிரூபித்துள்ளனர்.

வடக்கே மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் பல முக்கிய அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றவண்ணமே இருந்தன. வட மாகாண சபைக்கான தேர்தலைப் பொறுத்தவரை பல சவால்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்கொண்டது.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் உள்கட்சி முரண்பாடுகள் அங்கத்துவ கட்சிகளிடையே நிலவின. தமிழ் தேசிய கூட்டமைப்பு நிலை தளர்ந்து விடுமோ என்ற நிலையும் காணப்பட்டது. வட மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு தொடர்பாகவும் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் தோன்றியிருந்தன. எனினும், இவை யாவற்றையும் மிக சாதுரியமாகவும் வெற்றிகரமாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சமாளித்திருந்தார்.

அரசியல் சார்பற்ற, அதேசமயம் நீதித்துறையில் உயர் நீதிமன்ற நீதியரசராகவிருந்த சி. வி. விக்னேஸ்வரன் வட மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக இரா. சம்பந்தனால் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் நிலவிய முரண்பாடகள் முடிவுக்கு வந்தன. இவ்விவகாரத்தில், பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான மாவை எஸ். சேனாதிராசாவின் விட்டுக்கொடுப்பு வரவேற்கப்படவேண்டியதே. அவரே முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தப்படவேண்டும் என்ற வற்புறுத்தல் கட்சி மட்டத்தில் வலுப்பெற்றிருந்தவேளையில் சேனாதிராசாவே முன்வந்து விக்னேஸ்வரனுக்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமை, முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு ஆகிய இரண்டிலும் சம்பந்தன் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்திய பெருமைக்குரியவரானார்.

வட மாகாண சபைக்கான தேர்தல், நீண்ட நாள்களுக்குப் பின்னர் வடக்கே ஒரு தேர்தல் திருவிழாவை உருவாக்கிவிட்டிருந்தது. ஆயினும், அரசுதரப்பு அச்சுறுத்தல்கள், மிரட்டல்களிலும் ஈடுபட்டது. அரசுதரப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக இராணுவத்தினரும் தமது கைவரிசையைக் காண்பித்திருந்தனர். ஆயினும், வடபகுதி மக்கள் அச்சுறுத்தல்களுக்கோ அல்லது வார்த்தை ஜாலங்களுக்கோ, அபிவிருத்தி, புனர்நிர்மாணம் என்ற ரீதியிலான அரசின் திசைதிருப்பல்களிலோ சோரம் போகக் கூடியவர்கள் அல்லர் என்பதனை தமது தேர்தல் தீர்ப்பின்மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

வடபகுதி தேர்தல் முடிவுகள் நாட்டின் ஏனைய பகுதி மக்களிடையேயும் ஜனநாயகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஏனெனில், வடக்கே தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டதைக் குறிப்பிட்டே அரசதரப்பு தென்னிலங்கையில் தனது தேர்தல் வெற்றிகளை கடந்த காலங்களில் ஈட்டிவந்துள்ளது. இதுதவிர, தமக்கு எதிரான அரசியல் சக்திகளை விலைகொடுத்து வாங்கியது. குறிப்பாக, ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பல உறுப்பினர்களை அரசு தன்பக்கம் ஈர்த்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருப்போரையும் பதவிகளை வழங்கி அரசு தனது பக்கம் வைத்துள்ளது.

இந்நிலையில், ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் நகர்வுகளால் தென்னிலங்கை மக்கள் பேசாமடந்தைகளாக்கப்பட்டுள்ளதையும் அவர்களது ஜனநாயக வேட்கை மழுங்கடிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். இதனால், வட மாகாணசபைத் தேர்தல் ஜனநாயகத்தின் பற்றுறுதியை வெளிப்படுத்தியிருப்பதாகவே கருதப்படுகிறது. தென்னிலங்கை மக்கள் அரசின் ஜாலங்களில் தங்களை உணரவும் இத்தேர்தல் வழிசமைப்பதாக நம்பப்படுகிறது.

வட மாகாண சபையைப்பொறுத்தவரை அதன் செயல்பாடுகள் பல்வேறு விதத்திலும் இலங்கையில் மட்டுமன்றி, பிராந்திய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அவதானிக்கப்படுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச சமூகம் மற்றும் இந்திய அரசின் அழுத்தம் என்பன காரணமாகவே வட மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டது. இலங்கையில் போரினால் சின்னாபின்னப்பட்டுப் போயிருந்த வட மாகாணத்தில் ஜனநாயகம் மீண்டும் துளிர்விடுவதையே முழு உலகும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம்செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைத் தலைவி நவநீதம் பிள்ளை இலங்கை அரசு சர்வாதிகாரப் போக்கில் செயல்படுவதாக ஜெனிவாவில் வெளியிட்ட தனது வாய்மூல அறிக்கையில் தெரிவித்திருந்தார். இந்நிலையில், இலங்கையில் வட மாகாணத்தில் நிகழ்ந்த தேர்தல் முடிவுகள், ஓங்கி ஒலித்த ஜனநாயகத்தின் குரலாகவே விளங்குகிறது.

எதிர்பார்த்ததைவிட 30 ஆசனங்களுடன் பெரும்பான்மை பலத்துடனும் சட்ட ரீதியான அறிவார்ந்த முதலமைச்சர் ஒருவரின் தலைமையின்கீழும் இயங்கவுள்ள மாகாண சபை, அரசுடனான சதுரங்கத்தை ஆரம்பிக்கிறது. ■

## தெலங்கானா புது மாநிலம்:

# ஆதரவும் எதிர்ப்பும்

**தமிழகத்தையும் மூன்று மாநிலங்களாக்குவதற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன**

எஸ். கோபாலகிருஷ்ணன்

'சீமாந்திரா ஸ்தம்பித்தது...' நாளிதழ்களில் இப்போது இடம் பெறும் தலைப்புச் செய்திகள் இப்படித்தான் இருக்கின்றன. ஆந்திரா தெரியும்; ஆனால், அதென்ன சீமாந்திரா?


தெலுங்கு மொழியை தாய்மொழியாகக்கொண்ட பகுதிகளை ஒன்றிணைத்து, ஆந்திர பிரதேசம் என்ற மாநிலம் உருவாக்கப்பட்டது. 1953இல் உருவான ஆந்திர மாநிலத்தின் ஒரு பகுதி, நிஜாம் மன்னர்களின் ஆளுகைக்கு உள்பட்டிருந்த தெலங்கானா. பிரித்தானியர்களின் ஆளுகைக்கு உள்பட்டிருந்த மதராஸ் மாகாணத்தில் இருந்த ஆந்திர பிரதேசம் மற்றொரு பகுதி. இதில், தெலங்கானாவைப் பிரித்துவிட்டால், எஞ்சியுள்ள ஆந்திராவை ராயலசீமா, கடலோர ஆந்திரா என்று இரண்டாகப் பிரிக்கலாம். இவ்விரண்டையும் ஒன்றிணைத்து, 'சீமாந்திரா' என்று வழங்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்தை தெலங்கானா, சீமாந்திரா என்று இரண்டு மாநிலங்களாகப் பிரிப்பதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதனைத் தொடர்ந்து, இப் பிரிவினையை எதிர்ப்பவர்கள் போராட்டக் களத்தில் குதித்துள்ளார்கள்.

1950களில் இந்திய நாடு மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதிலிருந்தே தெலங்கானா பகுதி மக்கள் தனி மாநிலக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிவருகிறார்கள். பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் நாங்கள் வேறுபட்டவர்கள்; நாங்கள் பேசும் தெலுங்கும் ஆந்திராவில் பேசப்படும் தெலுங்கும் வெவ்வேறானவை; வளர்ச்சி திட்டங்கள், அதிகார மையத்தில் உயர் பதவிகளுக்கு ஆள்களைத் தேர்ந்தெடுத்தல் என அனைத்திலும் தெலங்கானா மக்களுக்கு துரோகம் இழைக்கப்படுகிறது; தெலங்கானாவின் பல்வேறு பகுதிகள் இன்னமும் வளர்ச்சியடையாத நிலையிலேயே உள்ளன என்று, தனி மாநில கோரிக்கையை முன்வைக்கும் தெலங்கானா பகுதி மக்கள் வாதிடுகிறார்கள்.

தொடக்கத்திலிருந்தே, விருப்பமில்லாத கணவன், மனைவி இணைந்திருப்பதைப்போல் இருந்த தெலங்கானாவும் ஆந்திராவும் பிரிவதற்கான போராட்டங்கள் நடந்துவருகின்றன. 1970களில் தீவிரமடைந்த இந்தப் போராட்டங்கள் கடந்த சில ஆண்டுகளில், மத்திய அரசு ஏதேனும் செய்தாகவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்தித்தன. 2009இல் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் அரசு தெலங்கானா பிரச்னைக்கு சுமுகமான தீர்வை முன்வைப்பதாக உறுதியளித்தது. அதன்படி, ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, ஆறு பரிந்துரைகளை அக் குழு முன்வைத்தது. அதனடிப்படையில், கடந்த ஜூலை 30ஆம் தேதி, இந்திய நாட்டின் 29ஆவது மாநிலமாக தெலங்கானா உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆந்திர மாநில தலைநகரான ஹைதராபாத், தெலங்கானா பகுதியில் அமைகிறது. ஆனால், அடுத்த பத்து ஆண்டுகளுக்கு தெலுங்கானா, சீமாந்திரா ஆகிய இரு பகுதிகளுக்கும் ஹைதராபாத் நகரமே தலைநகராக விளங்கும் என்று அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்கட்சிகளும் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துவிட்ட நிலையில், அண்மையில் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலையும் இந்தத் தீர்மானம் பெற்றுவிட்டது.

தெலங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கு நிகராக, ஆந்திர மாநிலத்தைப் பிரிக்கக்கூடாது என்பதற்கான போராட்டங்களும் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. தெலங்கானா குறித்த அறிவிப்பு வெளியானது முதல், சீமாந்திரா (ராயலசீமா, கடலோர ஆந்திரா) பகுதிகளில் பல்வேறு வகையான போராட்டங்கள் வெடித்துள்ளன. சமஇக்கிய ஆந்திரா (ஒருங்கிணைந்த ஆந்திரா) என்ற கோரிக்கையுடன் போராடும் இவர்களது போராட்டத்தில் கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்க ஊழியர்கள், அரசியல் கட்சித் தொண்டர்கள் ஆகியோர் பங்கேற்கிறார்கள். ஒரே மொழி பேசும் மக்களை இரு மாநிலங்களாகப் பிரிப்பதை எதிர்க்கும் இவர்களின் போராட்டத்துக்கு முக்கிய காரணம், ஹைதராபாத். ஆந்திரம் கண்டுள்ள வளர்ச்சி அனைத்தும் ஹைதராபாத்திலேயே தேங்கியுள்ளது. தெலங்கானா பிரிக்கப்பட்டால், காலப்போக்கில் எஞ்சியுள்ள ஆந்திர பகுதிகள் பின்தங்கிவிடும் என்பது இவர்களின் மையவாதம்.





பிளவுபட்டிருக்கின்றன. இந்நிலையில், தெலங்கானா மாநிலத்தை தனியாக பிரித்துவிட்டால் அந்தப் பகுதியில் உள்ள மொத்த வாக்குகளையும் அறுவடை செய்துவிடலாம் என்று காங்கிரஸ் கணக்குப்போடுகிறது என்று கூறப்படுகிறது. தெலங்கானா பிரிவினை தவிர்க்கமுடியாதது என்றால், ஆந்திரத்தின் மற்றைய பகுதிகளில் வாழும் மக்களுக்கு அதனைப் புரியவைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மொழிவாரி தேசிய இனங்களை தனி மாநிலத்தவராக்குவதற்காக வாதிடுவோர், தெலங்கானா பிரிவினையை பெரிதாக ஆதரிக்கவில்லை. தெலுங்கு தேசிய இனத்தை பிரித்தாளும் செயலாகவே அவர்கள் இதனைப் பார்க்கிறார்கள்.

தெலங்கானா பிரிவினையையடுத்து, மற்றைய இந்திய மாநிலங்களும் பிரிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. மேற்கு வங்காளத்திலிருந்து தனி மாநிலமாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற கூர்க்காலாந்து மக்களின் போராட்டம் வலுப்பெற்றுள்ளது. உத்தர பிரதேச மாநிலத்தை நான்கு சிறு மாநிலங்களாக பிரிக்கும் கோரிக்கையும் முன்வைக்கப்படுகிறது.

தமிழகத்தை பிரிக்கவேண்டும் என்றும் சில அமைப்புகள் போராடிவருகின்றன. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் ராமதாஸ், வட தமிழகத்தைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துவருகிறார். மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் சேதுராமன், தென் தமிழகத்தைப் பிரித்துக் கேட்கிறார். கொங்கு நாடு முன்னேற்றப் பேரவைத் தலைவர் பெஸ்ட் ராமசாமி மேற்கு தமிழகத்தை தனி மாநிலமாக்கவேண்டும் என்கிறார். சிறிய மாநிலங்கள் சிறந்த நிர்வாகத்துக்கும், தங்குதடையற்ற வளர்ச்சிக்கும் உகந்ததென்பது, தமது கோரிக்கைக்கு இவர்கள் முன்வைக்கும் வாதம்.

ஆனால், இவர்கள் மூவருமே சாதிய சங்கங்களின் தலைவர்களாக இருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவர்கள் தனி மாநிலங்களாக்கக் கோரும் பகுதிகளில் இவர்கள் சார்ந்த சாதியைச் சேர்ந்தவர்களது ஆதிக்கத்துக்காகவே இக் கோரிக்கையை இவர்கள் முன்வைக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ■

திருப்பதி உள்ளிட்ட பல்வேறு முக்கிய நகரங்களுக்கு வாகனப் போக்குவரத்து, குறிப்பாக அரசுப் பேருந்து சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இந்துக்களின் புனித தலமான திருப்பதி பல நாள்களாக வெறிச்சோடிக் காணப்படுகிறது. இதுதவிர, சாலையில் செல்லும் தனியார் வாகனங்கள் இடைமறித்து தாக்கப்படுகின்றன. மத்திய அரசில் அங்கம்வகிக்கும் காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்களின் வீடுகள் சூறையாடப்படுகின்றன. மின்துறை ஊழியர்கள் பந்த் போராட்டம் அறிவித்ததால், பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மின்தடை ஏற்பட்டதில் ரயில் போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளானது.

ஆந்திரபிரதேசத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமா கடிதத்தை பிரதமரிடம் அளித்துள்ளார்கள். மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பல்லம் ராஜு, ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரஜா ராஜ்யம் கட்சியின் தலைவரும் சுற்றுலாத் துறை (மாநில) அமைச்சருமான நடிகர் சிரஞ்சீவி ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

இத்தனை பிரச்னைகளையும் கிளப்பிவிட்டிருக்கும் தெலங்கானா பிரிவினை தேவையானதுதானா? தேவைதான் என்றாலும், அது சரியானா நேரத்தில் அறிவிக்கப்பட்டு, முறையாக கையாளப்பட்டுள்ளதா?

மாறுபட்ட பொருளாதார, கலாசார பின்னணியிலிருந்து வந்தவர்கள் என்பதைவைத்து நோக்கும்போது, தெலங்கானா பிரிவினை தவிர்க்க முடியாதது என்றே தோன்றுகிறது. ஆனால், தெலங்கானா பிரிவினைக்கு அரசு இப்போது முடிவெடுத்ததில் அரசியல் காரணங்கள் இல்லாமலில்லை. 2014இல் நாடாளுமன்ற தேர்தல் வரவிருக்கிறது. ஆந்திர மாநில வாக்குகள் காங்கிரஸ், பாரதிய ஜனதா, இடதுசாரிக் கட்சிகள் ஆகிய கட்சிகளுக்குள்

## கட்சிகள் பலப்பரீட்சை

# அமெரிக்காவின் உலக அச்சுறுத்தல்

**அரசியல் கட்சிகளின் பிடிவாதத்தில் ஏற்பட்டுள்ள அரசின் முடக்கநிலை, சர்வதேச சந்தையிலும் பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உணரப்படுகிறது**

**சிறீதரன்**

அமெரிக்காவின் அரசியல் கட்சிக்களுக்கிடையேயான குடுமிபிடிச் சண்டையில் முழு உலகுக்கும் மூச்சுத் திணறல் ஏற்படும் அபாயம் உருவாகலாம் என்ற எச்சரிக்கை அனைத்துலக மட்டத்தில் வெளிவரத்தொடங்கியிருக்கிறது. அமெரிக்காவில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காணத் தவறினால் உலகளாவிய பொருளாதாரம் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டின் லகார்டேவும் எச்சரித்திருக்கிறார். அமெரிக்காவில் அரசு முடக்கப்பட்டிருக்கும் நிலை தொடரும் பட்சத்தில் அனைவரும் பாதிப்படைய நேரிடும் என்று பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளும் கவலை வெளியிட்டுள்ளன.

குடியரசுக் கட்சியுடனான மோதல் காரணமாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பிலிப்பைன்சில் நடைபெற்ற ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளாது தவிர்த்தமை உலக பொருளாதாரத்தின் முக்கிய பங்காளிகளான ஆசிய பசிபிக் நாடுகளின் அடுத்த கட்ட பொருளாதார அபிவிருத்தி தொடர்பான முடிவுகளிலும் நகர்வுகளிலும் தேக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அதிபர் ஒபாமாவுக்கு வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் குடியரசுக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவாக அமெரிக்க அரசு முடக்கமடைய, நிதிச் சந்தையும் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. தொடர்ந்தும் இறுக்கமடைந்துசெல்லும் நெருக்கடிகளின் மத்தியில் கடன் தொகையை வரையறைசெய்வது குறித்து இணக்கப்பாட்டைக் காணத்தவறும் பட்சத்தில் அமெரிக்கா நிதியின்றி செயல்படும் நிலையும் காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் எச்சரிக்கையை அமெரிக்க திறைசேரியும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், 2008இல் ஏற்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடியைவிட மிக மோசமான விளைவுகளை இதனால் எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவித்துள்ளது. அதிபர் பராக் ஒபாமா எதிர்கொள்ளும் அதி உச்ச கட்ட மோதலாக தற்போதைய சூழ்நிலை கருதப்படுகிறது.

அதிபர் ஒபாமா கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அறிவித்திருந்த சுகாதார காப்புறுதி திட்டத்துக்கு அமெரிக்க செனற் சபை ஒப்புதல் அளித்திருந்ததைத் தொடர்ந்து இந்த திட்டம் உள்பட ஏனைய பல்வேறு திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டு பிரேரணை மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வந்தது. ஒபாமாவின் புதிய சுகாதார காப்புறுதி திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று குடியரசுக் கட்சி தனது பலத்தைக் காண்பித்ததனால் ஏற்பட்ட நிலைமைகளில் தற்போதைய நெருக்கடி ஏற்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் குடியரசுக் கட்சி கொண்டிருக்கும் அறுதிப் பெரும்பான்மை பலத்தினால் ஜனநாயக கட்சி அதிபரான ஒபாமாவின் திட்டத்தை அது இலகுவாக முடக்கியது. இவ்விரு கட்சிகளுக்கிடையிலான மோதலின் தீவிரத்தினால் 'ஷட் டவுண்' என்று அழைக்கப்படும் அரசு முடக்க நிலை அறிவிக்கப்பட்டு, நாட்டு நிர்வாகம் பரவலாக முடக்கப்பட்டது. இதனடிப்படையில், முக்கியத்துவமற்ற அரச நிறுவனங்களான தேசிய பூங்காக்கள், அருங்காட்சியகம் உள்பட பல அரசு நிறுவனங்கள் கடந்த முதலாம் தேதிமுதல் மூடப்பட்டன. சுமார் பத்து லட்சம் பணியாளர்கள் ஊதியமின்றி கட்டாய லீவில் செல்ல நேரிட்டது.

உள்நாட்டு நிர்வாகமும் அன்றாட இயல்பு வாழ்வும் அமெரிக்காவில் பாதிக்கப்பட்டிருக்க, உலகின் தலைமை நாடு என்ற வகையில் அனைத்துலக சந்தையும் பொருளாதாரமும் அதன் தாக்கத்தை அநுபவிக்கத் தலைப்பட்டிருப்பதனால் இந்த விவகாரம் தற்போது அனைத்துலக நெருக்கடியாக அவதானிக்ககப்படுகிறது.

எனினும், இந்த விடயத்தில் குடியரசுக் கட்சியினருக்கு அடிபணியப்போவதில்லை என்று திட்டவட்டமாக அதிபர் ஒபாமா மறுத்துவருவது நிலைமையை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது. அமெரிக்க அதிபராக ஒபாமா முதன்முதலாக பதவியேற்ற நாளிலிருந்தே குடியரசு கட்சியினர் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்திவந்தபோதிலும் அரசை செயல்பட முடியாத அளவுக்கு முடக்கிப்போடும் நிலை ஏற்பட்டதில்லை என்று அமெரிக்க மக்களில் பெரும்பாலானவர்கள் குடியரசு கட்சியின் நடவடிக்கைகளில் அதிருப்தி வெளியிடுகின்ற அதேவேளை, நிலைமையை முடிவுக்கு கொணர்வதற்கு ஒபாமா தரப்பு முன்வரத் தவறுகிறது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்தும், மோதலில் உள்ள இரண்டு தரப்பினருக்குமிடையே அதிகார பூர்வமான சமரச பேச்சவார்த்தைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு



கிட்டக்கூடிய அறிகுறிகள் எதுவும் தென்படவும் இல்லை. எனினும், இந்த நெருக்கடி தற்காலிகமானது என்றும் விரைவில் அரச முடக்கம் நீங்கிவிடும் என்றும் ராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி உறுதிபடக் கூறி, மக்களை சமாதானப்படுத்த முயற்சிக்கிறார்.

பொறுப்போடும் புரிந்துணர்வுடனும், ஜனநாயக விழுமியங்களை மதித்தும் அரசியலை நகர்த்திவந்த அமெரிக்காவின் பிரதான இரண்டு கட்சியினருக்குமிடையே தற்போது ஏற்பட்டிருக்கும் பாரிய முரண்பட்ட நிலையை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய பெரும் பொறுப்பு மக்கள் சேவையில் தம்மை ஈடுபடுத்தியிருக்கும் அனைத்து தரப்பு அரசியல் கட்சியினருக்கும் உண்டு என்பதே இந்த விவகாரத்தில் அனைத்து தரப்பினரதும் எண்ணமாகும். குறிப்பாக, நெருக்கடிக்கு காரணமான ஜனநாயக மற்றும் குடியரசு கட்சியினருக்கு இக் கடப்பாடு அதிகம் உண்டு என்பதே பலரது வாதம்.

ஆனால், அரச இயந்திரம் முடக்கப்பட்டமைக்கு ஜனநாயக கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கும் நிலையே நீடிக்கிறது.

அமெரிக்க குடியரசு கட்சிக்குள் தீவிரமாக செயல்படும் பழமைவாத குழுவே இந்த நெருக்கடிக்கு காரணம் என்றும் நாடு கடனில் மூழ்கும் அபாயம் ஏற்படுவதையும் பொருள்படுத்தாது, அதனை அனுமதிப்பதற்கு விருப்பம்கொண்டுள்ள வகையிலேயே அவர்களது நடவடிக்கை அமைவதாகவும் பராக் ஒபாமா குற்றம்சாட்டுகிறார். முடக்கப்பட்ட அரச இயந்திர செயல்பாட்டை மீண்டும் இயக்க உதவுவதற்கு நிபந்தனையாக தனது சுகாதார கவனிப்பு சீர்திருத்த திட்டத்தை குழிதோண்டிப் புதைக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் பராக் ஒபாமா சூளுரைத்தவாறு தனது நிலையில் பிடிவாதமாக உள்ளார்.

பராக் ஒபாமாவின் அல்லது அவரது ஜனநாயக கட்சியின் முக்கிய திட்டமான சுகாதார சீர்திருத்த சட்டத்தை கைவிடுமாறு வலியுறுத்துவதே ஒபாமா நிர்வாகத்துக்கு சீற்றத்தை ஏற்படுத்தி, சமரசத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலையை உருவாக்குகிறது.

மக்கள் பிரதிநிதிகள் சபை அல்லது காங்கிரசில் பெரும்பான்மையைக் கொண்ட குடியரசு கட்சி, ஒபாமா நிர்வாகம் தேவையான நிதியை பெற்று இயங்குவதற்கு ஏதுவாக கடன்பெறும் வரையறையை அதிகரிப்பதற்கு உதவுவதற்கு அல்லது வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஆதரவு வழங்குவதற்கு நிபந்தனை விதித்திருப்பதனாலேயே நெருக்கடிக்கு தீர்வு காணப்பட முடியாதிருக்கிறது.

அமெரிக்க அரச நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கும் நிலையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு குடியரசு கட்சியினர் கப்பம் கோருவதாக பராக் ஒபாமா காட்டமாகவே கொதிக்கும் அதேவேளை, பாரிய செலவு கொண்ட சுகாதார கவனிப்பு சட்டத்தை கைவிடாத அல்லது ஒத்திப் போடாதவரை புதிய வரவு செலவு திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க முடியாது என குடியரசு கட்சியினர் பதிலுக்கு வலியுறுத்திக்கொண்டிருப்பது அமெரிக்க அரசியலின் தற்போதைய நெருக்கடி நிலை.


இந்த நிலையில் கடன்பெறவேண்டிய தொகை அதிகரிக்கப்படாவிடின் நடப்பு மாதத்துக்குரிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு போதிய நிதி கிடைக்காத நிலை அமெரிக்க அரசுக்கு ஏற்படுவதும் தவிர்க்கமுடியாததாகிவிடும். ஆனால், அரச இயந்திரம் முடக்கப்பட்டிருக்கும் நிலையிலும் ஏட்டிக்குப் போட்டியாக முரண்டுபிடிக்கும் அமெரிக்க தலைவரும் குடியரசு கட்சியும் பேச்சுக்களில் ஈடுபட்டு சமரசம் ஏற்படமாட்டாதா என்பதே எல்லா தரப்பிலும் எழும் எதிர்பார்ப்பு.

இந்த மாத நடுப்பகுதியில் நடப்பு மாத கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய நிலையில் அதற்கான போதிய நிதி ஒதுக்கீடு இல்லாது தடுமாறும் ஒபாமா நிர்வாகம், கொடுப்பனவுக்கான நாள் நெருங்கநெருங்க தமது பிடிவாதத்திலிருந்து இறங்கி சமரச பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம்.

ஒபாமா தரப்பு சமரச பேச்சுக்கு இறங்கி வரும்நிலை ஏற்படும் பட்சத்தில் அதனை ஏற்று, அதில் கலந்து கொண்டு நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் மறு தரப்பான குடியரசு கட்சிக்கு ஏற்படும் என்றும் கருதலாம்.

அமெரிக்க தலைவர் விட்டுக்கொடுப்புடன் பேச்சுக்கு முன்வர தயாராகும் வேளையில் அதனை நிராகரிக்க முற்பட்டால், மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்க நேரிடும் என்ற இக்கட்டான சூழ்நிலை குடியரசு கட்சிக்கு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகி, சமரச பேச்சுக்கள் இடம்பெறும் வாய்ப்புக்கள் தோன்றி, தகுந்த தீர்வு ஏற்படலாம் என்றே எதிர்பார்க்கலாம். ■

# நிலைக்கும் கலவரம்



**எகிப்தின் இஸ்லாமிய அடையாளத்தை இல்லாதொழிக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வகையில் அமையப்போகும் சட்டத்திருத்தம், நாட்டில் நீடித்த அமைதியின்மைக்கு வழிகோலும்**

ராஜாஜி





அ அதிகாரபீடத்தை நீண்ட காலமாக தக்க வைத்திருக்கும் ஆட்சியாளரை அகற்றுவதன் மூலம்மட்டும் அந் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டிவிடமுடியாது என்ற வரலாற்று போதனையை, எகிப்தில் நடைபெறும் தற்போதய சம்பவங்களும் நிரூபிக்கின்றன.

எகிப்தில் நீண்டகாலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அதிகாரத்தை ஏற்று முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அதிபராகவிருந்த ஹோஸ்னி முபாரக்கை பதவியிலிருந்து நீக்கியிருந்தபோதிலும், ஆட்சி மாற்றத்துக்கான மக்கள் புரட்சி இன்று வேறொரு பரிமாணத்தில் தலைதூக்கி, கலவரம் நிலைக்கும் மண்ணாகியிருக்கிறது எகிப்து.

ஹோஸ்னி முபாரக்குக்கு எதிரான புரட்சியின் பின்னர் அதிகாரப் பொறுப்பில் அமர்ந்த முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் முஹமட் மோர்சிக்கு எதிரான போராட்டம் ஒருவகையில் நாட்டை இரண்டு அணிகளுக்கு எதிரான போராட்டக் களமாகவும் பெரிதும் மாற்றியிருக்கிறது. அதிகார மோதல் களத்தில் உள்ள அணிகளுடன் நேரடியாகவும் மறைமுகமாவும் இணைந்திருக்கும் அனைத்துலக அதிகார சக்திகளின் தலையீடும், நிலைமை மோசமடைந்து செல்லுவதற்கான துணைக்காரணங்கள்.

இறைவனே அதிகாரத்தை வழங்கியதாகக்கூறி ஆட்சி செலுத்திவந்த மன்னர்களுக்கு எதிரான எகிப்தியர்களின் மக்கள் போராட்டம், மிகநீண்ட வரலாறு கொண்டது. எனினும், 1882இல் ஒட்டமான் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த கேணல் அகமத் உரபி தலைமையிலான மக்கள் போராட்டத்தை இன்றைய தஹ்ரிர் சதுக்க போராட்டத்துக்கு முன்னோடியானதாக கருதமுடியும்.

முஹமட் மோர்சியின் ஆட்சியிலும் பொருளாதார சீரழிவு, வறுமை, வேலையின்மைபோன்ற விவகாரங்கள் தீவிரமடைவதாக தொடங்கிய மக்கள் போராட்டம் உச்ச கட்டத்தையடைந்து, இராணுவ புரட்சியொன்றில் அவரது ஆட்சி கலைக்கப்பட்டது.

இரண்டு அணிகளாக எகிப்து பிளவுபட்டு, மோர்சிக்கு ஆதரவாக அவரது ஆட்சியை மீண்டும் உறுதிப்படுத்துமாறுகோரி கிளர்ந்த ஆர்பாட்டக்காரருக்கும் இராணுவத்துக்குமிடையே மோதல் மூண்டது. ஆயிரத்துக்கும் அதிகமான மோர்சி ஆதரவாளர்கள் பலியானதுடன், தடையைமீறி போராட்டம் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் இன்னுமோர் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எகிப்திய முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் ஆன்மீகத் தலைவரும் முதல்நிலை வழிநடத்துநருமான மொஹமெட் எல் படீயையும் இராணுவ ஆட்சியாளர்கள் இலக்குவைத்து கைதுசெய்தனர். கைதானவர்களில் எகிப்திய முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் துடிப்பான இளநிலைத் தலைவர்களும் அடங்குகின்றனர்.

மோர்சி ஆதரவு ஆர்பாட்டங்களை முறியடிப்பதற்கு, மொஹமெட் படீக்கும் மக்களுக்குமிடையேயான தொடர்பை துண்டிப்பதற்காக இராணுவ ஆட்சியாளர்கள் இந்த நகர்வை மேற்கொண்டபோதிலும், மொஹமெட் படீ கைதுசெய்யப்பட்டுள்ளமையால் பதற்றநிலை அதிகரித்து, மேலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்க தொடங்கின. ஆனால், இஸ்லாமிய சகோதரத்துவ கட்சியின் தலைவரான முஹமட் மோர்சியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, இராணுவம் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றியிருக்கும் நிலையும், மோர்சி ஆதரவாளர்களுடைய போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவம் மேற்கொண்டுவரும் தீவிர நகர்வுகளும், 60 ஆண்டுகளுக்கு முன்னர் புரட்சிச் சதிமூலம் ஆட்சியை கைப்பற்றி, பின்னர் அதிபராக பதவியில் அமர்ந்துகொண்ட ஜெனரல் காமல் அப்துல் நாசரின் காலத்துக்கு எகிப்து திரும்பலாம் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இதனை உறுதிப்படுத்தும்விதத்தில், முதன்முதலாக மக்களால் தெரிவான எகிப்தின் ஆட்சியாளர் என்று வர்ணிக்கப்படும் மொஹமட் மோர்சி நடை முறைப்படுத்திய அரசியல் சாசனத்தை அகற்றும் நடவடிக்கையில் இராணுவ ஆட்சியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அத்துடன், எகிப்தின் நிர்வாகத்தில் இஸ்லாமிய மதவாதிகளின் தலையீட்டைக் குறைக்கும்வகையில் சட்டத்தை திருத்துவது தொடர்பான திருத்தமூலம் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பின் மூத்த தலைவர்களும் துடிப்பானவர்களும் இலக்குவைக்கப்பட்டு சிறைவைக்கப்பட்டிருக்கும் நிலையில், ஏனையவர்கள் தம்மை பாதுகாப்பதற்கு தலைமறைவு வாழ்க்கையைத் தொடருகையில், தனக்கு சாதகமான அரசியல் சாசனத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன்




இராணுவ ஆட்சியாளர்கள் நகர்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். எகிப்தின் இஸ்லாமிய அடையாளத்தை இல்லாதொழிக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வகையில் அமையப்போகும் சட்டத்திருத்தம், நாட்டில் நீடித்த அமைதியின்மைக்கு வழிகோலும் என்ற எச்சரிக்கையும் ஒலிக்க ஆரம்பித்துள்ளது.

இஸ்லாத்தை எகிப்தின் அதிகார மையத்திலிருந்து அகற்றும் நடவடிக்கை ஒருபோதும் வெற்றியளிக்காது என்றும், முட்டாள்தனமான முயற்சியில் இராணுவ ஆட்சியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் அடிப்படை இஸ்லாமியவாதிகளின் கண்டனங்களும் வெளியாகிவருகின்றன.

ஆனால், இவற்றைக் கருத்தில் கொள்ளாது, அடுத்த நான்கு மாத காலத்துக்குள் அரசியலமைப்பு திருத்த சட்டத்தை நிறைவேற்றி, தொடர்ந்து நாடாளுமன்ற மற்றும் அதிபர் தேர்தலை நடத்துவது இராணுவ ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரல்.

எவ்வாறாயினும், இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பின் பல்வேறு வகையான எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ள இராணுவ ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் எதிர்கொள்ளவே நேரிடும். இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பின் பெரும் எண்ணிக்கையானவர்களைத் தலைமறைவு வாழ்க்கைக்கு விரட்டியிருக்கும் இராணுவ ஆட்சியாளர்கள் அவர்களின் மீள்வருகையை சந்திப்பது கடினமாகலாம்.

அதிகார முறைகேடுகளை இல்லாதொழித்து, சித்திரவதைகளையும் துன்புறுத்தல்களையும் அறவே மறுதலித்து, புறக்கணிப்பு காண்பிக்காது சமரசத்துடனும் சமத்துவத்துடனும் மக்களையும் சமூகத்தையும் நேசிக்கும் ஆட்சி அமையும்வரை, எகிப்தில் மட்டுமல்ல எங்குமே உண்மையான மக்களாட்சியை அல்லது ஜனநாயகத்தை நிலைநாட்டுவது கடினமானதே. ■

இங்கிலாந்து

# டயானா மரணம் கொலையா?

## புதிய தகவல்களில் புதிய விசாரணைகள்

**பிரித்தானிய உளவுத்துறையும் அரச குடும்பமும் இணைந்து நடாத்திய அப்பட்டமான கொலை என்று மெகமெட் அல் பயட் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியபோது, புதிய தகவல்கள் அதனை நிரூபிக்குமா?**

சுகுமாரன்



பிரித்தானியாவின் மறைந்த இளவரசி டயானா, தற்போது மீண்டும் செய்தி ஊடகங்களின் பேசுபொருளாகிறார். டயானாவின் மரணம் சம்பவித்து 16 ஆண்டுகள் கழிந்திருக்கும் நிலையிலும், அரச குடும்பத்தினர் அவருடைய பேரக்குழந்தை பிறந்த குதூகலக் கொண்டாட்டங்களில் திளைத்திருக்கும் வேளையிலும் வெளியாகியுள்ள புதிய தகவல் இந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இளவரசி டயானாவினதும் அவரது காதலரான டோடி அல் பயட்டினதும் மரணம் விபத்து அல்ல, அது கொலையே என்ற தகவல் கிடைக்கப் பெற்றதை தொடர்ந்து இது தொடர்பான விசாரணைகளை பிரித்தானிய காவல்துறை ஆரம்பித்துள்ளது.

பிரித்தானிய படைத்துறையின் முன்னைநாள் அதிகாரி ஒருவரின் மனைவியின் பெற்றோரே, டயானா



**திருமண வாழ்வு கசந்திருப்பது தொடர்பாக அவர் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்ததும்,
அரசபரம் பரையினருடன் அதிகார வர்க்கமும்
அதிர்ச்சிக்கு உள்ளானது**

**விமர்சனங்களையும் மீறி புகழின் உச்சத்திலிருந்த டயானா, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டதில் தனது செல்வாக்கை மேலும் உயர்த்திக்கொண்டார்**

வின் மரணம் கொலை என்ற தகவலை பிரித்தானிய காவல் துறைக்குத் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

டயானா மற்றும் டோடி அல் பயட்டினது கொலையை பிரித்தானிய இராணுவத்தை சேர்ந்த ஒருவரே மேற்கொண்டதாக குறித்த இராணுவ உறுப்பினர் தனது மனைவிக்குக் கூறிய தகவல், தற்போது அவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக காவல்துறையின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரெஞ்சு தலைநகர் பாரிசின் செயின் நதிக் கரையோர வீதியால் காரில் பயணித்துக்கொண்டிருந்த டயானாவும் அவரது காதலரான டோடி அல் பயட்டும் விபத்தில் சிக்கி மரணமானதாகவே அறிவிக்கப்பட்டது.

*1997*ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் *31*ம் திகதி நிகழ்ந்த இந்தச் சம்பவம் மறுகணமே அதிர்ச்சியையும் பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருந்தது. பிரிட்டனின் பெரும் செல்வந்தவர்களில் ஒருவரான டோடி அல் பயட்டின் தந்தை, அது விபத்து அல்ல, கொலையே என்று திட்டவட்டமாக கூறிவந்தார்.

விபத்துக்கான காரணங்களுக்கு அப்பால், டயானாவின் மரணம் பிரிட்டனை சோகத்தில் ஆழ்த்தியது. வரலாற்றில் கண்டிராத மக்கள் கூட்டம் வீதியெங்கணும் திரண்டு அஞ்சலி செலுத்தியது.

செய்தி ஊடகங்கள் டயானாவுக்கு வழங்கிய முக்கியத்துவம், இன்னோர் அரச குடும்பத்தவருக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இங்கிலாந்திலும் உலக அரங்கிலும் புகழின் உச்சத்தில் மிதந்த டயானா, ஒப்புவமையற்ற பெரும் கதாநாயாகியாக கொண்டாடப்பட்டார்.

ஆரம்பத்தில் தனது கணவரும் பிரிட்டனின் முடிக்குரிய இளவரசரு மான சார்ள்சை மணமுடித்தபோது, அரச குடும்ப மணமகளாக மக்களின் அபிமானத்ததையும் அவர்களின் மனங்களையும் வென்றெடுத்த டயானா, தனது கணவருடான முரண்பாடுகளையும் மகிழ்ச்சியற்ற திருமண வாழ்க்கையையும் வெளிப்படையாகவே பேசியபோதிலும், தனது செல்வாக்கை பேணுவதில் வெற்றிகண்டார். திருமண வாழ்வு கசந்திருப்பது தொடர்பாக அவர் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்ததும், அரச பரம்பரையினருடன் அதிகார வர்க்கமும் அதிர்ச்சிக்கு உள்ளானது.

செய்தி ஊடகங்கள் வர்த்தக நோக்கிலும் பரபரப்புக்காகவும் டயானா தொடர்பான செய்திகளை முக்கியத்துவப்படுத்திய அதேவேளை, அவரை ஓர் ஒழுக்கக் குறைவான பெண்ணாக சித்தரிக்கவும் தவறவில்லை. இராணுவ அதிகாரி ஒருவருடன் அவருக்கு உறவிருந்ததாகவும், பாகிஸ்தானைச் சேர்ந்த மருத்துவர் ஒருவருடன் காதலுறவு கொண்டிருந்ததாகவும் தகவல்களை வெளியிட்டன.

எனினும், இவை அனைத்தையும் கடந்து, டயானாவின் செல்வாக்கு மக்கள் மத்தியில் பெருகியே சென்றது.

பிரிட்டிஷ் அரச குடும்பப் பெண்கள் கணவனுக்கும் குடும்ப அதிகாரத்துக்கும் கட்டுப்பட்டவர்கள் என்பது பொது நியதியாக மதிக்கப்பட்டு வந்த போது, டயானாவின் மணவாழ்க்கை முறிவும் அதுதொடர்பாக அவரின் துணிச்சலான நேர்காணல்களும், அரச குடும்ப ஒடுக்குமுறைக்கு எதிராக அவரின் கருத்துக்களும் பிரிட்டிஷ் அரச பாரம்பரியத்தில் ஒரு மாறுதலை வெளிப்படுத்தின. இது, பல மட்டங்களில் அவருக்கு ஒரு தனி இடத்தையும் பெற்றுக்கொடுத்தது.

இவ்வாறு, விமர்சனங்களையும் மீறி புகழின் உச்சத்திலிருந்த டயானா, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டதனால் தனது செல்வாக்கை மேலும் உயர்த்திக் கொண்டார்.


பொது வாழ்வில் கூடுதலாக பங்கெடுத்துக்கொண்ட இவர், அரச குடும்ப விவகாரங்களில் தலையிடாததுடன், சச்சரவுகளில் மாட்டிக்கொள்ளாது அமைதியான வாழ்க்கையைத் தொடருவார் என்று கருதியிருந்த பிரித்தானிய அரச பரம்பரைக்கு, டயானா தனது புதிய காதலர் டோடி அல் பயட் என்ற இஸ்லாமியரோடு பகிரங்கமாக தோன்ற ஆரம்பித்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குடன் விளங்கிய டயானா பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் கௌரவம் குறித்தோ, அதற்கு ஏற்படக்கூடிய இழுக்கு தொடர்பாகவோ எந்த கரிசனையுமற்றவராகவும், தனது சொந்த அபிலாசைகளை மட்டுமே கருதுபவராகவும் மாறியிருந்ததையே இஸ்லாமிய காதலருடனான அவரது பகிரங்கமான பிரெஞ்சு விடுமுறை எடுத்துக்காட்டியதாக கருதப்பட்டது.

இந்த நிலையிலேயே, பாரிஸ் நகரின் வீதியில் இடம்பெற்ற விபத்தில் டயானா, அவரது காதலர் டோடி அல் பயட் மற்றும் வாகன ஒட்டுநர் ஆகியோர் உயிரிழந்தனர்.

டோடி அல் பயட்டின் தந்தைக்குச் சொந்தமான பிரபல நட்சத்திர விடுதியில் பணியாளராக கடமையாற்றியவரும் அன்று வாகனத்தை செலுத்திச் சென்றவருமான ஹென்றி போல், அளவுக்கு அதிகமான போதையில் இருந்ததாலேயே விபத்து சம்பவித்து டயானாவும், டோடியும், ஹென்றியும் மரணமடைந்தனர் என்று பிரஞ்சு நீதித்துறை மரணவிசாரணை அறிக்கை வெளியிட்டது.

எனினும், டோடியின் தந்தையான மொகமெட் அல் பயட் இந்த விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. பிரித்தானிய உளவுத்துறையும் அரச குடும்பமும் இணைந்து நடத்



அங்கோலா

திய அப்பட்டமான கொலை என்று அவர் பகிரங்கமாக குற்றஞ்சாட்டினார்.

பதினாறு ஆண்டுகளின் பின்னர், மீண்டும் அவரது குற்றச்சாட்டுக்கு உயிரூட்டப்பட்டுள்ளது. இப்போது கையளிக்கப்பட்டிருக்கும் புதிய தகவல்கள் டோடியின் தந்தையின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துமா என்ற எதிர்பார்ப்பு பரவலாக காணப்படுகின்றபோதிலும், பிரிட்டிஷ் அரசகுடும்பத்துக்கோ இராணுவத்துக்கோ அவதூறு ஏற்படுத்தும் வகையில் விசாரணை முடிவு அமையுமா என்ற கேள்வியும் கூடவே உண்டு. ■


SEMINAR OF
1974

# கீழைத்தேயவியலும் தமிழியலும்

## அடிகளார் ஆற்றிய அரும்பணி

பேராசிரியர் வீ. அரசு
தலைவர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ்ச் செவ்விலக்கியம், இலக்கணம் ஆகியவை உலக வரைபடத்தில் எத்தகைய இடத்தைப் பெறத் தகுதியுடையவை; தமிழியலை வளர்ச்சிடைந்த காலச்சூழலில் உலக நிகழ்வாக கட்டமைக்கும் செயல்பாடுகள் எவை?

இவ்விரு நிலைகளிலும், பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யவேண்டிய தேவை அவரது நுற்றாண்டுகாலத்தில் முதன்மையானது

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் ஆகிய காலங்களில் கீழைத்தேயவியல் ஆய்வு என்பது சமசுகிருதவியல் மற்றும் சிறிய அளவிலான திராவிடஇயல் என்ற போக்கில் நிகழ்ந்ததை அறியமுடிகிறது. தமிழுக்கான இடம் கொடுக்கப்பட்டதாகக் கூறமுடியாது. தமிழ் குறித்த புரிதல் பெரிதும் இல்லாமல் இருந்தது.

1873முதல் நடைபெற்று வரும் அகில உலக அளவிலான கீழைத்தேய மாநாடுகளிலோ, 1919 முதல் நடைபெற்றுவரும் இந்தியக் கீழைத்தேய மாநாடுகளிலோ தமிழ் உரையாடலுக்கு உட்பட்டதாக அமையவில்லை. 1946இல் நடைபெற்ற இந்திய கீழைத்தேயவியல் மாநாட்டில், பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை தலைமை உரையில்தான் முதன்முதல் இத்தன்மை குறித்த கருத்துநிலை முன்வைக்கப்படுகிறது. கி. பி. 1750-1950 என்ற இருநூறு ஆண்டுகாலப் பின்புலத்தில் திராவிட இயலின் ஒரு சிறுபகுதியாக தமிழ் குறித்த பேச்சு இருந்தது. இந்தியா எனில் சமசுகிருதம் என்னும் கருத்துநிலை ஐரோப்பிய - அமெரிக்கர்களால் கட்டமைக்கப்பட்ட கீழைத்தேயவியலின் அடிக்கருத்தாக அமைந்திருந்தது. இந்நிலையை மாற்றும் செயல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வேறு பரிமாணம் பெறும் வாய்ப்பு உருவானது. தமிழ்மொழி தொடர்பான புரிதல்கள் உலக ஏற்புடைமைக்கு ஒரு நூறாண்டு காலம் பிடித்தது. இந்தப் பின்புலத்தில் பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் (1913-1980) அவர்களின் தமிழியல் எனும் புதிய கட்டமைப்பு குறித்த உரையாடலை புரிந்துகொள்வது அவசியமாகிறது. பேராசிரியரின் கீழைத்தேயவியலுக்கு இணையான தமிழியல் கட்டமைப்பை உள்வாங்க கீழ்க்காணும் வகையில் தொகுத்துக்கொள்ள இயலும். அதன் மூலம் தமிழியல் ஆய்வு வரலாற்றில் பேராசிரியரின் வகிபாகத்தைப் புரிந்து கொள்ளமுடியும். இதன்மூலம் உலகம் தழுவிய அளவில் கீழைத்தேயவியல் உரையாடலுக்கு உட்படுத்தப்பட்டதைப்போல், தமிழியல்

வரலாறு உலகம் தழுவிய அளவில் அறியப்பட்ட பாங்கை அறிய உதவும். இந்தப் பின்புலத்தில் சமகாலத் தமிழியல் வரலாற்றையும் புரிந்து கொள்ள இயலும். சமகால தமிழியல் ஆய்வு குறித்த பிரக்ஞைக்கு இவ்வுரையாடல் மிக அவசியமாகிறது.

பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களது தமிழியல் மற்றும் தமிழியல் ஆய்வைப் (*Tamilia and Tamilology*) புரிந்துகொள்ள கீழ்க்காணும்வகையில் தொகுத்துக் கொள்வோம். இதனை இரண்டு அடிப்படைகளில் புரிந்து கொள்வது அவசியம்.

- தமிழ்ச்செவ்விலக்கியம், இலக்கணம் ஆகியவை உலக வரைபடத்தில் எத்தகைய இடத்தைப்பெறத் தகுதியுடையவை; அவை அறியப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் இருக்கும் மரபுகள்; இதைப் போலவே தமிழர் அறமரபு, தத்துவ மரபு ஆகியவை உலகத்தில் உள்ள பிற தேசிய இனங்களின் மரபுகளோடு கொண்டிருக்கும் உறவு, உலகிற்கு அறிவிக்கப்படாமலும் அறியாமலும் இருக்கும் தன்மை.
- மேற்குறித்த தமிழியலை, வளர்ச்சியடைந்த காலச்சூழலில், உலக நிகழ்வாகக் கட்டமைக்கும் செயல்பாடுகள் எவை? அதனை எவ்விதம் நிகழ்த்துவது என்பதற்கான அடிப்படை வேலைத்திட்டங்கள், வெளியீடுகள், நிறுவனங்கள் ஆகிய பிற.

மேற்குறித்த இருநிலைகளிலும் பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யவேண்டிய தேவை, அவரது நூற்றாண்டு தொடர்பான விழாக்கள், கருத்தரங்குகள், ஆய்வுகள் ஆகியவற்றின் முதன்மைப் பொருளாக அமையவேண்டும். இன்றைய தமிழியல் ஆய்வுச் சூழலுக்கு அது ஏதோவொரு வகையில் விழிப்பூட்டுவதாக அமையலாம்.

பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் என்னும் தனிநாயகம் அடிகள் இளமையில் கிறித்தவ சமயம் சார்ந்த படிப்பிலும் ஈடுபாட்டிலும் வாழ்ந்தவர். கிறித்தவ சமயத் தொடர்பு அவருக்கு உலகம் தழுவிய தொடர்பை உருவாக்கித் தந்தது. உலகம் முழுவதும் பயணம் செய்து அவர்பெற்ற அநுபவங்களும் பயிற்சியும் பிற்காலங்களில் தமிழியல் துறை சார்ந்த ஆய்வுப் புலத்தைக் கட்டமைக்க அடிப்படையாக அமைந்தது.

என் இருபத்தோராவது ஆண்டில் ஐரோப்பாவிற்கு நான் முதல்முதல் செல்ல நேரிட்டது. ஐந்து ஆண்டுகள் ஐரோப்பாவிலும் ஈராண்டுகள் இங்கிலாந்திலும், ஓராண்டு வட அமெரிக்கா, தென் அமெரிக்காவிலும், ஒன்பது ஆண்டுகள் மலேசியாவிலும் வாழ்ந்துள்ளேன். மேற்கூறிய பயணங்களோடு மத்திய ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா முதலிய பாகங்களில் பன்முறை சென்றிருக்கின்றேன். பல காரணங்களின் பொருட்டு உலகின் பல நாடுகளில் கல்வி பயின்றும், ஆராய்ச்சியில் ஈடுபட்டும் தமிழ்த்தூது நிகழ்த்தியும் வந்துள்ளேன். (ஒன்றே உலகம்: தனிநாயகம் அடிகள்: 2012: 18)

1945இல் அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் பயிலும் மாணவரானது முதல் 1980இல் அவரது மறைவு வரை, சுமார் ஐம்பது ஆண்டுகள் தமிழியல் தொடர்பான பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். இதன்மூலமே மேலே குறித்தவாறு தமிழியலை வளர்த்தெடுத்தார். 1952 இல் அவர் உருவாக்கிய *`Tamil culture'* இதழ் மூலம், அவர் கட்டமைக்க விரும்பிய தமிழியல் ஆய்வு என்பது, உலக அளவில் நடைபெற்றுவரும் கீழைத்தேயவியல் எனும் சொல்லாடலில் தமிழின் இடத்தை எவ்வகையில் மதிப்பீடு செய்வது என்பதாக அமைகிறது. தமிழ் இலக்கண - இலக்கிய மரபு என்பது உலக இலக்கிய மரபில் பெறுமிடத்தைப் பதிவு செய்ய திட்டமிட்டார். இதற்கு அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெற்ற பயிற்சி உதவியது. எம். லிட். பட்டம் பெறுவதற்காக, தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் உள்ள இயற்கையின் இடத்தை உலக இலக்கியங்களில் பேசப்படும் இயற்கை மரபுகளோடு இணைத்து வெளிப்படுத்தும் பணியைத் தொடங்கினார்.

தமிழ்ச் செவ்விலக்கியங்கள், இயற்கை மரபை எவ்வகையில் இயல்பான வாழ்க்கை மரபாகக் காட்டுகின்றன; செவ்விலக்கியப் பாடல் மரபு என்பதே இயற்கைசார் கவிதை மரபு; காலந்தோறும் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கும் செவ்விலக்கிய இயற்கை மரபாக அமைகிறது; வட்டாரம் சார்ந்த இயற்கை மரபுகள் எவை; உலக இலக்கியங்கள் காட்டும் இயற்கை மரபுகளுக்கும் தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கும் உள்ள உறவு ஆகியவற்றைத் தமது ஆய்வுப் புலத்தின்மூலம் வெளிக்கொண்டுவந்தார். *`Landscape and Poetry'* என்னும் அவரது தமிழ்ச் செவ்விலக்கியம்பற்றிய ஆய்வு, உலக மரபில் தமிழ்ச் செவ்விலக்கியம் பெறுமிடத்தை மதிப்பீடு செய்வதாக அமைகிறது. இதனை அவர் வெளிப்படுத்தும் முறை பின்வரும்வகையில் அமைகிறது.

... அவர் கட்டமைக்க விரும்பிய தமிழியல் ஆய்வு என்பது, உலக அளவில் நடைபெற்றுவரும் கீழைத்தேயவியல் எனும் சொல்லாடலில் தமிழின் இடத்தை எவ்வகையில் மதிப்பீடு செய்வது என்பதாக அமைகிறது. தமிழ் இலக்கண - இலக்கிய மரபு என்பது உலக இலக்கிய மரபில் பெறுமிடத்தைப் பதிவுசெய்ய திட்டமிட்டார்

இன்று நம் தமிழ் நாட்டிற்கு வேண்டியவர் யாரேனின் ஆன்றமைந் தடங்கிய கொள்கைச் சான்றோராகிய ஆராய்ச்சியாளர் பலரே. உலகின் பல்வேறு நாடுகட்குச் சென்றதன் பயனாகவும், பிற மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் ஒருவாறு கற்றறிந்ததன் பயனாகவும், தமிழிலக்கியம், தமிழ்ப்பண்பு, தமிழ்க் கலை, தமிழ் வரலாறு முதலியவற்றை உலகில் எவ்வளவிற்குப் பரப்பவேண்டுமென்று, ஒரு சிறிது உணர்ந்துள்ளேன். ஹோமரின் ஒடிசியையும், வெர்ஜிலின் இளியதையும் மக்கள் போற்றுவதுபோல், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை - ஒப்புயர்வற்ற முத்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளை, உலகம் போற்றுமாறு நாம் செய்தல்வேண்டும். கொன்பூசியஸ், செனக்கா முதலாய நீதி நூல் ஆசிரியர்களை உலக மாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ, அங்ஙனமே திருவள்ளுவரையும் அவர்கள் அறிந்து படிக்குமாறு நாம் செய்வித்தல்வேண்டும். சாபோ, எலிசபெத் பிரௌனிங், சேக்ஸ்பியர் முதலானோரின் காதற் பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவதேபோல், நம் அகத்துறை இலக்கிய நூல்களையும், அன்னார் படித்து இன்புறும் புதிய நாள் உதிக்கவேண்டும். உலக இலக்கியத் திரட்டு *(World Classics)* என்னும் பெருந்தொகை நூல்களில், நம் இலக்கிய நூல்களும் கீழ்த்திசைக் கண்ணுமுள்ள பல்கலைக்கழகங்கள், தமிழ்க் கலைகளின் தனித்தன்மையை உலகிற்கு உணர்த்துமாறு செய்வித்தல்வேண்டும். (சத்திய வேத பாதுகாவலன்: யாழ்ப்பாணம் 1951: தமிழ்த்தூது: கட்டுரைக்கொத்து: ஐந்தாம் பதிப்பு:1998:29)

பேராசிரியர் வெளிப்படுத்தும் இப்பார்வை, உலகச் செவ்விலக்கிய மரபில் தமிழின் இடத்தைப் பதிவுசெய்வதாக அமைகிறது. இவ்வகையான மரபை முன்னெடுக்கும் அவசியம் உருப்பெற்றதற்கான பின்புலத்தையும் மேற்குறித்த கட்டுரையின் தொடக்கத்தில் பேராசிரியர் கூறுவது பின்வருமாறு:

இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின். *Discovery of India* என்றும், *History of Indian Literature* என்றும், பலபடப் புனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப் பார்மின். மாக்ஸ் முல்லர், வின்றர்னிட்ஸ் போன்றவர் முதலாய், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ் விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே தமிழ் இலக்கியத்தைப்பற்றியோ, திராவிட நாகரிகத்தைப்பற்றியோ, ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும் காணக் கிடையா. இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம் திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள், திராவிட மொழிகள் இவற்றையே அடிப்படையாகக்கொண்டவை. ஆயினும், பல்லாண்டுகளாக, நடுவுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின், இன்று இவ்வுண்மையை எடுத்துக்கூறுவதுதானும், மக்கள் மனத்தில் ஐயம் விளைப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக் கூறுதற்குத்தானும் பெரிதும் மனத்துணிவு வேண்டற்பாலதாயிற்று. தமிழராகிய நாமும், இந்திய மொழிகளிலேதானும், நம் தமிழை பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினேம் அல்லேம். (மேற்குறித்த நூல்:1998:16,17)

தமிழ்ச் செவ்விலக்கிய மரபு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலங்களில் கண்டறியப்பட்டது. 1940இல் பேரா. ச. வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியம் - அகராதி முறையில் சார்ந்த பதிப்பு வெளிவந்த நிலையில், அம்மரபு நிலைபேறு கொண்டது. இதனை உலகில் பரவலாக அறியப்படும் நோக்கில் பேரா. சேவியர். எஸ். தனிநாயகம் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம். உலக இலக்கிய மரபில் தமிழ் இலக்கிய மரபின் இடத்தைப் பதிவுசெய்யும் முயற்சியாக இவரது செயல்பாட்டைப் புரிந்துகொள்ளும் தேவையுண்டு. இம்மரபு பின்னர் பேராசிரியர் க. கைலாசபதி *(Tamil Heroic Poetry)* போன்ற பலரின் ஆய்வுகளால் நிலைபேறு கொண்டது. இவ்வுரையாடலுக்கான தொடக்கப் புள்ளிகளைப் பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அவர்களிடம் காணலாம்.

தமிழ்ச் செவ்விலக்கிய மரபு உலக இலக்கிய மரபோடு கொள்ளும்தொடர்பைப் போல், தமிழ் நூல்கள் காட்டும் அறமரபும், தத்துவார்த்த மரபும் உலக அறம் மற்றும் தத்துவ மரபுகளோடு தொடர்பு கொண்டிருப்பதைத் தமது பல்வேறு சொற்பொழிவுகளில் வெளிப்படுத்தியுள்ளார். இவர் திருவள்ளுவர் குறித்து நிகழ்த்திய சொற்பொழிவில் இதனைப் பதிவு செய்துள்ளார். கிரேக்க ஒழுக்கவியல், உரோமிய ஒழுக்கவியல், புத்தரின் ஒழுக்கவியல் ஆகியவை திருக்குறளில் இடம்பெறுவதை, அண்ணாமலைப்

பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவில் பதிவுசெய்துள்ளார். பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் அறம் மற்றும் தத்துவ மரபுகளோடு திருவள்ளுவரின் கருத்துகளை இணைத்து வெளிப்படுத்தியுள்ளார்.

சாக்ரெட்டிஸிற்கு (கி.மு.470 - 399) முன்னிருந்த சொபிஸ்டர் (*Shophists*) என்போர், ஒழுக்கமென்பது சமூக வாழ்வைத் தருமத்திற்கேற்றவாறு இனிது ஆற்றுப்படுத்தும் ஒரு கருவியென்றே கருதினர். ஒவ்வொருவனும் தன்னாலியன்றவாறு தான் விரும்பிய இன்பங்களைத் துய்த்தல் கூடும் என்றும் விளம்பினர். சாக்ரெட்டிஸ் தருணத்திற்கேற்றவாறு ஒழுக்கம் மாறும் எனும் இவர்களின் கொள்கையை ஆதரிக்கவில்லை. இன்பமே ஒழுக்கத்தின் நோக்கமாயினும் அவ்வின்பம் மனத்தின் (பகுத்தறிவின்) இன்பமாக (*Rational pleasure*) இருத்தல்வேண்டும் என்று திருத்திக் கூறினார். அரிஸ்டாட்டில் தன் மகள் நிக்கோமசுக்கென எழுதிய நிக்கோமக்கியன் ஒழுக்க இயல் என்னும் நூலில் இன்பமே (*Happiness*) ஒழுக்கத்தின் நோக்கமென்றும், மனநலத்துடன் (*Goodness*) ஒன்றி இயங்க வேண்டுமென்றும் எழுதியுள்ளார். பகுத்தறிவால் மக்கள் அடையும் இன்பத்தைத் திருக்குறளும் அறத்தின் நோக்கமாக இயம்புகின்றது. செயல்கள் இன்பம் பயப்பன என்றும் இனிது என்றும், உவப்பன என்றும் அமைவதைக் காண்க. அறத்தான் வருவதே இன்பம் - 39/ தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து/மன்னுயிர்க்கெல்லாம் இனிது - 68/ ஈத்து உவக்கும் இன்பம் அறியார் - 228/ தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு/காமுறுவர் கற்றறிந்தார் - 399/உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் - 394/இருள்நீங்கி இன்பம் பயக்கும் - 352/ இன்பத்துளின்பம் பயக்கு மிகலென்னுந்/துன்பத்துள் துன்பங் கெடின் - 854

இக்குறட்பாக்களில் கூறப்பெறும் இன்பம், ஐம்புலன்கள் பெறும் இன்பம் ஒழிந்த இன்பம், புதல்வர் மெய்தீண்டியதால் வரும் இன்பம், அன்னாரின் சிறுகை அளாவிய கூழை உண்பதால் வரும் இன்பம், அன்னாரின் மழலைச்சொற் கேட்பதால் வரும் இன்பம் ஆகியவை புலன்களின் இன்பம். தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாயின் உவகை போன்ற இன்பம், புலனிற்கும் உயிருக்கும் இன்பம். ஆயினும் மனநலம் (*Goodness*), அறத்தால் வரும் இன்பம், உள்ளத்தின் உவகை ஆகிய இவையே அறத்தின் நோக்கமும் பயனுமாம். (*திருவள்ளுவர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்: 1967*)

உலகின் தொல்பழம் பண்பாடு மற்றும் நாகரிக வளர்ச்சி மரபுகள் தமிழ் மரபுகளோடு உள்ள தொடர்பு குறித்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம்முதல் பலரும் பதிவுசெய்தாலும், கிரேக்கமொழி, இலத்தீன் மொழி ஆகியவற்றைக் கற்றறிந்த பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களின் பதிவை வேறு கண்ணோட்டத்தில் புரிந்துகொள்வது அவசியம். இத்தன்மைகள் குறித்து மேலும் மேலும் உறுதிப்பட்ட சான்றாதாரங்களாக இதனைக் கருதலாம்.

ஒரு தேசிய இனத்தின் தனித்த அடையாளங்களாக அவ்வினத்தின் இலக்கியம், அறம், தத்துவம் ஆகியவற்றைக் காண்பதோடு, அவற்றை அவ்வினம் எவ்வகையில் பதிவுசெய்கிறது; அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எப்படி எடுத்துச் செல்கிறது; ஆகிய பிற உரையாடல்களை அவ்வினத்தில் காணப்படும் கல்வி தொடர்பான ஒழுகலாறுகள் வழியாகக் கண்டறியமுடியும். செவ்விலக்கிய ஆய்வைத் தமது எம். லிட். ஆய்விற்காக மேற்கொண்ட பேராசிரியர், முனைவர் பட்ட ஆய்வில் தமிழர்களின் கல்வி மரபு குறித்த ஆய்வை மேற்கொண்டார். Tamil Culture இதழில் தமிழ்க்கல்வி மரபு குறித்த கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரது ஆய்வேடு அண்மையில் நூல்வடிவம் பெற்றுள்ளது (*Educational Thought in Ancient Tamil Literature: பாரதிதாசன் பல்கலைக்கழகம்: திருச்சி:2010*) செவ்விலக்கியங்களில் பேசப்படும் பாணர்கள், புலவர்கள், பௌத்த சமணத் துறவிகள் ஆகியோரை அடிப்படையாகக்கொண்டு தமிழ்க் கல்வி மரபை ஆய்வு செய்துள்ளார். தமிழ் மரபிற்கென உரிய கல்வியின் தனித்தன்மைகளை உலகில் உள்ள பிற தொல்மரபுகள் சார்ந்த கல்வி மரபுகளோடு இணைத்துப் பேசியுள்ளார். பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் மட்டும்தான் தமிழர்களின் இம்மரபு குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளார். உலகக் கல்வி ஒப்புமை மரபில் தமிழ்க் கல்வியின் இடத்தை மதிப்பீடு செய்துள்ளார். ஒப்பியல் கல்வி (*Comparative Education*) எனும் புலத்தில் இவரது பங்களிப்பு தனித்து எண்ணத்தக்கது. பழந்தமிழ் செவ்விலக்கியங்கள் புலப்படுத்தும் கல்வி தொடர்பான அவரது பதிவு பின்வரும் வகையில் அமைந்துள்ளது.

**தமிழ் மரபிற்கென உரிய கல்வியின் தனித்தன்மைகளை உலகில் உள்ள பிற தொல்மரபுகள் சார்ந்த கல்வி மரபுகளோடு இணைத்துப் பேசியுள்ளார். பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் மட்டும்தான் தமிழர்களின் இம்மரபு குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளார்**

இச்செவ்விலக்கியங்களின் மதிப்பு வரலாற்று ஆவணங்களின் பதிவு என்பது மட்டுமல்ல. இவ்விலக்கியங்களைப் புறக்கணிப்பதால் பண்டைய இந்தியா குறித்த பல்வேறு முடிவுகளும் முழுமையற்றதாகவும் ஒருதலைப்பட்சமானதாகவும் அமைந்துவிடுகிறது. சேரோகின் (*Sorokin*)னின் சமூக, பண்பாட்டாய்வுகளும் சரி, சாட்விக்ஸ் (*Chadwicks*) இன் இலக்கிய ஆய்வுகளும், டாயன்பீ (*Toynbee*)யின் வரலாற்றாய்வுகளும் ப்ருபச்சர் மற்றும் வுடி (*Brubacher and woody*)யின் கல்வியியல் ஆய்வுகளும்கூடத் துல்லியமற்ற, முழுமையற்ற தகவல்களையே உள்ளடக்கியிருக்கின்றன. ஏனெனில் இவ்விலக்கியங்களையும், வேறெங்கும் காணவியலாத அதன் இலக்கிய வகைமைகளையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதே காரணம். பண்டைய இந்தியக் கல்வி ஆய்வுக்கான ஆதாரங்களைக் கண்டடைய பழந்தமிழ்ச் செவ்விலக்கியங்கள் வரைபடமற்ற கடலையும் அளந்தறியவியலாத ஆழங்களையும் அளிக்கவல்லன. (பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி: மொழியாக்கம்: ந. மனோகரன். 2009:28)

இவ்வகையில் தமிழகத்தின் செவ்விலக்கிய மரபுகள் உலகச் செவ்விலக்கிய மரபுகளோடு கொண்டுள்ள பாங்குகளை இலக்கியம், அறம், தத்துவம், கல்வி ஆகிய மரபுகள் சார்ந்து உரையாடலுக்கு உட்படுத்தி இருப்பதைக் காண்கிறோம். இம்மரபு உலக அளவில் அறியப்படவில்லை என்பதை உணர்ந்த பேராசிரியர், அதற்காக அவர் மேற்கொண்ட கோட்பாடுகள் தமிழியல் ஆய்வை உலக வரைபடத்தில் நிலைபேறு கொள்ளச்செய்த செயல்கள் ஆகும். உலகப் பொது மரபிற்குள் அமைந்திருக்கும் தமிழியல், ஏன் உலக அளவிலான தமிழியல் ஆய்வாக உருப்பெறவில்லை? கீழைத்தேயவியல் ஆய்வோடு அது ஏன் இணையாமல் போயிற்று? ஆகிய பிற உரையாடல்களை முன்னெடுத்தார். இதற்கான விளக்கத்தைப் பேராசிரியர் ஆங்கில மொழி வழியாகப் பின்வரும் வகையில் பதிவு செய்துள்ளார்.

- 1954-1966 காலங்களில் வெளிவந்த *Tamil Culture* இதழ்களில் இவரால் எழுதப்பட்ட கட்டுரைகளும் இவரது முன்னெடுப்பில் வேறுபலரால் எழுதப்பட்ட கட்டுரைகளும் இதனை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

- 1964இல் உருவாக்கிய உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் (*IATR*) வழியாக உருவாக்கப்பட்ட உலகத் தமிழ் கருத்தரங்க மாநாடுகள் நடத்தியமுறை மற்றும் அதன்மூலம் வெளிவந்த ஆய்வுக்கட்டுரைத் தொகுதிகள், அவற்றில் இவரது கட்டுரைகள் வெளிப்படுத்தும் கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் புரிந்துகொள்ளமுடியும்.

இத்தன்மைகளைப் புரிந்துகொள்ள பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களைத் தலைமை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த (*Journal of Tamil Studies*) முதல் இதழில் (ஏப்ரல்: *1969:1:1*) பகுதி இரண்டில் உள்ள பதிவுகள் அடிப்படையான ஆவணங்களாக அமைகின்றன. *IATR* அமைப்பின் அமைப்பு விதிமுறைகள், அகில உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தப்பட்டமுறைகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்குவதற்கான அடிப்படை வரைவுகள் ஆகிய பிற அந்த ஆவணத்தில் இடம்பெற்றுள்ளன. அதில் தமிழியல்ஆய்வு என்னும் தலைப்பில் அமைந்துள்ள செய்திகள், உலக வரைபடத்தில் தமிழியல் ஆய்வை நிலைபேறு கொள்ளச் செய்வதற்கான அடிப்படைகளைக் கூறுகின்றன. பதினோரு பக்கம் ஆங்கிலத்தில் அமைந்துள்ள அப்பகுதி, தமிழியல் ஆய்வில் அக்கறை உள்ளவர்கள் அவசியம் வாசிக்க வேண்டிய பகுதி ஆகும். அதன் முதல் பகுதியின் மொழியாக்கம் கீழ்வருமாறு அமைகிறது.

உலகத்தில் உள்ள ஆய்வாளர்களிடத்தில் தமிழியல் ஆய்வு, அதற்குரிய கவனத்தை துரதிருஷ்டவசமாக இன்னும் பெறவில்லை. நாற்பது மில்லியன் மக்கள் பேசும் இம்மொழியின் ஈராயிரம் ஆண்டுகாலத் தொடர்ச்சியை, மிகக் குறைந்த அளவிலான பிறநாட்டு அறிஞர்கள் அறிந்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளில் பெரும் மாற்றங்கள் இல்லாமல் இம்மொழி தொடர்ந்து புழக்கத்தில் இருந்து வருவதின் முக்கியத்துவம் விரிவாக அறியப்படவில்லை. மொழியில் சில மாற்றங்களை மட்டுமே உள்வாங்கியுள்ள இன்றைய தமிழ் பேசுபவரும் பழந்தமிழ் இலக்கியங்களை வாசிக்க முடியும். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்ஸ்பியர் மொழியைப் புரிந்துகொள்வதற்கு, அவர்களுக்கு ஏற்படும் சிரமம்கூட தமிழ்ச்செவ்விலக்கியங்களை வாசிப்பவர்க்கு இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட

தமிழ் இலக்கணம், இன்று வாழும் தமிழுக்கும் பெரியமாற்றங்களின்றி ஏற்புடையதாக உள்ளது. 1786இல் வில்லியம் ஜோன்ஸ், கிரேக்கம், இலத்தீன் ஆகிய பிறமொழிகளோடு சமசுகிருதத்திற்கு உள்ள தொடர்பு குறித்துக் கூறினார். அதிலிருந்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அறிஞர்கள் இந்தியவியலில் மிகுந்த ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். இந்தியவியல் என்றாலே சமசுகிருத ஆய்வு என்று கருதும் மேலைநாட்டு ஆய்வாளர்களை நாம் குறைகூற முடியாது; ஏனெனில், மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களின் இந்தியவியல் என்றாலே சமசுகிருத ஆய்வுக்கான இருக்கையை உருவாக்குவதாகக் கருதுகிறார்கள். தமிழ் மற்றும் திராவிடஇயல் குறித்த ஆய்வை மேலைநாட்டினர் தவிர்ப்பதற்கான காரணங்களை பிரெஞ்சு நாட்டு இந்தியவியல் அறிஞர் பேரா ஃபிலியோசா பின்வருமாறு கூறுகிறார்.

- 18ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட ஐரோப்பிய உறவுகள், கல்கத்தா நகரத்தோடு தொடர்புடையதாகவே அமைகிறது; தமிழ்நாட்டோடு தொடர்புகள் இல்லை.
- தமிழ் என்பது இந்தி, வங்காளம், பஞ்சாபி, மராத்தி போல ஒரு வட்டார மொழி என்று ஐரோப்பிய அறிஞர்கள் கருதுகிறார்கள்.
- சமசுகிருத வழிப்பட்ட தங்கள் புலமைத் தளப் புரிதலுக்குத் தமிழும் உதவும் என்று ஐரோப்பிய அறிஞர்களுக்குத் தெரியவில்லை. இரண்டு பண்பாடுகளுடன் தமிழுக்குள்ள உறவை ஐரோப்பிய இந்தியவியல் அறிஞர்கள் புரிந்து கொள்ளவில்லை. *(JOTS: Tamil studies: VOL:I.NO:1:Part:II.P.8-9.1970* மொழியாக்கம்: கட்டுரையாளர்)

தமிழியல் ஆய்வு, உலகப் பரப்பில் இடம் பெறாமைக்கான காரணங்களை மேற்காணும் பதிவு மூலம் அறிகிறோம். இத்தன்மை 1950களில் உணர்ந்து செயல்பட்டவர்களில் முதன்மையானவராக பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களைக் கருதமுடிகிறது. 1954-1966 காலங்களில் *Tamil Culture* நாற்பத்தைந்து இதழ்கள் வெளிவந்தது. அதில் சுமார் 350 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தமிழியல் ஆய்வுகளை முதன்முதலாக ஆங்கிலமொழிவழி விரிவாகச்செய்த முதல் இதழ் இதுவேயாகும். உலகம் முழுவதும் உள்ள இந்தியவியல் அறிஞர்கள் தமிழியல் குறித்த புரிதலை உள்வாங்க இவ்விதழ் அடிப்படையாக அமைந்தது. பேராசிரியர் பர்ரோ, எமனோ, கமில்சுவலெபில், ஃபிலியோசா ஆகிய பிறர் தமிழியல் குறித்த ஆய்வில் ஈடுபாடுகொண்டு செயல்பட்டபோது இவ்விதழ் அப்பணியை வேறு தளத்திற்கு வளர்த்தெடுத்தது என்று கூறலாம். உலக அளவில், யுனெஸ்கோ நிறுவனம், பண்பாட்டு நடவடிக்கைக்கு உதவத் தொடங்கிய காலங்களில், தமிழியல் குறித்த கவனத்தை அவர்கள் பெறுவதற்கான வாய்ப்பு *Tamil Culture* இதழ் மூலம் சாத்தியமாயிற்று. இவ்விதழுக்கு அன்றைய தமிழக அரசு ஆதரவளித்த வரலாற்றையும் கவனத்தில்கொள்வது அவசியம். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொருளுதவி இவ்விதழுக்குக் கிடைத்தது. கீழைத்தேயவியலில் சமசுகிருதம் மட்டும் அறியப்பட்ட சூழலில், தமிழியல் குறித்த புரிதலுக்கு இவ்விதழ் அடிப்படையாக அமைந்த வரலாறு; தமிழியலுக்கு பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களால் உருவாக்கப்பட்ட வரலாறாகக் கருதலாம்.

*Tamil Culture* இதழ்வழி உருவான புரிதலே 1964ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடைபெற்ற உலகக் கீழைத்தேயவியல் ஆய்வு மாநாட்டில் தமிழ் ஆய்வு மன்றம் (IATR) உருவாக அடிப்படையாக அமைந்தது. மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் துறைத் தலைவராக (1961-1969) பேராசிரியர் பணியாற்றியதன்மூலம் உலக அளவிலான தமிழியல் ஆய்வை வளர்த்தெடுக்க வழிகண்டதாக அமைந்தது. தமிழியல் ஆய்வு மன்றத்தின் முதல் ஆய்வு மாநாட்டை 1966இல் கோலாலம்பூரில் நடத்தியதன்மூலம், அவ்வமைப்பிற்குச் செயல்படிவம் கொடுக்க இவரால் முடிந்தது. அந்த மாநாட்டில் படிக்கப் பெற்ற கட்டுரைகளின் இருதொகுதிகளைப் பேராசிரியர் பதிப்பித்து கொண்டுவந்துள்ளார். தென் மற்றும் தென்கிழக்கு ஆசியா, சமூக வரலாறு, இலக்கியக் கோட்பாடுகள், இசை - நடனம் - மற்றும் சிற்பவியல், மொழி - மொழியியல், மொழியாக்கம் ஆகிய தலைப்புகளில் இரு தொகுதிகளிலும் (1968) வெளிவந்துள்ள கட்டுரைகள், உலக வரைபடத்தில் தமிழியல் ஆய்வை எடுத்துச் செல்லும் பாங்கில் அமைந்துள்ளன. இம்மாநாட்டை ஒட்டி பேரா. சேவியர் தனிநாயகம் அவர்கள் பதிப்பித்த இரு நூல்கள் முக்கியமானவை. அவை தமிழியல், உலகப் பரப்பில் பெற்றிருக்கும் இடம் குறித்த கையேடுகளாக அமைகின்றன. உலகம் முழுவதும் தமிழியல் ஆய்வு குறித்த தரவுகளைக் கொண்டுள்ள *Tamil Studies Abroad:*

தமிழியல் ஆய்வு உலகப் பரப்பில் இடம்பெறாமைக்கான காரணங்களை உணர்ந்து செயல்பட்டவர்களில் முதன்மையானவராக பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களைக் கருதமுடிகிறது. இவர் செய்துள்ள பணிகள் இன்று தொடரவில்லை என்பதன் மூலம், இவரது பணியின் முக்கியத்துவத்தை உணரமுடிகிறது

*A Symposium* (1968) எனும் நூல் ஆசிய ஐரோப்பிய, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தமிழியல் ஆய்வு உருப்பெற்ற வரலாற்றைக் காட்டுவதாக அமைகிறது. 1968 ஆண்டுகளுக்குப்பின் உருவான தமிழியல் ஆய்வு குறித்த கையேடு இன்று நம்மிடை இல்லை. இவ்வகையான ஆய்வு நிறுவனங்கள்வழி நடைபெற்ற ஆய்வுகள் *A Reference guide to Tamil Studies:books* (1966) என்று பதிப்பித்தார். இதன் தொடர்ச்சியும் கூட இன்று நம்மிடம் இல்லை. இவர் செய்துள்ள பணிகள் இன்று தொடரவில்லை என்பதன் மூலம், இவரது பணியின் முக்கியத்துவத்தை உணரமுடிகிறது. மலேசியப் பல்கலைக்கழகத்தில் இவரால் உருவாக்கப்பட்ட ஆய்வுகள், உலகத் தமிழியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் இனவியல் தொடர்பு, மொழி சார்ந்த தொடர்பு, பண்பாட்டுத் தொடர்பு ஆகிய பலகூறுகளை ஆய்வு செய்வதில் பேராசிரியர் தனிக்கவனம் கொண்டிருந்தார். மூன்று உலகத்தமிழ் மாநாடுகளின் ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகளில் இடம்பெற்றிருக்கும் இவரது கட்டுரைகள் மேற்குறித்த பொருண்மைகளில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, மூன்றாம் உலகத்தமிழ் ஆய்வு மாநாட்டுக் கட்டுரைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரையின் பொருண்மை பின்வருமாறு அமைகிறது. *(The Study of Contemporary Tamil Groups: A Survey (Paris:1970)* என்னும் கட்டுரை, இன அடையாளத்தோடு உலகில் வாழும் தமிழர்கள், தாய்மொழியைத் தமிழாகக் கொண்டவர்கள், பண்பாட்டு அடிப்படையில் தமிழர்கள், தமிழர்கள் தாங்கள் வாழும் பூமியைத் தாயகமாகக் கொண்டவர்கள் ஆகிய அடிப்படைகளைக் கொண்டு, உலகில் வாழும் தமிழர்களை மதிப்பீடு செய்துள்ளார். சுமார் பதினெட்டு நாடுகளில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டு, அவர் நிகழ்த்தியுள்ள ஆய்வு, உலகில் தமிழர் என்னும் வரையறையைத் துல்லியமாகத் தருகிறது. சிறு சிறு தீவுகளுக்கும் நாடுகளுக்கும் குடியேறிய 1800-1950 இடைப்பட்ட வரலாற்றை பேராசிரியர் ஆய்வு செய்துள்ளார். இதன்மூலம் தமிழர்தம் அலைவு உழல்வு வாழ்வைப் *(Diaspora)* புரிந்துகொள்ளமுடிகிறது. இவ்விதம் முதல் மூன்று மாநாட்டுத்தொகுதிகளிலும் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் உலகில் தமிழர் என்ற புரிதலைப் பெறுவதற்கு அடிப்படையாக அமைகிறது.

பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் குறித்துப் பேசும்போது, தவிர்க்க இயலாமல் பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் (1926-2009) குறித்த நினைவுகள் வருவது இயல்பு. அவர் உருவாக்கிய அகில உலக திராவிட மொழியியல் பள்ளி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக புல அமைப்புகள், திராவிடப் பல்கலைக்கழகம் ஆகியவை பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களின் கனவை நினைவாக்க வல்லவை. 1969 ஆம் ஆண்டில் மலேசியப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த பேராசிரியர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநராகத் தொடர்ந்திருக்கவேண்டும். தமிழியல் ஆய்வுக்கு அவ்வகையான 'நல்லூழ்' வாய்க்காமல் போய்விட்டது. இதனை வெளிப்படுத்தும் பேரா. வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் குறிப்போடு இக்கட்டுரையை முடிப்பது சரியாக இருக்கும்.

தமிழ் ஆய்வு நிறுவனத் திட்டம் சென்னையில் செயல்படுத்தப்பட்டது. மாறுபட்ட சூழ்நிலை காரணமாகத் தனிநாயக அடிகள் மலேசியாவிலுள்ள பேராசிரியர் பதவியைவிட்டு விலகிவிட்டார். "அவரைப் புதிதாக அமையவிருக்கும் தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநராக நியமித்தால் மிகச் சிறப்பாக நடத்துவார்'' என்பது எனது உறுதியான நம்பிக்கை. "ஆய்வில் உனக்கு அடிகளைவிட கூடுதல் அனுபவமும் உலகோர் ஒப்புதலும் உண்டு'' என்று பன்னாட்டுத் தமிழாய்வுக் கழகத்தில் பெரும் பொறுப்பு வகித்த நண்பர் ஒருவர் என்னிடம் ஒரு நாள் கூறினார். "எங்கள் நட்பு பலவாண்டுகள் நீடித்துவரும் ஒன்று. பலதுறை அறிஞர்களைக் கவரும் தெய்வசக்தியும் தமிழின் ஏற்றத்தைப் பல மொழியாளர்களிடம் கூறி ஒப்புதலைப் பெறும் வல்லமையும் அடிகளிடம் உண்டு'' என்று கூறி, அவர்கள் சொற்களை மீண்டும் கூறக் கேட்க நான் விரும்பவில்லை என்று தெரிவித்துவிட்டேன். மலேசியா பதவியைவிட்டு அடிகள் விலகியபோது, சென்னை ஆய்வு நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க அழைக்கப்படுவார் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. ஆனால், நாளாவட்டத்தில் அந்த நம்பிக்கை குறைந்தது. நானும் அந்த நிறுவனப் பணியிலிருந்து மெள்ளமெள்ள அகலத் துவங்கினேன். (வ. ஐ. சுப்பிரமணியம் கட்டுரைகள்: இலக்கணமும் ஆளுமைகளும், 2007:18) ■

# ஒப்பில்லா திருக்குறள்

**மேலைச் செம்மொழிகளிலும் வடமொழியிலும் உள்ள வாழ்வியல் நூல்களோடு திருக்குறளை ஒப்பிட்டுக்காட்டி, உலக அறிஞர்களின் கவனத்தை திருக்குறள்பால் ஈர்ப்பதில் வெற்றிபெற்றார். திருக்குறள் உலக இலக்கிய அரங்கில் இடம்பெற ஆற்றிய பணி பெரிது**

பேராசிரியர் ப. மருதநாயகம்
செம்மொழி மத்திய ஆய்வு நிறுவனம்,
சென்னை

தனிநாயக அடிகளார் வள்ளுவரின் வாழ்க்கைத் தத்துவத்தை மூன்று தமிழ்க் கட்டுரைகளில் கிரேக்க, ரோமானிய, பௌத்த ஒழுக்க இயல்களோடு ஒப்பிட்டும், மூன்று ஆங்கில கட்டுரைகளில் உலகளாவிய மனித நேயத்தைத் திருக்குறள் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் வற்புறுத்துவதை விளக்கமாக எடுத்துரைத்தும் செய்துள்ள திருக்குறள் பணி தனிச் சிறப்புடையது. இக் கட்டுரைகளில் காணப்பெறும் கருத்துக்கள் பல, சங்கச் சான்றோர் செய்யுட்கள் பற்றியும், குறள்பற்றியும் முதன்முதல் கூறப்பட்டவை. அவருக்குப்பின் அவைபற்றி எழுதிய ஜோர்ஜ் ஹார்ட் போன்ற மேலை அறிஞர்களும், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற தமிழ்க் கல்வியாளர்களும் அவற்றிற்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறார்கள். ஒப்பீட்டு ஆய்வை முறையாக மேற்கொள்ளும் இக் கட்டுரைகளில் அடிகளாரின் பன்மொழிப் புலமை பளிச்சிடக் காணலாம். அவருடைய கல்விவீச்சும்

**மக்களும், நாடுகளும், பல பண்புகளும், பல மொழிகளும் ஞாலத்தில் உள்ளதால் இவையனைத்தையும் கற்பதற்கு வாழ்நாள் போதா. நாடுகள் அனைத்தும் என் நாடு; ஊர்கள் அனைத்தும் என் ஊர்; எனவே, அவற்றைப்பற்றிப் பயிலக்கூடும் கல்விக்கு எல்லையில்லை எனும் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' மனப்பான்மையைத்தான் வள்ளுவர் தம் ஒப்பற்ற நூலில் வலியுறுத்துகின்றார்**



சிந்தனை ஆற்றலும் அளவிடற்கரியன. கிரேக்க, ரோமானிய, பிரெஞ்சு, ஆங்கில இலக்கியங்களோடு தமிழ், வடமொழி, பாலி ஆகியவற்றிலுள்ள பெருமைக்கு உரியனவற்றையும் கற்றறிந்து, எக்கருத்தையும் ஒருபால் கோடாது, விருப்பு வெறுப்பு அகற்றி, எல்லாக் கூறுகளையும் சீர்தூக்கிப் பார்த்து, தக்க முடிவெடுத்துத் தெளிவாக யாவருக்கும் ஏற்கும் வண்ணம் எடுத்துரைப்பது அவருக்கு கைவந்த கலையாகும். இருப்பினும், “நேரமும், வேண்டிய நூல்களும், இலங்கையில் உள்நாட்டு அமைதியும் கிடைதிருந்தால் இன்னும் விரிவாக இவ்வுரைகளை நான் யாத்திருத்தல் கூடும். இவ்வுரைகளுக்கு வேண்டிய முதல் நூல்களை

**உலகமும் வாழ்க்கையும் மாயை அல்ல,
அவை வாய்மையென்று துணிந்துகூறும் எழுச்சிக் கொள்கையை
குறளில் காணலாமென்றும்,
உலக இலக்கியத்தில் அதனைப் போன்றதோர் உயர்ந்த
ஞானப் பொன்மொழிகளைக் கொண்ட நூல்
வேறில்லையென்றும் உலகிற்கு அறிவித்த பெருந்தகை**

நம்நாட்டின் பெரும் நூல் நிலையங்களில்கூடக் காண்பது அரிது'' என்று கூறி, அவர் கட்டுரைகளை முடிப்பது நம் உள்ளத்தைத் தொடும்.

தமிழ் மனித நேயத்தின் கூறுகள்பற்றிப் பேசுகின்ற கட்டுரையில் தனிநாயக அடிகள் பண்டைய இந்தியநாட்டுக் கல்வி பற்றியும் பண்பாட்டுத் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றியும் ஆராய்வதற்கு ஏற்றவையாக நமக்குக் கிடைப்பவை பழந்தமிழ் இலக்கியங்களே என்பார். அக்காலத்து எழுதப்பெற்ற சமஸ்கிருத, பாலி இலக்கியங்களெல்லாம் சமயச் சார்புடையவையாய், புரோகிதர்களால் எழுதப்பெற்றவையாயிருக்க, பழந்தமிழ் இலக்கியம் ஒன்றே பெரும்பாலும் சமயச்சார்பு அற்றதாய் விளங்குகிறது. ஆரியரல்லாதாரின் வாழ்க்கைபற்றி அறிந்துகொள்ளவும் இது விலைமதிக்கமுடியாத சான்றாக அமைந்துள்ளது. தென்னிந்தியா, இலங்கை ஆகிய நிலங்களில் வழங்கிய பிற மொழிகளில் இவ்வளவு பழமையான, ஆரியத்தாக்கமற்ற இலக்கியத்தைக் காணமுடியவில்லை. இப் பழைய இலக்கியத்தின் பாடுபொருள்களும் நிகழ்வுகளும் சாதிப் பாகுபாட்டை ஏற்றிராத, கல்வியையும் மேம்பாட்டையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் எல்லாத் தொழிலினர்க்கும் வழங்கிவந்த ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவை. இந்த இலக்கியத்தில் மனித ஆற்றல்களில் அசைக்கமுடியாத நம்பிக்கையையும் மனிதநேய, சமுதாயக் கூறுகளை முற்படுத்தும் ஒருமைப்பட்ட வாழ்க்கை ஏற்பையும் காணலாம். பிறவி தீயது, வாழ்க்கை புறக்கணிக்கப்படவேண்டியது, வேதம் சொல்லும் வேள்விகள் மூலம் விண்ணுலகம் அடைய முயல்வது உயர்வு போன்ற எண்ணங்களை ஒதுக்கிய வாழ்க்கைக் கோட்பாடு இங்கு மட்டுமே இடம்பெறுகிறது. தம் கூற்றை வலுப்படுத்த அடிகளார் பியர் மெயில் (*Pierre Meile*) என்னும் மேலைவிற்பன்னர் தமிழ்ச் செவ்வியல் இலக்கியம்பற்றி எழுதியுள்ளதை மேற்கோளாகத் தருவார்.

இப் பின்னணியில் சங்க இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் அடிகளார், அதன் பெருமைகளையெல்லாம் விளக்கிவிட்டு அக்காலத்தை ஒட்டிவந்த திருக்குறள், சங்ககாலச் சமயச்சார்பற்ற மாந்தநேயத்தின் தத்துவ வளர்ச்சியாகவும், வெளிப்பாடாகவும் விளங்குகிறது என்பார். பிறர் நலம் பேணலை, தன்னைத் தாண்டிச் செல்லும் விரிந்து பரந்த மனப்பாங்கைக் குறிக்கோளாக கொண்டது பழந்தமிழ் இலக்கியம் என்று சுட்டிக்காட்டி, இதனைத் திருக்குறள் எவ்வாறு தெரிவிக்கிறது என்பதற்குச் சான்றுகள் பலதருவார். பிறருக்காக வாழும் பெருவாழ்வின் சிறப்பை அன்புடைமை, விருந்தோம்பல், பொறையுடைமை, ஈகை, அருளுடைமை போன்ற அதிகாரங்களெல்லாம் போற்றுவதை அடிகளாரின் ஒப்பாய்வு தெளிவாக்கும்.

அடிகளார் தமக்குமுன் திருக்குறளைப்பற்றியெழுதிய மேலை வல்லுனர்களின் முடிவுரைகளைச் சுருக்கமாகத்தந்து தமது 'வள்ளுவரும் கிரேக்க ஒழுக்க இயலும்' எனும் கட்டுரை இவ்வொப்பீட்டை முதன்முதலாகச் செய்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். பண்பாட்டின் தத்துவத்தை ஆராயும் ஜெர்மானியப் பேரறிஞர் ஆல்பேர்ட் சுவைட்சர் (*Albert Schweitzer*), சமணமும் புத்தமும் ஏனைய இந்தியச் சமயங்களும் உலகத்தையும் வாழ்க்கையையும் மறுத்து, அவை மாயையெனும் குறிக்கோளை வலியுறுத்தியபோதும், இந்தியாவில் பண்டைக்காலத்திலேயே உலகமும் வாழ்க்கையும் மாயை அல்ல, அவை வாய்மையென்று துணிந்து கூறும் எழுச்சிக் கொள்கையை குறளில் காணலாமென்றும், உலக இலக்கியத்தில் அதனைப் போன்றதோர் உயர்ந்த ஞானப் பொன்மொழிகளைக் கொண்ட நூல் வேறில்லையென்றும் உலகிற்கு அறிவித்த பெருந்தகை ஆவார். பதினாறாம் நூற்றாண்டிலேயே போர்த்துக்கீசிய அறிஞர் யூவான் தே வில்லா கொன்தே (*Joan de Vila Conde*) தம் திருமறையைப்பற்றிப் பேசும்போது, பூவலிக்கவாகு (1521 - 1551) எனும் சிங்கள மன்னன் முன்னிலையில் தம்முடைய கொள்கைகளுக்குத் திருக்குறள் எனும் நூல் சான்றாக விளங்குவதென்று விளம்பியதும் நம்மவர் அறியவேண்டிய செய்தியாகும்.

ஒழுக்க இயலை மெய்யுணர்வுத்துறையின் ஒரு பகுதியாகவே கருதி ஆராயும் தத்துவ மேதைகள் ஒழுக்க இயல் வரலாற்றில் வழக்கு ஒழுக்கம், உணர்ச்சி ஒழுக்கம், பகுத்தறிவு ஒழுக்கம் எனும் மூன்று படிநிலை வளர்ச்சியினைக் காண்பர். தமிழரின் ஒழுக்கவுணர்ச்சியில் இத்தகைய வளர்ச்சியே ஏற்பட்டிருக்கவேண்டுமென்பார் அடிகளார். முதல் நிலையில் தம் கூட்டுறவு வாழ்க்கைக்கேற்ப பழந்தமிழர் ஐந்திணை நிலத்திற்கு ஒத்த பழக்கவழக்கங்களை மேற்கொண்டனர். இரண்டாம் நிலையில் போரும் காதலும் வாழ்வில் பேரிடம் பெற்றதால் வீரம், புகழ், மானம், வாய்மை, சான்றாண்மை போன்ற பண்புகள்பற்றிப் பாணரும் அகவலரும் பாடக்கேட்டு அப் பண்புகளைப் பேணிவந்தனர். இறுதி நிலையில் புலவரும் சமயச்சார்புடையாரும் அறம்பற்றி எழுதிய நூல்கள் மதிக்கப்பெற்றன. இவ்வாறு



புறநானூறும் திருக்குறளும் கூறும் வாழ்க்கை நெறிகளுக்கான அடிப்படை மெய்யுணர்வுத்துறை வளர்ச்சி சங்க காலத்திற்கு முன்பாகவே ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது அடிகளாரின் ஊகம்

மெய்யுணர்வு விரிந்து மலர்ந்த காலத்திலேயே வள்ளுவர் தம்நூலினை எழுதியிருக்கவேண்டும். அடிகளார் கூறிய இக்கருத்தை அடிப்படையாகவைத்தே ஜோர்ஜ் ஹார்ட் போன்றவர்கள் புறநானூற்றிற்கும் திருக்குறளுக்கும் உள்ள உறவை எடுத்துச்சொல்லி வருகிறார்கள். புறநானூறும் திருக்குறளும் கூறும் வாழ்க்கை நெறிகளுக்கான அடிப்படை மெய்யுணர்வுத்துறை வளர்ச்சி சங்க காலத்திற்கு முன்பாகவே ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது அடிகளாரின் ஊகம்.

ஒழுக்க இயல் பற்றி நாம் இதுகாறும் அறிந்த நூல்களுள் முதலில் தோன்றியவை எகிப்து நாட்டைச் சேர்ந்தவை ஆகலாம். அவற்றுள் பிதாகோதேப் (*Pitahotep*) என்ற அமைச்சர் எழுதிய கற்பனைகள், மெரிக்கரை (*Merikere*) அரசருக்கென எழுதப்பெற்ற அறிவுரைகள், அமென்ஒமப்பே (*Amenomope*) என்பவரின் பழமொழிகள் ஆகிய மூன்றும் "நேர்மையை நன்கு வளர்ப்பாயாக; அதன்மூலம் உன் பிள்ளைகள் வாழ்வார்கள்''; "முன்னோர் வழிநின்று பண்பு அடைந்தவனுக்குத்தான் உண்மைவரும்''; "துன்பத்தில் அனுபவிக்கப்படும் செல்வத்திலும் இன்பத்தில் சுவைக்கப்படும் கூழ் இனிது'' என்பன போன்ற அறக்கருத்துக்களைச் சொல்லும் எகிப்தியருடைய கொள்கைகளும் ஒழுக்கநூல்களும் சூமர், பாபிலோன், ஈப்று பண்பாடுகளுக்கு அடித்தளமிட்டனவாயினும் எகிப்தியர் இத்துறையில் பெருமுன்னேற்றம் அடைந்திருக்கவில்லை என்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இதனை அறிவிக்கும் அடிகளார்,

> திருக்குறள் காட்டும் ஒழுக்கநீதி, எகிப்திய ஒழுக்க நீதியினும் பெரும் வளமும் உயர்வும் பெற்றது. எகிப்தியரிடம் மனநலம், ஈகை, ஒப்புரவு, சான்றாண்மை போன்ற ஒழுக்க நீதிக் கலைச்சொற்கள் இருக்கவில்லை. அவர்கள் அருவக் கருத்துக்களைச் செயல்முறையில் உருவமாகவே கண்டனர். "நடக்கின்றேன்'' எனக் கூறவேண்டிய இடத்து "என் கால்கள் செல்கின்றன'' என்றே கூறினர். "செம்மை'' எனும் கருத்திற்கு "செம்மையான வழி'' என்றே சொல்லினர். "ஈகை'' எனும் ஒரு சொல் குறிக்கும் பண்பினை "உணவற்றவருக்கு உணவுகொடுத்தல்'', "தாகமுள்ளவர்க்குத் தண்ணீர் வழங்குதல்'', "உடையற்றவர்க்கு ஆடை நல்கல்'' என விரித்துப் பல செயல்களின் வழியாக ஈகையெனும் பண்பின் கருத்தினை விளக்கினர். (அடிகளார் 8)
>
> அடிகளாரின் கருத்து திருக்குறளில் வரும் 'இனியவை கூறல்', 'செய்ந்நன்றி அறிதல்' போன்ற தொடர்கள்பற்றித் தமது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில் எல்லிஸ் தரும் விளக்கங்களை நமக்கு நினைவூட்டும். பல மேலை மொழிகளையும் இந்திய மொழிகளையும் அறிந்த எல்லிஸ் திருக்குறளில் கையாளப்பட்டுள்ள பண்புகள் குறித்த பழந்தமிழ்ச் சொற்களின் நுட்பங்களைச் சுட்டிக்காட்டுகிறார். 'இனியவை கூறல்' என்னும் பொருள் தரும் நேரடியான கிரேக்கச் சொல் இல்லாததால் அரிஸ்டாட்டில் அதனை வரையறைசெய்யத் தடுமாறுவதையும் எல்லிஸ் எடுத்துக்காட்டுவார்.

அடிகளார்,

> கிரேக்க, ரோமானிய எழுத்தாளர்கள் தமது தத்துவக்கோட்பாடுகளை விரிவான உரைநடை நூல்களில் தந்தமையால் ஒருபொருளைப் பல கோணங்களில் அணுகுதல், எடுத்துக்காட்டுகள், கதைகள்கூறி விளக்குதல் ஆகிய வாய்ப்புகளைப் பயன்பத்திக்கொள்ளமுடிந்தது. குறட்பாக்களையே கையாளும் வளுவர், தமது முடிவுகளைச் சுருங்கச் சொல்லிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் பல பெரிய நூல்களில் அரசியல்பற்றி விரிவாகப் பேசுவர்; வள்ளுவர் எழுநூறு குறள்களில் அரசுக்கும் குடிகளுக்கும் பொருந்தும் அறவுரைகளைக் கூறுவார். அரசியல் பற்றிய அவ்வறிஞர்களின் கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் அடிகளார், "திருக்குறள், தமிழ்நாட்டில் பரவியிருந்த அரசியல் கொள்கைக்கடலைக் கடைந்து, அங்குதோன்றும் அமிழ்தத்தை மட்டுமே கொடுக்கிறது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் காலத்தில் கிரேக்க நாட்டில் பரவியிருந்த கொள்கைகளைப்போல் தமிழ்நாட்டிலும் நல்ல அரசைப் பற்றிய கொள்கைகள் வளம் பெற்றிருந்தன என்பதற்குத் திருக்குறளே சான்று. தமிழ்நாட்டில் பரவிய கருத்துக்களைத் தம் சிந்தனையின் கருத்துக்களுடன் சேர்த்துத்தான் தம் நூலை திருவள்ளுவர் யாத்திருக்கவேண்டும். வள்ளுவர் கூறும் நீதிகளுக்கு மேற்கோள்களும் வரலாற்று ஆதாரங்களும் சங்க இலக்கியங்களில் நிரம்பக் கிடைக்கின்றன. (அடிகள்)

என்று விளக்குவார். புறநானூறு, நற்றிணை, அகநானூறு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலிருந்தெல்லாம் வள்ளுவர் பெறும் கருத்துக்கள் உருமாற்றம் பெறக்காணலாம். தம் உரை

**திருக்குறள் காட்டும் ஒழுக்க நீதி, எகிப்திய ஒழுக்க நீதியினும் பெரும் வளமும் உயர்வும் பெற்றது. எகிப்தியரிடம் மனநலம், ஈகை, ஒப்புரவு, சான்றாண்மை போன்ற ஒழுக்க நீதிக் கலைச்சொற்கள் இருக்கவில்லை**

விளக்கங்களில் பரிமேலழகர் அவற்றை ஆங்காங்கே சுட்டிச் செல்வார்.

சோக்கரதற்கு முன்வாழ்ந்த சொபிஸ்டர் (*Sophists*) என்போர் ஒழுக்கம் என்பது சமூக வாழ்வை வழிப்படுத்தும் ஒரு கருவியென்றும், காலத்திற்கேற்றவாறு மாறும் தன்மையதென்றும் எண்ணினர். இதனை ஏற்காத சோக்ரதர், இன்பம் ஒழுக்கத்தின் நோக்கமாயினும் இவ்வின்பம் மனத்தின் இன்பமாக, பகுத்தறிவின் இன்பமாக இருத்தல்வேண்டும் என்றார். அரிஸ்டாட்டில் இன்பமே ஒழுக்கத்தின் நோக்கமென்றும், ஒருவன் நல்ல மனத்துடன் ஒன்றி இயக்கவேண்டும் என்றும் கருதினார். பகுத்தறிவால் மக்கள் அடையும் இன்பமே அறத்தின் நோக்கமென்று குறள் கூறும்.

அறம் என்பது இருபக்கமும் சாராமல், இருகோடிகளையும் தவிர்த்து எதிர் எதிர்ப்பண்புகளுக்கு நடுவில் நிற்கும் தன்மை (*golden mean*) கொண்டது என்று அரிஸ்டாட்டில் கூறுவார். ஊதாரித்தனத்திற்கும் கஞ்சத்தனத்திற்கும் இடைப்பட்ட பண்பே ஈகை. இவ்வாறு மிகுதிக்கும் குறைவிற்கும் நடுவில் அறத்தை நிறுத்துவதால் அறத்தின் உயர்வைக் குறைத்தே மதிப்பிடுகின்றார் அரிஸ்டாட்டில். அறத்திற்கும் மறத்திற்கும் நிறையளவு வேற்றுமையே (*quantitative difference*) அவர் காட்டுகிறார் என்பது கான்ட் (*Kant*) டின் குற்றச்சாட்டு. அது பொருளுடைய குற்றச்சாட்டாகும். அறம் என்பது எடுத்துக்கொண்ட பண்பின் உயர்ந்த நிலையாகவே எப்பொழுதும் இருத்தல்வேண்டும். இதனால்தான் திருக்குறள் அறப்பண்பிற்கு எல்லை வகுக்காது அறத்தைச் செயலின் நிறைவாகவும் உயர்ந்த உச்ச நிலையாகவும் காட்டுகிறது என்பார் அடிகளார். தன்னை விற்றுக்கூட ஒப்புரவு செய்தல்வேண்டும் என்னும் கூற்றை அரிஸ்டாட்டிலிடம் எதிர்பார்க்கமுடியாது. 'ஒப்புரவறிதல்' எனும் அதிகாரத்தில் ஒருவனது செல்வம் பிறர்க்கே பயன்படவேண்டுமென்பதை,

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (115)
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படின். (116)
மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். (117)

என்றெல்லாம் திருக்குறள் எடுத்துரைக்கும்.

பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் அரசியலை ஒழுக்க இயலின் பகுதியாகவே கருதுவர். மக்கள் தமக்குவேண்டிய அறத்துறை நலன்களை அறியாதவராதலால் அரசு அவர்களைச் செம்மையான நெறியில் வற்புறுத்தி நடத்தல்வேண்டும் என்பது பிளேட்டோவின் விருப்பம். குடியகளை நல்லொழுக்கம் உடையவர்களாக ஆக்குவது அரசின் நோக்கம் என்பது அரிஸ்டோட்டிலின் கருத்து. வள்ளுவரோ அரசிற்கேற்ற அறத்தைக் கூறும்போது அறமற்ற அரசில் தனி மனிதர்களும் அறத்தில் தாழ்ந்துபோவார் என்று எச்சரிப்பார். பிளேடோ பரிந்துரைசெய்யும் அரசு உயர் குலத்தவர் சிலரின் தொகையாட்சி (*oligarehy*); அதில் மாந்தர்களின் தனி வாழ்க்கைக்கு வாயப்புகள் இல்லை. வள்ளுவர் பேசும் ஆட்சி முடியாட்சி; ஆயினும், அதில் தனிமனிதர்களுக்குத் தம் இல்லத்திலும், தொழிலிலும், வாழ்கையிலும் உரிமைகள் உண்டு. பிளேட்டோவின் அரசில் மக்களுக்குத் தத்தம் குடிமைநிலைக்கு ஏற்றவாறு தொழில்கள் விதிக்கப்படும்: காவலர் என்னும் முதல் வகுப்பினர்க்குச் சொத்துரிமைகள் இல்லை; மனைவியரும், பிள்ளைகளும் யாவர்க்கும் பொதுவாக பொது இல்லங்களில் வாழ்வர்; உயர்ந்த ஆடவர் உயர்ந்த பெண்களுடன் அரசு குறித்த காலத்தில் இணைந்து, உயர்ந்த ஆண் குழந்தைகளைப் பெறமுயல்வர்: குழந்தைகள் தம் பெற்றோர் யாரென அறியாது அரசியல் செவிலிகளால் அரசுப்பாசறைகளில் வளர்க்கப்படுவர். இவ்வாறு, அரசிற்காக நன்மக்களைப்பெறுவதே குடிகளின் நோக்கமும் கடமையும் என்பார் பிளேட்டோ. வள்ளுவர் போற்றும் ஆட்சியில் மக்கள் அரசின் அடிமைகள் அல்லர். இத்தகைய கோட்பாடுகளை ஒப்பிடும் அடிகளார்,

> தன்னுடைய அரசு வலிமை பெறுவதற்கு மனை வாழ்க்கையையும் மக்களால் வரும் இன்பத்தையும் அழிக்கின்றார் பிளேட்டோ. காட்டை அமைத்து அது நாடாகும் என்று நம்புகிறார் அவர். திருவள்ளுவரோ தம் அரசில் களவியல் இன்பம், கற்பியல் இன்பம், மக்கட்பேறு, செல்வம் ஈட்டுதல், விருந்தோம்பல் போன்ற இன்பங்களுக்கும் அறங்களுக்கும் பெரும் இடம் வகுத்துள்ளார். மனையற வாழ்க்கையை அரசியல் கட்டுப்படுத்தக்கூடும் என்று ஒருகாலும் உடன்பட்டிருக்கமாட்டார் வள்ளுவர். (அடிகள்)

என்று பிளேட்டோவுடைய கோட்பாடுகளின் பொருத்தமின்மையையும் பொருளற்ற தன்மையையும் எடுத்துக்காட்டுவார். அவை செயல்படுத்தப்பெற முடியாதவை என்பதைப் பிளேட்டோ உணரவில்லை.

**திருவள்ளுவர் தம் அரசியல்**
**களவியல் இன்பம், கற்பியல் இன்பம், மக்கட்பேறு, செல்வம் ஈட்டுதல்,**
**விருந்தோம்பல் போன்ற இன்பங்களுக்கும் அறங்களுக்கும்**
**பெரும் இடம் வகுத்துள்ளார்.**
**மனையற வாழ்க்கையை அரசியல் கட்டுப்படுத்தக்கூடும் என்று**
**ஒருகாலும் உடன்பட்டிருக்கமாட்டார் வள்ளுவர்**

பிளேட்டோ கற்பனை செய்யும் சமுதாயத்தில் வகுப்பு வேற்றுமைகள் உண்டு. காவலர் வகுப்பு, படைவீரர் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு எனும் பிரிவுகள் பொன், வெள்ளி, இரும்பு, பித்தளை ஆகியவற்றைத் தம் உடலமைப்பில் பிறப்பிலேயே மிகுதியாகக்கொண்டவர்கள் என்ற அடிப்படையில் உண்டாக்கப்பெறும். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் குடியுரிமைகள், கல்வியுரிமைகள், ஒழுக்கவாழ்க்கை உரிமைகள் ஆகிய யாவும் மறுக்கப்படும். ஒழுக்க வாழ்க்கையை எவர்க்கும் மறுப்பது வள்ளுவரால் ஏற்றுக்கொள்ளமுடியாத எண்ணமாகும். வகுப்பு வேற்றுமைகளைக் கடந்து மக்கள் அனைவரும் மேலும்மேலும் ஒழுக்க நெறியில் முன்னேற்றம் அடைதல்கூடும் என்பது அவரின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் கிரேக்கரே பண்புடையோர், பிறரெல்லாம் பண்பற்றவர் என்பதை முடிந்தமுடிவாக கொண்டவர். அரிஸ்டோட்டில், வேற்றுநாட்டார் கிரேக்கரைக் கெடுத்துவிடுவர் என்ற அச்சத்தால், தலைநகர் கடற்கரையிலிருந்து ஐந்து கல் அப்பால் தள்ளியிருக்கவேண்டும் என்பார். வள்ளுவரோ உலகம் அனைத்தையும் ஒன்றுபடுத்தி மக்கள் யாவரையும் ஒரே நாட்டினர் ஆக்குகின்றார். இக்கருத்தை தெளிவுபடுத்த அடிகளார்,

> யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு.

எனும் குறளை மேற்கோளாகக்காட்டி,

> வாழ்கை முழுவதும் கல்வியில் ஈடுபடுவதற்குக் காரணம் கல்வியின் தன்மையுமன்று, ஆழமுமன்று, நலமுமன்று, எண்ணத்தின் பெருமையுமன்று, தொகையுமன்று, ஒழுக்கத்தின் அகலமுமன்று; மக்களும், நாடுகளும், பல பண்புகளும், பல மொழிகளும் ஞாலத்தில் உள்ளதால் இவையனைத்தையும் கற்பதற்கு வாழ்நாள் போதா. நாடுகள் அனைத்தும் என் நாடு; ஊர்கள் அனைத்தும் என் ஊர்; எனவே அவற்றைப்பற்றிப் பயிலக்கூடும் கல்விக்கு எல்லையில்லை எனும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்'' மனப்பான்மையைத்தான் வள்ளுவர் தம் ஒப்பற்ற நூலில் வலியுறுத்துகின்றார் (அடிகள்)

என்று விளக்குவது நோக்கற்பாலது. "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு'' எனும் பழமொழியும் இக்கருத்திற்கு அரண் செய்யும்.

அரிஸ்டாட்டில், தனி மனிதன் தன் சூழுலுக்கும் அரசிற்கும் ஏற்ப ஒழுக்கத்தை உருவாக்கிக்கொள்ளமுடியுமென்று ஒப்பீட்டு ஒழுக்கமுறையை ஆதரிக்கின்றார். இதற்கு மாறாக, எங்கும் என்றும் எவராலும் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைக் கொள்கைகளே வள்ளுவர் கூறும் ஒழுக்கக் கொள்கைகள். சான்றோரும் அவர் கடைப்பிடிக்கும் நற்பண்புகளும் ஒழுக்க இயலுக்கு அடிப்படையென்று அரிஸ்டாட்டில் கூறுவார். யார் கூறியதாயினும் ஆராயாது ஏற்றுக்கொள்ளல் வள்ளுவர்க்கு உடன்பாடன்று.

பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் புகழ்ந்து பேசும் சமுதாய வாழ்வில் அடிமைமுறை தேவைப்பட்டது. ஏதென்சு நகரில் குடி உரிமை பெற்ற பத்தாயிரம் மக்களுக்கு இரண்டு லட்சம் அடிமைகள் பணிசெய்தனர். குருடர்களும் கூனர்களும் மெய்வலி குன்றிய குழந்தைகளும் மெய்யுறுப்புக்களில் குறையுடைய குழந்தைகளும் இந்த ஞானிகளால் புறக்கணிக்கப்பெற்றனர். குறையுற்ற குழந்தைகள் கொடிய விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டதையும் இவர்கள் ஆதரித்தனர். அடிமை வாழ்கையை வள்ளுவர் ஏற்கவில்லை. பொறியின்மை யார்க்கும் பழியன்று என்றார்.

கிரேக்கரின் அரசு முன்னேற்றத்திற்கு முயலாது ஒரே தன்மையில் இருக்கும் 'இயக்கமற்ற அரசு' ஆகும்; வள்ளுவர் காணும் அரசு மேலும்மேலும் முன்னேறிச் செல்லும் 'இயங்கும் அரசு'. அறிவும் அறமும் ஒரே பொருளைக் குறிப்பன என்று கருதிய பிளேட்டோ ஓர் அறத்தைப் பற்றிய அறிவு இருந்தால் ஒருவன் அதனைக் கடைப்பிடிப்பான் என்று நம்பினார். வள்ளுவரோ அறிவு வேறு, அறம் வேறு என்று உணர்ந்து, அறிவோடு அறத்தைப் பேணவேண்டும் என்றுரைத்தார்.

உண்மையான உலகம் மேலுலகிலேயே இருக்கிறது. இவ்வுலகம் அதன் நிழற்படமே, குறையுடைய நகலே என்பது பிளேட்டோவின் விந்தையான நம்பிக்கை. வள்ளுவர் மேலுலக அரசை இங்கு நிறுத்தவேண்டும் என்று கூறவில்லை; நிறைவுடைய அரசை இவ்வுலகிலேயே மாந்தர் அடையமுடியும் என்பது அவர் எண்ணம்.

கிரேக்கரின் ஒழுக்க இயலை வள்ளுவத்தோடு ஒப்பிட்டு ஆராயும் அடிகளார், கிரேக்க அறிஞர்கள் மெய்யுணர்வு வல்லுநர்போல் பொருளை ஆராய்கின்றனர் என்றும் வள்ளுவரோ சிறப்பான மெய்யுணர்வை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்க இயலை ஒழுக்க இயல் வல்லுநராய் ஆராய்ந்து ஆசான்போல், மக்கள்

**கிரேக்கரின் ஒழுக்க இயலை வள்ளுவத்தோடு ஒப்பிட்டு ஆராயும் அடிகளார், கிரேக்க அறிஞர்கள் மெய்யுணர்வு வல்லுநர்போல் பொருளை ஆராய்கின்றனர் என்றும் வள்ளுவரோ சிறப்பான மெய்யுணர்வை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்க இயலை ஒழுக்க இயல் வல்லுநராய் ஆராய்ந்து ஆசான்போல், மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய அறங்களைக் கூறுகிறார் என்றும் முடிவுசெய்வார்**

கடைப்பிடிக்கவேண்டிய அறங்களைக் கூறுகிறார் என்றும் முடிவுசெய்வார்.

கிரேக்க நாட்டில் தோன்றி இத்தாலியில் பரவிய எபிக்யூரஸ் நெறியோடும் வள்ளுவத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறார் அடிகளார். எபிக்யூரஸ் சமயத்தைப் புறக்கணித்தவர். இன்பமே வாழ்க்கையின் நோக்கம் என்றும் இவ்வின்பம் ஐம்புல இன்பமாக, மனதின் இன்பமாக, பகுப்பறிவின் இன்பமாக இருக்கலாமென்றும் போதித்தார். ஆனால், அவர் எல்லாவகை இன்பங்களையும் சிறப்பிக்கவில்லை. சிற்றின்பங்களில் ஈடுபடுவதும் மிகுதியாய் உண்பதும் குடிப்பதும் முறையன்று என்பது அவர் அறிவுரை. நட்பால் வரும் இன்பமும் நண்பருடன் கலந்து உரையாடலும் தத்துவ வாழ்க்கையின் தலைசிறந்த பேறுகள் என்று அறிவுறுத்தினார். உயர்ந்த மெய்யுணர்வு அறிவியல் தத்துவங்களை அவர் போற்றவில்லை. ஒருவன் ஒரு சிறிது படிக்கவும் எழுதவும் கற்றிருந்தால் போதும். அறத்தையும் இன்பத்தையும் எபிக்யூரஸ் ஒன்றாகவே கருதினார். அறநெறிக்கு மாறாக நடந்துகொள்ளுதலில் தவறில்லை; ஏனெனில், சமூகச் சட்டங்களைக் கடைப்பிடித்தலே நல்லது. அவற்றை மீறினால் சமூகம் ஒருவனைக் கண்டிக்கலாம்; எள்ளிநகையாடலாம். நம் மனநிலை கலங்காதிருக்க வேண்டுமானால், சமுதாய விதிகளைப் புறக்கணிக்காதிருக்கவேண்டும் என்பார் எபிக்யூரஸ். வள்ளுவரோ வினைத் தூய்மையோடு மனத்தூய்மையும் தேவையென்பார். சமுதாயத்திற்கு அஞ்சி ஒருவன் நல்லொழுக்கத்தில் ஈடுபடுவதைவிட அறம் முறையாதலால் அதைக் கடைப்பிடிப்பதே பெருமையாகும். வள்ளுவர் கருத்தில் அறமும் இன்பமும் ஒரு பொருள் சொற்களல்ல; ஒருவன் இன்பம் கருதி அறம் செய்வதில்லை; அறம் செய்வதால் இன்பத்தைப் பயனாகப் பெறுகிறான்.

எபிக்யூரஸ் கூறும் வாழ்க்கைத் தத்துவத்தில் உள்ள பெருங்குறையை அடையாளம் காட்டுகிறார் அடிகளார். பேதைமையையும் செல்வம் ஈட்டுதலையும் சிற்றின்பங்களையும் எபிக்யூரஸ் கண்டிப்பதன் காரணம் அவை பொருளற்றவை என்பது அவர் கருத்து. அவர் சுட்டும் வாழ்க்கை நெறியில் உயர்ந்த கொள்கைகளுக்கும் கடமைக்கும் அதன் செயல்களுக்கும் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்தலுக்கும் பொதுநலனுக்காக நம்மையே கொடுப்பதற்கும் இடம் இல்லை. வள்ளுவரோ ஒப்புரவிற்குப் பேரிடம் தந்து ஒருவனது வாழ்க்கை பிறர்க்கெனவே அமையவேண்டும் என்பார். களவையும் கற்பையும் போற்றும் வள்ளுவர் இல்லறத்தில் இனிது வாழ்வார் விருந்தோம்பலிலும் ஈகையிலும் தம் நாட்களைச் செலவிடவேண்டும் என்று வற்புறுத்தக் காணலாம்.

அடிகளார் ஸ்டாயிக் நெறியிலிருந்தும் வள்ளுவத்தைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவார். ஸ்டாயிக்வாதிகள் உலக இயற்கைக்கு ஒற்றுமை உண்டென்றும் பொருள்கள் யாவும் இவ்வொற்றுமையால் பிணிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் மக்கள் உலகில் ஒரு பகுதியாதலால் இவ்வொற்றுமையைப் பாராட்டி ஒழுகுதல் வேண்டுமென்றும் கருத்தறிவித்தனர்.

ஸ்டாயிக் நெறியைத் தழுவி வாழும் இலட்சிய மனிதனுக்கும் வள்ளுவர் காட்டும் சான்றோனுக்கும் உள்ள வேறுபாடுகளை அடிகளார் விளக்குவார்.

> இருவரும் அடக்கமும் நடு நிலைமையும் உடையவர்; இருவரும் புறங்கூறார், பயனில சொல்லார், வெகுளார், நிலையாமை உணர்வார், உயிர்துறக்க அஞ்சார், மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை படைத்தவர். ஆயினும் உரோமைய ஞானி வாழ்கையிலும், உலகிலும், சமூக முன்னேற்றத்திலும் தமிழனைப்போல் அத்துணை ஈடுபாடு கொண்டவனல்லன், உரோமைய ஞானி துறவிபோல் தனியே காணப்படுகிறான்; தமிழ்ச்சான்றோன் இல்லறப் பண்புடையானாக மக்கள் நடுவில் காட்சி அளிக்கிறான். (அடிகள்)

ஒரு சமுதாயம் குறிக்கோள் பண்புகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவை உருவெடுத்த மாந்தனைப் போற்றுவது வழக்கு என்றும் சான்றாண்மை எல்லா நற்பண்புகளும் நிறைந்த தன்மையைக் குறிக்கும் என்றும் கூறும் அடிகளார் பல சமுதாயங்களின் இலட்சிய மனிதர்கள் யார் எனப் பட்டியலிட்டுக் காட்டுவது அரிய செய்தியாகும்.

> பிளேட்டோவினுடைய அரசில் ஞானியும் அரசனும் *(philosopher - king)* ஆகிய ஒருவன் இலட்சியம் ஆகின்றான். உரோமருடைய அரசில் பண்பும் சொல்வன்மையும் படைத்த வழக்கறிஞன் *(orator - lawyer)* இலட்சிய புருஷன். இங்கிலாந்தின் இடைக்காலத்தில் கல்வி பெற்ற பெருநிலக்கிழவன் *(feudal lord)* இலட்சிய புருஷன். இடைக்கால ஐரோப்பாவில் கவின்கலைகளில் ஈடுபடும் போர்வீரன் *(artist warrior)* இலட்சிய புருஷன்; தமிழ் உலகிலோ சான்றோன் இலட்சிய புருஷன். (அடிகள்)

மேலை உலகில் ரோமானிய ஸ்டாயிக்வாதிகளே

முதன்முதலில் ஒழுக்கத்தில் ஒருவன் மேன்மேலும் உயர்தல் கூடும் என்னும் கருத்தைச் சொல்லத் தொடங்கினர். ஆனால், நல்லொழுக்கத்தில் முன்னேறுவது ஒரு சமூகம் பல காலமாகப் பெற்றிருந்த ஒரு கருத்தாகத் திருக்குறளில் இடம்பெறக் காணலாம்.

இல்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு (135)
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை (137)

ரோமானியப் பேரரசின் வணிகத் தொடர்பு காரணமாக அவர்களுக்கு மக்கள் குலத்தின் ஒற்றுமை புலப்பட்டது. எனவே செனக்கா, மார்க்கஸ் ஔரேலியஸ் போன்றவர்கள் மனித இனம் ஒன்று என்று உணர்ந்து பேசினர். உலக மாந்தரின் ஒருமை திருக்குறளில் அழகாகக் கூறப்பெற்றள்ளது. ரோமானியர் புதிதாகக் கண்டுபிடித்ததோர் உண்மைபோல் கூறுவதை வள்ளுவர் என்றும் உள்ள உண்மையாக தருகிறார்.

ஸ்டாயிக் நெறியைப் பின்பற்றியவர்களில் செனக்கா, எபிக்டெடுஸ், மார்க்கஸ் ஔரேலியஸ் ஆகிய மூவருடைய நூல்களுடன் திருக்குறளை ஒப்பிட்டுப்பார்க்கமுடியும். கண்ணோட்டம், ஒப்புரவு, நடுவுநிலைமை, வெகுளி, உறுதி, மானம், இன்ப வாழ்கை ஆகியவை பற்றியெல்லாம் செனெக்கா எழுதிய நூல்களும் அவருடைய நூற்று இருபத்துநான்கு கடிதங்களும் நற்பண்புகள் குறித்து விரிவாக விளக்குகின்றன. இவ்விளக்கங்களில் கிரேக்க ரோமானியப் பெரியோர் பலரின் அரிய செயல்கள் எடுத்துக்காட்டுகளாகப் பயன்படுத்தப்பெறுகின்றன.

அன்னாருடைய நீதி இலக்கியங்களை எடையிட்டுப் பார்க்கும்போது ரோமானிய அறிஞர்களின் உலகநோக்கிலிருந்த பெருங்குறைபாடு தெற்றெனப் புலப்படும்.


உரோமையர் தம்முடைய நீதிநூல்களில் தம்மவரின் எடுத்துக்காட்டுகளையும் பெருமையையுமே பெரும்பாலும் போற்றுகின்றனர். நாம், நம்மவர் என்ற செருக்குடன் உரோமைய ஆசிரியர் உரோமருக்குப் பயன்படும் முறையில் எழுதுகின்றனர். ஆனால், வள்ளுவரோ எல்லா உலகிற்கும், எல்லா மக்களுக்கும் பயன்படும் முறையில் தமிழோ, தமிழ்நாடோ என்ற குறிப்பேதும் இல்லாமல் உலகெலாம் தழுவுதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார். (அடிகள்)

வள்ளுவரின் ஒழுக்க இயலைக் கிரேக்க, ரோமானிய, புத்த ஒழுக்க இயல்களோடு ஒப்பிட்டுக்காட்டிய அடிகளார், அதனை எபிரேய, இஸ்லாமிய, சீன ஒழுக்க இயல்களோடும் ஒப்பிடவேண்டும் என்றும், வள்ளுவர் கூறும் உண்மைகளை விவிலிய இலக்கியங்களுடனும் கெமாரா, மிதிராஷ், சௌஹார் போன்ற எபிரேயருடைய உரைகளுடனும் இணைத்துப்பார்த்தல் கூடுமென்றும், வள்ளுவர் அரசியல், பொருளியல், உலகியல்பற்றிக் கூறியுள்ளவையும் வருங்காலத்தில் ஒப்பீட்டு முறையில் ஆராயப்படல்வேண்டும் என்றும் அறிவுரைகூறி முடித்தலை நம்மவர் மனங்கொளல்வேண்டும். இத்தகைய ஒப்பீட்டு ஆய்வுதான் திருக்குறளின் மேன்மையை உலகிற்குப் புலப்படுத்தும் ஒரே வழியாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருக்குறள் பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளவர்களுள் தனிநாயக அடிகளோடு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டிய இருவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும், மு வரதராசனாரும் ஆவர். தெ. பொ. மீ., திருவள்ளுவரின் வாழ்க்கைத் தத்துவம் பற்றி *Philosophy of Thiruvalluvar* என்று ஆங்கிலத்தில் ஒரு குறுநூலும் 'வள்ளுவரும் மகளிரும்', 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' எனும் இரண்டு தமிழ் நூல்களும் பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். அகில இந்திய பண்பாட்டிற்குத் திருக்குறளின் பங்களிப்பைச் சுட்டிக்காட்டுவதில் நாட்டம்செலுத்திய தெ. பொ. மீ., திருவள்ளுவர் பேசிய அறம், பொருள், இன்பம் எனும் உறுதிப்பொருள்களை வடநூலார் போற்றும் புருஷார்த்தங்களோடு இணைத்துப் பேசக்காணலாம். அதாவது, பார்வை அகில இந்தியப் பார்வை.

மு. வரதராசனார் தமது தமிழ் இலக்கிய வரலாற்றிலும் 'திருவள்ளுவர் அல்லது வாழ்கை விளக்கம்', 'குறள்காட்டும் காதலர்' ஆகிய முழுநூல்களிலும் திருக்குறளைப்பற்றி விரிவாகப் பேசுகிறார். அவர் திருக்குறளுக்கு எழுதிய எளிய, இனிய நடையில் அமைந்த உரைக்குத் தமிழகத்தில் இருக்கும் வரவேற்பு இன்னும் குறையவில்லை. எனவே, மு. வ. வின் பங்களிப்பு தமிழக அளவில் ஏற்படுத்திய தாக்கம் பெரிது. ஆனால், அது தமிழக அளவோடு நின்றுவிட்டது. தனிநாயக அடிகள் திருக்குறைளை மேலைச் செம்மொழிகளிலும் வடமொழியிலும் உள்ள வாழ்வியல் நூல்களோடு ஒப்பிட்டுக்காட்டி, ஆங்கிலத்தில் நூல்களும் கட்டுரைகளும் எழுதியதோடு, பல்வேறு நாடுகளில் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியமையால் உலக அறிஞர்களின் கவனத்தைத் திருக்குறள்பால் ஈர்ப்பதில் வெற்றிபெற்றார். திருக்குறள் உலக இலக்கிய அரங்கில் இடம்பெற, அவர் ஆற்றிய பணி பெரிதும் துணைசெய்தது என்பதில் ஐயமில்லை. ■

விருந்தினர் பக்கம்



ஆர். நடராஜன்

அமெரிக்க தூதரக
முன்னாள் அரசியல் ஆலோசகர்,
சென்னை

# மகாராணி வணங்கும் அதி மகாராணி

குருவி குட்டி போட்டதா, குதிரை முட்டை இட்டதா என்று கேட்டு எழுதுபவர்கள் சாதாரண மனிதர்கள். உலக நன்மைக்கான முக்கிய விஷயங்களைப்பற்றிக் கடிதம் எழுதுபவர்கள் பெரிய மனிதர்கள். அவர்கள் எழுதுவதும் பெரிய விஷயங்களே. அப்படி இரண்டு பெரிய மனிதர்கள் ஒரு முக்கிய பிரமுகருக்கு எழுதிய கடிதங்கள் இவை.

ஒன்று, கிழக்கிந்திய கம்பெனியின் குமாஸ்தாவாக வந்து இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படக் காரணமான ராபர்ட் க்ளைவ் எழுதியது. மற்றையது, இப்போதைய பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிஸபெத் எழுதியது.

இரண்டுமே சோனியா காந்திக்கு எழுதப் பட்டவை. ராஜ விசுவாசம் காரணமாக ராபர்ட் க்ளைவ் மகாராணி எலிஸபெத்துக்கு கடிதத்தின் நகலை அனுப்பியிருந்தார். அதனால், மகாராணியும் சோனியா காந்திக்குக் கடிதம் எழுதினார்.

கற்பனைக் காற்றில் பறந்துவந்த இவற்றை உங்களிடம் கொடுத்துவிட்டேன். சோனியா படித்தாரோ இல்லையோ, நீங்கள் படியுங்களேன்.

அன்புள்ள அன்னை சோனியா காந்திக்கு;

தங்கள் ஐரோப்பிய முப்பாட்டன் ராபர்ட் க்ளைவ் வணக்கத்துடன் எழுதிக் கொள்வது.


தங்களைப் பாராட்டவும் தங்களுக்கு நன்றி தெரிவிக்கவுமே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். தங்கள் மாமியாருடைய தாத்தா காலத்தில் இந்தியர்கள் பிரிட்டிஷ்காரர்களைத் திட்டினார்கள். அதற்கு மூலகாரணம் நான் என்று என்னையும் ஏசினார்கள். அதெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒருவேளை இந்தியப் பள்ளிக்கூட மாணவியாக இருந்திருந்தால் என்னைப் பற்றிச் சரித்திரப் புத்தகத்தில் படித்திருப்பீர்கள். அப்போது என்னைக் குறிப்பிடாத சரித்திரப் புத்தகம் இந்தியாவில் இல்லை. இப்போது நீங்கள் இல்லாமல் இந்தியாவில் சரித்திரமே இல்லை. அது போகட்டும், உங்களைப் பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம், ஏதேதோ எழுதலாம். நான் அப்படியல்ல. நன்றிக் கடன்பட்டவன். நான் இறந்ததும் எனக்கு சொர்க்கமா, நரகமா என்று தீர்ப்பு சொல்லவேண்டிய எமதர்மராஜன் தீர்ப்பைத் தள்ளிவைத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டார். அதனால் சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடைப்பட்ட பாதையில், கட்சி மாறிவந்த புள்ளி புதிய கட்சியில் பசையான பதவிக்கு லோலோ என்று அலைவது போல், அலைந்து கொண்டிருந்தேன். அப்படிப் பல வருஷங்கள் கழிந்தன.

இந்தியா சுதந்திரம் பெற்றவுடனே எமதர்மராஜனுக்கும் சுதந்திரம் வந்துவிட்டதுபோலிருக்கிறது. என் விஷயத்தில் உடனே முடிவெடுத்து நரகத்தில் தள்ளிவிட்டார். நரகத்தில் இருந்தபோது சமகால நடப்புபற்றி இந்தியர்கள் சொன்ன ஒரு விஷயம் மனதை நெருடியது. ஒரே வாசகத்தை அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். இதற்கு பிரிட்டிஷ் ஆட்சியே பரவாயில்லை. என்ன இருந்தாலும் அவர்கள் நல்லது செய்தார்கள். பழிபாவத்திற்கு அஞ்சினார்கள். ரயில் பாதை போட்டு நாட்டை இணைத்தார்கள். தபால் துறையை அமைத்தார்கள். அது சிறப்பாக செயல்பட்டது. பள்ளிக்கூடங்கள், காலேஜ்கள், ஆஸ்பத்திரிகள் கட்டினார்கள். பலருக்கு வேலை கொடுத்தார்கள். நிர்வாகம் நன்றாக நடந்தது. வெள்ளைக்காரர்கள் போய் இப்போது கொள்ளைக்காரர்கள் வந்துவிட்டார்களே என்றும், நரகத்தைவிடக் கொடிய நிலையில் தம் வாரிசுகள் வாழ்கிறார்களே என்றும் புலம்பினார்கள். இந்த வார்த்தைகள் நியாயம்தான் என்று எனக்கும் தோன்றியது. பிரிட்டிஷ்காரர்களே பரவாயில்லை என்று இந்தியப் பிரஜைகள் சொல்வதனால், ஜெயிலில் ஆயுள் தண்டனைக் கைதிக்கும் நன்னடத்தை காரணமாக விரைவில் விடுதலை தருவதுபோல, எனக்கு நரகத்திலிருந்து விடுதலை தாருங்களேன்னு எமதர்மராஜனிடம் முறையீடு செய்தேன். அவரோ 'அப்பீல் பெண்டிங்' என்று சொல்லிவிட்டார். நானும் 2004ஆம் வருடத்திலிருந்து 2009 வரை மீண்டும் மீண்டும் முறையீடு செய்துகொண்டிருந்தேன். சமீபத்தில் எமதர்மராஜன் என்னை அழைத்து, 'நீ இந்தியாவுக்கு நல்லதே செய்திருக்கிறாய் என்பது எனக்கு இப்போது புரிகிறது. எனவே, உன்னையும் ஜாலியன் வாலாபாக் கொலைகளுக்குக் காரணமான தளபதி டயரையும் சொர்க்கத்திற்கு மாற்றுகிறேன். இந்த மாறுதல் உடனே





**இரண்டாம் எலிஸபெத்தான என்னை**
**இந்தியாவில்**
**இரண்டாம் சோனியா காந்தியாக**
**பிறக்க வையுங்கள்**



நடைமுறைப்படுத்தப்படும்' என்று உத்தரவிட்டார். அதனால் நானும் இப்போது சொர்க்கத்திற்கு வந்துவிட்டேன்.

நீங்கள் இந்தியாவை ஆளும் முறையைப் பார்த்துத்தான் எமதர்மராஜன் தன் முந்திய தீர்ப்பைத் திருத்தி எழுதினார். அதனால் நான் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் மேலும் இரண்டு விஷயங்களுக்காகவும் நான் தங்களைப் பாராட்டவேண்டும். பாருங்கள், அந்தக் காலத்தில் படாதபாடுபட்டு நான் இந்தியாவை பிரிட்டிஷ் ஆளுகைக்குள் கொண்டுவந்தேன். ராணுவ தளபதியாக இருந்து போர்களுக்குத் தலைமை தாங்கினேன். இந்தியர்களுடனும் புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர்களுடனும் போராடினேன். அப்படி வசப்படுத்திய இந்தியாவை மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற கிழவன் சாமர்த்தியமாக எடுத்துக்கொண்டு அதை நேருவிடம் கொடுத்துவிட்டான். நீங்கள் இந்தியாவைப் பிடிக்க என்னைபோல் கஷ்டப்படவில்லை. கத்தி, கேடயம், துப்பாக்கி, பீரங்கி என்று எதையுமே தூக்கவில்லை. நான் போரினால் வென்ற தேசத்தை நீங்கள் காதலினால் வென்றுவிட்டீர்கள். ராஜீவ் காந்தியைக் காதலித்தீர்கள். திருமணம் செய்துகொண்டீர்கள். காத்திருந்தீர்கள். இந்திரா வசமானதால் இந்தியாவும் உங்கள் வசமாயிற்று.

ஒரு காலத்தில் இரண்டும் ஒன்றுதான். பிறகு நிலைமை கொஞ்சம் மாறியதுபோல் தோன்றியது. நீங்கள் களத்தில் குதித்து அதை மாறவிடவில்லை. எங்கள் காலத்தில் விதேசிகளுக்கு அடிமையாக இருக்க மாட்டோம் என்று வெகுண்டு திரண்டவர்களின் வாரிசுகள் உங்களுக்கு மீளாத அடிமைகளாகிவிட்டார்கள். புகுந்த வீட்டில் இருந்த சுதேசி மருமகளை உங்களால் துரத்த முடிந்தது. என்னால் சக விதேசிகளான பிரெஞ்சுக் காரர்களைப் புதுச்சேரியை விட்டுத் துரத்த முடியவில்லை. போர்ச்சுகீசியரை கோவாவைவிட்டு விரட்ட முடியவில்லை. அதனால் என் தோல்வியை ஒப்புக்கொண்டு உங்கள் வெற்றியைப் பாராட்டுகிறேன்.

இன்னொரு முக்கிய விஷயத்திற்காகவும், நான் மட்டுமல்ல உலகின் அதிபுத்திசாலி அரசியல்வாதிகளும் தங்களைப் பாராட்டியாகவேண்டும். அதாவது, எங்கள் ஆட்சிக் காலத்தில் தாசில்தாருக்கும் அதிகாரம் இருந்தது. அதிகாரத்தை வைத்திருந்தவர்கள் அதைச் சரியாக செலுத்தியபோது பதவி உயர்வு பெற்றார்கள். முறைகேடுகள் செய்தபோது தண்டிக்கப்பட்டார்கள். ஆனால், அதுவல்ல நிர்வாகம் என்பதை நீங்கள் இப்போது உணர்த்தியிருக்கிறீர்கள். முறைகேடாக அதிகாரம் செலுத்தினால் பதவி உயர்வு என்று நீங்கள் நிர்வாகத்தை மாற்றிவிட்டீர்கள். கிராம முன்சீப் முதல் எல்லோரும் அவரவர் அதிகாரங்களை அப்படியே மேலிடத்திற்குத் தர, அப்படியே அது படிப்படியாய்

நகர்ந்து பிரதமரிடம் போக, அவர் எல்லா அதிகாரத்தையும் உங்களுக்கு தாரைவார்க்க, நீங்களே இந்தியாவை ஆள்கிறீர்கள். 'வெள்ளையனே வெளியேறு' என்று எங்களைப் பார்த்துச் சொன்ன இந்தியர்கள் உங்களை அப்படிச் சொல்ல முடிவதில்லை பாருங்கள். அதில்தான் இருக்கிறது உங்கள் மகத்தான வெற்றி. கடந்த பத்து வருஷங்களில் வெடித்துள்ள பலகோடி ரூபாய் - அதென்ன ஏதோ ஒன்றில் மட்டும் ஒன்றே முக்கால் லட்சம் கோடி ரூபாய் என்று சொல்கிறார்களே - அவ்வளவு பிரம்மாண்டமான தொகையை நான் கேள்விப்பட்டதில்லை. இங்கிருந்து எங்கள் நாட்டுக்கு அவ்வளவு பெரிய தொகை போயிருக்காது என்பது மட்டும் நிச்சயம். ஒருவேளை இதையெல்லாம் கணக்கு பார்த்துத்தான் எமதர்மராஜன் என்னை நரகத்திலிருந்து சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டாரோ என்னவோ?

நாங்கள் விட்டுச்சென்ற இந்தியாவில் செய்யவேண்டிய பணியை எல்லாம் செய்து முடித்துவிட்டு நீங்கள் மேலே வாருங்கள். நான் சொர்க்கத்தில் இருந்தாலும் இரண்டு நாள்கள் லீவு போட்டுவிட்டுத் தங்களை நரகத்தில் சந்திக்கிறேன்.

நன்றியுடன் அன்பன்,
ராபர்ட் க்ளைவ்

அன்புள்ள சகோதரி சோனியா காந்திக்கு;

உன் ஐரோப்பியத் தமக்கை இரண்டாம் எலிஸபெத் ராணி எழுதும் கடிதம்.

ராபர்ட் க்ளைவ் உனக்கு எழுதிய கடிதத்தின் நகலை எனக்கு அனுப்பியிருந்தார். இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உருவாகக் காரணமான ராபர்ட் கிளைவ் நரகத்தில் வாடுகிறாரே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். உன் ஆட்சியின் போக்கைப் பார்த்துத்தான் அவருக்கு நரகத்திலிருந்து சொர்க்கத்திற்கு மாறுதல் கிடைத்திருக்கிறது என்பதனால் பிரிட்டன் சார்பாகவும் நான் உனக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கிரேட் பிரிட்டன் சார்பாக மட்டுமல்ல, வட அயர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜமைக்கா, பார்படாஸ், பஹாமாஸ், கிரனேடா, பப்புவா நியூகினி, சாலமன் தீவுகள், துவாளு, செயின்ட் லூசியா, செயின்ட் வின்சென்ட், கிரனேடைன்ஸ், பெலைஸ், ஆண்டிகுவா, பார்புடா, செயின்ட் கிட்ஸ், நெவிஸ் என்று இருபது நாடுகளுக்கு நானே ராணி. அந்த நாடுகளின் மக்கள் சார்பாகவும் உனக்கு நன்றி செலுத்துகிறேன். இவ்வளவு நாடுகள் என் ஆளுகையில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் என்ன பிரயோசனம்? அங்கங்கே அவரவர்கள் ஆள்கிறார்கள். பிரிட்டனிலும் அப்படித்தான். நான் ஓர் அலங்கார ராணி. அதிகார ராணியல்ல. நீ பிரதமரை அடக்கி ஆள்கிறாய். நான் அப்படிச் செய்யமுடியாது. அங்கே நீ சொல்வதையெல்லாம் பிரதமர் கேட்கிறார். இங்கே பிரதமர் சொல்வதை நான் கேட்கிறேன்; கேட்க வேண்டும்.

என்னவோ உன் ஆட்சி சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பல லட்சம் கோடிகளில் சொல்கிறார்களே, அதெல்லாம் எனக்குப் பெரிய பெரிய தொகை. இதுவரை நான் கண்டதில்லை, கேட்டதில்லை. அயல்நாட்டு விருந்தினர்கள், அரண்மனை மராமத்து போன்ற பொதுச் செலவுகளுக்கு பார்லிமெண்ட் ஒப்புதல்தரும் பணத்தை பிரதமர் எனக்குத் தருவார். ஜனநாயக நாடுகளான ரஷ்ய, ஜெர்மானிய ஜனாதிபதிகள் பெறும் சம்பளத்தைவிடக் குறைவான அலவன்ஸைப் பெறுகிறேன். குடும்ப உறுப்பினர்களுக்கு என் பூர்வீகச் சொத்தின் வருமானத்திலிருந்துதான் செலவழிக்கவேண்டும். அதெல்லாம் போகட்டும்; எனக்கு வாக்குரிமை கிடையாது. நான் அரசியல் விருப்பு வெறுப்புகளை வெளியிட முடியாது. ஆக, அதற்கு வாய்ப்பூட்டு இருக்கிறது. நீயோ சமயங்களில் எதிர்க்கட்சிகளைச் சாடுகிறாய். உன் ஏவல்களும் எடுபிடிகளும் நீ சொன்னபடியோ அல்லது அவர்களாகவோ என்னென்னவெல்லாமோ பேசுகிறார்கள். எனக்கு அந்தச் சொல் சுதந்திரமும் இல்லையே.

எனக்கு எவ்வளவோ ஏட்டளவு அதிகாரம் உண்டு. நான் ராணுவத்தைக் கலைக்கலாம். கப்பல்களை விற்கலாம். அதிகாரிகளை மாற்றலாம். ஆனாலும், நடைமுறையில் அப்படிச் செய்யமுடியாது. தட்டான் பூச்சி போலப் பறக்கும் ஒரு சின்ன ஹெலிகாப்டரைக்கூட வாங்கமுடியாது. ஏட்டதிகாரங்கள் செல்லாக் காசுகள். அசல் அதிகாரமல்லவா செல்லுபடியாகக்கூடியது. இருட்டில் அதிகாரம், வெளிச்சத்தில் அதன் ஆதாயம் என்ற உன் புதிய நிர்வாக உத்தி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இத்தாலியின் ராஜதந்திரி மாக்கியவில்லி அல்ல, நீயேதான். அவரும்கூடப் பொறாமைப்படும் அளவுக்குப் பெரிய ராஜ தந்திரியான உன்னைக் கண்டு நான் நிஜமாகவே பொறாமைப்படுகிறேன். பிரிட்டனின் நிர்வாகம் என் பெயரில் நடைபெறுவதாகச் சொல்லப்படுவது ஒரு மொண்ணை சம்பிரதாயம். நடைமுறையிலோ பிரதமர் சொல்வதை நான் கேட்கிறேன். ராணியாக இதுவரை பதினொரு பிரதமர்கள் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். ஒரு பிரதமர் இரண்டு முறை பதவியில் இருந்ததால் பன்னிரண்டு பிரதமர்கள் என்று கணக்கு வைத்துக்கொள்ளலாம். உனக்கோ ஒரேயொரு பிரதமர். அவர் சொல்வதை நீ கேட்க வேண்டுமென்பதில்லை. கேட்கவும் மாட்டாய், உன் சுபாவம் அது. அந்தஸ்தும் அப்படி. ஆனால் நீ சொல்வதை அவர் கேட்டாகவேண்டும். என் நாட்டுப் பிரதமர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆனால் உனக்கோ மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவரைப் பிரதமராக நியமித்துக்கொள்ளும் அதிகாரம் இருக்கிறது. அதாவது நீ ஒரு பிரதமரை மக்கள்மீது திணிக்க முடிகிறது. பிரிட்டனின் ராணிகளுக்கும் இருந்திராத அதிகாரம் அல்லவா இது? அதனால் அதிமகாராணியான உன்னைப் பணிந்து வணங்குகிறேன்.

என் தீர்ப்பு நாளில் எமதர்மராஜன் என்னைப் பார்த்து சொர்க்கத்திற்குப் போகிறாயா; இல்லை, நரகத்திற்கா என்று கேட்டால், அதைப் பிறகு முடிவு செய்யலாம். முதலில் இரண்டாம் எலிஸபெத்தான என்னை இந்தியாவில் இரண்டாம் சோனியா காந்தியாகப் பிறக்க வையுங்கள் என்றே கேட்பேன். இதுவல்லவா சொர்க்கம்!


வாழ்த்துக்களுடன் லண்டனிலிருந்து,
இரண்டாம் எலிஸபெத்

# ARAS ART SCHOOL

# அரஸ் ஆர்ட் ஸ்கூல்

ஆறிலிருந்து அறுபதுவயதுவரை ஓவியம் வரைய ஆர்வமுள்ள அனைவரும் ஓவியநுணுக்கங்களை ஏராளமான படங்களுடன் வீட்டிலிருந்தபடியே எளிய முறையில் கற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு!

## 36 ஓவிய பயிற்சிப் பாடங்களின் தொகுப்பு


ARAS ART SCHOOL
34/6 SRI GANESH FLATS
ST MARY' S ROAD
R. A. PURAM,CHENNAI
TAMILNADU,INDIA
PIN/ZIP-600028
PHONE +919940544416
+91 04424936918

பாடங்களைப்பெற...
ARAS ART SCHOOL"என்ற பெயரில் டி.டி எடுத்து" அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலும் செலுத்தலாம்.

கட்டண விபரங்கள்: UK 40 POUNDS
EUROPE 45 EURO
CANADA 65 DOLLARS

AXIS BANK
A/C NO : 913020019432776
MICR CODE : 600211023
IFS CODE : UTIB0000676

arasoviyar@gmail.com
oviyaras@yahoo.co.in

எங்கள் இ மெயிலுக்கு உங்கள் முகவரியை அனுப்பவும். பாடங்கள் மூன்றே நாட்களில் உங்கள் இல்லத்திற்கே வந்து சேரும்.



படம்: 'கலைமாமணி' யோகா

சுதா ரகுநாதனின் கச்சேரிகள் என்றுமே ஏமாற்றமளித்ததில்லை. ராகங்களின் அழகை வெளிப்படுத்துவதில் அவர் வல்லவர்

## சங்கீத கலாநிதி விருது

# அழகின் ஜொலிப்பு

**புரந்தரதாசரின் கிருதியை விருத்தமாய்ப் பாடும்போது ஒலிப்பது அவருடைய குரலா அல்லது தம்பூராவின் ரீங்காரமா என்று எண்ணத்தோன்றும்**

பிங்காட்சன்

ஆஹா, சென்னை மியூசிக் அக்கடெமிக்கு என்ன வந்துவிட்டது! வரவேற்கத்தக்க மாற்றமாக, இம்முறை வயதில் இளைய இசைக் கலைஞர் ஒருவருக்கு ‘சங்கீத கலாநிதி’ விருது வழங்க முடிவுசெய்திருக்கிறது.

மியூசிக் அக்கடெமி, சங்கீத கலாநிதி விருதை ஒருவருக்குக் கொடுத்துவிட்டால் அந்தக் கலைஞர் இனிப் பாடமாட்டார், ஓய்வுபெற்றுவிட வேண்டும் என்று கொள்ளலாம். அதாவது, அந்த வயதில்தான் ஒரு கலைஞருக்கு அந்த விருதைக் கொடுப்பார்கள். பாபநாசம் சிவன் செய்யாத இசைப் பணியா? அவர் எண்பது வயதைக் கடந்த பின்னர்தான் சங்கீத கலாநிதி ஆனார்; சில நாள்களில் இறந்தும்போனார்.

சென்ற ஆண்டு ஜி. என். பாலசுப்பிரமணியத்தின் சீடர் திருச்சூர் இராமச்சந்திரனுக்கு கொடுத்தார்கள்; முற்றிலும் தகுதியானவர்தான். இந்த ஆண்டு அவருடைய மனைவி சாருமதிக்கோ, முசிரி சுப்பிரமணிய ஐயரின் மாணவியான சுகுணா புருஷோத்தமனுக்கோ இந்த விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள்; சுதா ரகுநாதனுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

சுதா ரகுநாதன் இன்னமும் ஐம்பதுகளில்தான் இருக்கிறார் என்பதனால்தான் இந்த வியப்பு ஏற்படுகிறது; மகிழ்ச்சிதான்.

சுதா ரகுநாதன் இன்று மிகப் பிரபலமாக விளங்கும் கலைஞர். இவருடைய குரு எம். எல். வசந்தகுமாரி எப்படிப்பட்ட இசை வித்தகர்! எம். எல். வி. யின் சொந்த வாழ்க்கை சோகமானது. சம்பாதித்த பணத்தையெல்லாம் இழந்தார். மதனபள்ளியில் உள்ள ஜெ. கிருஷ்ணமூர்த்தி பள்ளியில் பணியாற்ற வேண்டியதாயிற்று. மகள் ஸ்ரீவித்யா சினிமாவில் சம்பாதித்ததையெல்லாம் இழந்து, புற்று நோயால் மரணமுற்றார்.

ஆனால், எம். எல். வி. மேடை ஏறிவிட்டால் சொந்த வாழ்வின் துயரங்களையெல்லாம் மறந்து பாடுவார். பெண் கலைஞர்களில் அவரைப் போன்ற கற்பனை வளம் எவருக்கும் இருந்ததில்லை எனலாம். அவர் ஒரு முறை சென்னை சபா ஒன்றில் பாடிய கீரவாணியைப்போன்று அதன் பின்னர் கேட்டதே இல்லை. லதாங்கியையும் பைரவியையும் அவரைப்போல் விஸ்தாரமாக ஆலாபனை செய்தவர் எவர் இருக்கிறார்? அவர் பாட்டு கடல் போன்றது. அவருடைய தாயார் லலிதாங்கி மாபெரும் இசைவாணி. புரந்தர தாசரின் கிருதிகளுக்கு மெட்டமைத்தவர்.

எம். எல். வி. யின் குரு, ஈடு இணையற்ற ஜி. என். பி. அப்படிப்பட்ட குருவிடம் இசைபயின்ற சுதா ரகுநாதன் இத்துறையில் சிறந்துவிளங்குவதில் வியப்பென்ன இருக்கிறது!

சுதா ரகுநாதன் எம். ஏ. பட்டதாரி. மாணவ பருவத்தில் தன் தாயாரிடம் இசை பயின்றார். பிரபல இசையமைப்பாளர் எம். பி. சீனிவாசனின் இசைக்குழுவில் பாடிப்பாடி தன் குரலை மிகவும் வளப்படுத்திக்கொண்டார். பின்னர், இந்திய அரசின் புலமைப்பரிசில்பெற்று எம். எல். வி. யிடம் இசை பயிலத் தொடங்கினார். எம். எல். வி. யுடன் பெரும்பாலான நிகழ்ச்சிகளில் உடன் பாடி, இசை நுட்பங்களை நேரடியாக அறிந்துகொண்டார். சீடர்களை உருவாக்குவதில் எம். எல். வி. மிகச் சிறந்தவர்.

சுதா ரகுநாதனின் கச்சேரிகள் என்றுமே ஏமாற்றம் அளித்ததில்லை.

அசாத்தியமான கற்பனை என்று சொல்லமுடியாது என்றாலும், ராகங்களின் அழகை வெளிப்படுத்துவதில் அவர் வல்லவர்.

இனிய குரல். “தம்பூரு மீட்டவா...'' என்று சுத்த தன்யாசி ராகத்தில் அவர் புரந்தரதாசரின் கிருதியை விருத்தமாய்ப் பாடும்போது ஒலிப்பது அவருடைய குரலா அல்லது தம்பூராவின் ரீங்காரமா என்று எண்ணத்தோன்றும்.

“இன்னு தய பாரதே தாசன மேலே...'' என்ற கல்யாணவசந்த கிருதியை சுதா பாடிக் கேட்கையில் கண்ணீர் பெருகும். ‘ஏனு மாடிடரேனு பிராண நின்னது ஸ்வாமி’ என்ற வரியில், ‘ஸ்வாமி’ என்பதை மீண்டும் மீண்டும் உருகி உருகிப் பாடுவது உள்ளத்தை உருக்குவதாக இருக்கும். ராக பாவங்கள் அற்புதமாக வெளிப்படும்.

சுதா ரகுநாதன் மேடையில் அமர்ந்தால் மேடை ஜொலிக்கத் தொடங்கிவிடும். ஒப்பனை, தலையில் பூ, அழகான பட்டுப் புடவை, ஆபரணங்கள் இல்லாமல் மேடை ஏறுவதில்லை. இதிலும் இவருடைய குருவையே பின்பற்றுவார். மேடைத் தோற்றம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்தவர்.

இவர் சென்றிராத நாடு எதுவுமே இல்லை எனலாம். கர்நாடக இசையை உலகெங்கும் கொண்டுசென்ற பெருமை இவருக்கு உண்டு. இசை இவருக்கு செல்வத்தை அள்ளி வழங்கியுள்ளது. ‘சமுதாயா’ என்ற அறக்கட்டளையை நிறுவி, பல உயரிய சமூகப் பணிகளையும் ஆற்றிவருகிறார். ■

## திரைப்படம்: 'தலைவா'



# அரங்குக்கு வெளியே ஏற்படுத்திய பரபரப்பு

### நட்சத்திர பிம்பத்தின் நம்பிக்கை

'தடைகளைத் தாண்டிவந்த தலைவா' என்று ரசிகர்கள் விஜயை அழைத்துப் பெருமைப்பட்டுக்கொள்ளலாம். இதுவரை வெளிப்படையாகத் தெரியாத காரணங்களுக்காக, இயக்குநர் விஜய் இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்த 'தலைவா' திரைப்படம் திட்டமிடப்பட்டபடி ஆகஸ்ட் 9இல் தமிழகத்தில் மாத்திரம் வெளியாகவில்லை. திரையரங்குகளுக்கு வந்த வெடிகுண்டு மிரட்டல், படத்துக்கு பொழுதுபோக்கு வரிவிலக்கு அளிக்க பரிசீலனைக் குழுவின் மறுப்பு, நடிகர் விஜயின் அரசியல் அபிலாஷைகள் நிஜத்தை நோக்கி நகர்வதை விரும்பாத ஆளும் கட்சியின் அரசியல் தலையீடு என பல்வேறு காரணங்கள் இந்த தடைக்குச் சொல்லப்பட்டன. விஜய் ரசிகர்களையும் பொதுவான ரசிகர்களையும் இந்தத் தடை வருத்தமுறச் செய்தது. கோயம்புத்தூரைச் சேர்ந்த விஜய் ரசிகர் ஒருவர் படம் பார்க்க முடியாத சோகத்தில் தற்கொலைசெய்துகொண்டார்.

அரசியல் தலையீடு இருப்பதைப் பற்றி படக் குழுவினர் யாரும் கடைசி வரை எதுவும் தெரிவிக்கவில்லை ஆகஸ்ட் 20ஆம் தேதி படம் வெளியானபோது, படத்தின் தலைப்பிலிருந்த 'ரைம் ரு லீட்' என்ற வாசகம் நீக்கப்பட்டதும், 'அரசியலுக்குவர எல்லா தகுதியும் உனக்கு இருக்குப்பா' என்று நகைச்சுவை நடிகர் சந்தானம் விஜயை பார்த்துச் சொல்லும் வசனம் நீக்கப்பட்டதும் அரசியல் தலையீடு படத்தில் இருந்திருக்கலாம் என்ற எண்ணத்துக்கு வலு சேர்த்தன.

தலைவா படம் 9ஆம் தேதியன்றே தமிழகத்தைத் தவிர உலகின் அனைத்து இடங்களிலும் வெளியாகிவிட்டதால் சட்டத்துக்குப் புறம்பான வகையில் இணையத்திலும் டிவிடிக்களிலும் படம் வெளியாகிவிட்டது. இதே போன்ற பிரச்னைகளை சந்தித்த 'விஸ்வரூபம்' படத்தின் களவான பிரதிகளைத் தடுப்பதில் முனைப்பு காண்பித்த தமிழக காவல்துறை, தலைவா விவகாரத்தில் ஏனோ இதனைக் கண்டுகொள்ளவே இல்லை. தமிழக திரையரங்குகளில் படம் வெளியாவதற்குள் ரசிகர்களில் கணிசமானோர் படத்தைப் பார்த்துவிட்டிருந்தார்கள்.

படத்தை வெளியிடுவதற்கான தடைகள் நீங்கியவுடன் காலதாமதத்தால் ஏற்படும் இழப்புகளை அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் வழக்கத்துக்கு மாறாக, வார நாளான செவ்வாய்க் கிழமை 'தலைவா' படம் வெளியானது. இதனால், முதலில் திட்டமிடப்பட்ட எண்ணிக்கையைவிட குறைவான திரையரங்குகளில்தான் படம் திரையிடப்பட்டது. ஆனால், அனைத்து திரையரங்குகளிலும் முதல் சில நாள்களுக்கு ரிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்தன. வழக்கமாக விஜய் படம் வெளியாவதையொட்டி / நடக்கும் கொண்டாட்டங்களைவிட விமரிசையான அளவில் தலைவாவுக்கான கொண்டாட்டங்கள் அமைந்தன. நிர்ப்பந்திக்கபட்ட காலதாமதத்துக்கான பதிலடியாக விஜய் ரசிகர்கள் இதைச் செய்தார்கள்.

சரி, தலைவா படம் எப்படி இருக்கிறது?

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதியான தாராவியில் அப்பாவி மக்களைப் பாதுகாக்க உள்ளூர் கயவர்களை எதிர்த்து தன் மனைவியை பறி




கொடுக்கும் ராமதுரை (சத்யராஜ்), மகன் விஷ்வாவை அவுஸ்திரேலியா வுக்கு அனுப்பிவிடுகிறார். வெளிநாட்டில் படித்து வளர்ந்து, தன் காதலைச் சொல்வதற்காக தந்தையைக் காணவரும் விஷ்வா (விஜய்), தனது தந்தை அண்ணா எனும் மக்கள் தலைவர் அண்ணாவாக உயர்ந்து நிற்பதைப் பார்க்கிறார். தன் கண்முன்னே அப்பாவை எதிரிகள் கொன்றுவிட, எதிரிகளையும் துரோகிகளையும் அழிக்கிறார். இறுதியில் அண்ணாவாக மாறுகிறார்.

பலமுறை பார்த்து சலித்துப்போன இந்தக் கதை, திரைக்கதையிலும் எந்த சுவாரஷ்யமும் இல்லாமல் நகர்கிறது. முதல் பாதியில் நடனக் குழுவைச் சேர்ந்தவராக காண்பிக்கப்படும் விஜயின் நடனம்; சந்தானத்தின் நகைச்சுவை; அமலா பாலுடனான காதல் காட்சிகள் ஆகியவற்றைக்கொண்டு படத்தை நகர்த்தியிருக்கிறார்கள். சந்தானத்தின் நகைச்சுவை ஆங்காங்கே புன்னகையை வரவழைக்கிறது. ஆனால், அவர் பேசும் வசனங்களில் பழமையின் நெடி வீசத் தொடங்கி விட்டதை உணரமுடிகிறது. சந்தானம் விழித்துக்கொள்ளவேண்டிய தருணமிது. விஜயின் நடனம் வழக்கம்போல் சிறப்பாக இருக்கிறது. அமலா பால் தோற்றத்தில் வசீகரித்தாலும் அவரது பாத்திரப் படைப்பிலும் அவர் தோன்றும் காட்சிகளிலும் எந்த சுவாரஷ்யமும் இல்லை, சொந்தக் குரலில் பேசியிருப்பதைத்தவிர. இரண்டாம் பாதியில் அவரது பாத்திரத்தில் அதிரடி மாற்றம் ஏற்பட்டாலும், அதுவும் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

முதல் பாதியின் முடிவில் திடீர் திருப்பம் ஒன்று வருகிறது. அது எதிர்பாராததுதான் என்றாலும் திடுக்கிட வைக்கவில்லை. பல படங்கள் இது போன்ற திருப்பங்களுக்கு ரசிகர்களைப் பழக்கிவிட்டன. இரண்டாம் பாதியில் நாயகன் ஊர்த் தலைவராக உயரும் காட்சிகள் பல, ஊருக்கு நன்மை செய்யும் தாதா படங்களில் பார்த்துப் பழக்கப்பட்டவை. படத்தின் தொடக்கத்தில் இயக்குநர்கள் மணிரத்னம் ('நாயகன்'), ராம் கோபால் வர்மா ('சர்க்கார்') ஆகியோருக்கு நன்றி தெரிவித்திருப்பதன் காரணம் அப்போதுதான் புரிகிறது. தந்தையின் இடத்தை மகன் பிடிக்கும் காட்சிகளில் 'தேவர் மகனின்' சாயல் தெரிகிறது. இயக்குநர் பரதன் என்ன பாவம் செய்தாரோ தெரியவில்லை.

படத்தில் மும்பையில் வசிக்கும் வேற்று மாநிலத்தவர்களை வெளியேறச் சொல்லும் போராட்டங்கள் குறித்த காட்சிகள் இடம்பெறுகின்றன. ஆனால், நிஜத்தில் அதை ஒரு பிரச்னையாக்கிப் போராடுபவர்கள் யாரென்பதை அவர்களின் அடையாளங்களுடன் காண்பிக்கும் துணிச்சல் இயக்குநர் விஜய்க்கு இருக்கவில்லை. நடிகர் விஜயின் ரசிகர்களை கைதட்ட வைக்கும் வகையில் இந்திய ஒருமைப்பாட்டையும் மனித நேயத்தையும்பற்றி உணர்ச்சி பொங்க வசனம் பேசவைக்க மட்டுமே அந்தக் காட்சிகள் பயன்படுகின்றன.

ஒரு முக்கியமான 'பென்ட்ரைவ்' ஒரு திருடனிடம் மாட்டிக்கொண்டுவிட, அதை கைப்பற்ற நாயகனுக்கும் பிரதான வில்லனுக்கும் நடக்கும் போட்டியாகவரும் காட்சிகள் மட்டுமே இரண்டாம் பாதியில் ரசிக்க வைக்கின்றன.

இவையனைத்துக்கும் பின்னர் வழக்கம்போல் பாங் (மயக்கம் வரவழைக்கும் பானம்) குடித்து விட்டு சூதாட்டம் ஆடிச் சாய்ந்துவிடுகிறார். அவரை மட்டும் விட்டுவிட்டு, அவரது கூட்டாளிகள் அனைவரையும் கொன்றுவிடுகிறார்கள் வில்லனின் அடியாட்கள். இறுதியில் ஒற்றையாளாக சென்று அனைத்து தீயவர்களையும் கொன்று தீர்க்கிறார்.

ஜி. வி. பிரகாசின் பாடல்கள் அனைத்தும் தாளம்போட வைக்கின்றன. நிரவ் ஷாவின் ஒளிப்பதிவும் குறை சொல்லும்படியாக இல்லை. ஆனால், விஜயின் நட்சத்திர பிம்பத்தை நம்பி, கதையும் திரைக்கதையும் கோட்டை விடப்பட்டுவிட்டன.

மொத்தத்தில் 'தலைவா' படம் ஏற்படுத்திய பரபரப்புகள் எல்லாம் திரையரங்குக்கு வெளியேதான். படத்தில் அதைச் சாதிக்கும் அம்சங்கள் எதுவும் இல்லை.

**- கிருஷ்ணா**

## ‘மெட்ராஸ் கஃபே’ - திரைப்படம்

### தணிக்கைக் குழு அங்கீகாரத்தின் பின்னரும் தடை

# புலிகள் எதிர்ப்பு பிரச்சாரம்?

### இலங்கை, இந்திய அரசுகளோ, புலிகளோ யார் தவறையும் சொல்வது கடினமே

**கிருஷ்ணா**

தணிக்கைச் சான்றிதழ்பெற்று, வெளியீட்டுத் தேதி அறிவிக்கப்பட்டு, ஆசன முன்பதிவு ஆரம்பித்து, கடைசி நேரத்தில் மூன்றாவதாக ஒரு படம் தடைபட்டிருக்கிறது, தமிழகத்தில் மட்டும். கமலஹாசனின் ‘விஸ்வரூபம்’, ‘விஜயின் ‘தலைவா’ ஆகிய படங்களைத் தொடர்ந்து, இந்தி நடிகர் ஜோன் ஆபிரகாம் தயாரித்து நடித்திருக்கும் ‘மெட்ராஸ் கஃபே’ ஆகஸ்ட் 24 அன்று உலகெங்கும் வெளியானது, தமிழகத்தைத் தவிர.

விஸ்வரூபத்துக்கு இஸ்லாமிய அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. தலைவா படத்துக்கு என்ன பிரச்னை என்று கடைசிவரை தெளிவாகவில்லை. மெட்ராஸ் கஃபே தமிழீழ ஆதரவாளர்களின் மனதைப் புண்படுத்தியிருக்கிறது.

மெட்ராஸ் கஃபே, முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதைப்பற்றிய படம் என்று தெரிந்ததும் தமிழகத்தைச் சேர்ந்த ஈழ ஆதரவு அமைப்புகள் படத்தை தங்களுக்கு காண்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. தணிக்கைக் குழு சான்றிதழ் பெற்றுவிட்ட படத்தை தங்களுக்கு காண்பித்தபின்னர்தான் வெளியிடவேண்டும் என்று யாரும் நிர்பந்திக்க முடியாது. ஆனால், தமிழகத்தில் கிடைக்கும் வருமானத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்று நினைத்த ஜோன் ஆபிரகாம், படத்தை திரையிட்டுக் காண்பித்தார். மெட்ராஸ் கஃபே படத்தை இயக்கியவர் சூஜித் சர்க்கார்.

படத்தைப் பார்த்த ஈழ ஆதரவு அமைப்புகளின் உறுப்பினர்களும் அரசியல் கட்சிப் பிரமுகர்களும் கொதித்தனர். படம் விடுதலைப் புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பாகவும், அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரைனை மிகக் கொடியவராக சித்தரிப்பதாகவும், இந்த பொய்யான கருத்தைப் பரவவிடக் கூடாது என்றும் படத்துக்குத் தடை கோரினார்கள். ம. தி. மு. க. தலைவரும் புலிகள் ஆதரவை வெளிப்படையாக தெரிவித்துவரும் தலைவருமான வைகோவும் இதே கருத்தை வெளியிட்டார். தலித் மக்களை சமூக விரோதிகளாக சித்தரிக்கும் பணியிலிருந்து சற்று விலகி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் ராமதாஸும் தடைக் கோரிக்கையில் ஒன்றுசேர்ந்தார். படத்தில் ஈழப் போராட்ட வரலாறு பொய்யாகத் திரிக்கப்பட்டிருப்பதாகவும், ஒரு தலைப்பட்சமாக சித்தரிக்கப்பட்டிருப்பதாகவும் படத்தைப் பார்த்தவர்கள் அழுத்தமாக பதிவுசெய்திருக்கிறார்கள். படத்தின் ஒவ்வொரு காட்சியையும் முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு அதை நிரூபிக்க முயன்றார்கள்.

ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களை மறைக்கவும் பல்லாயிரக் கணக்கில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதன்மீதான விசாரணையை மழுங்கடிக்கவும் ராஜபக்ஷ அரசு இதுபோன்ற படத்துக்கு நிதி உதவி செய்திருப்பதாகவும், இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பி அங்கு தமிழர்களுக்கு அந்தப் படையால் நிகழ்ந்த கொடுமைகளைக் கண்டுகொள்ளாத ராஜீவ் காந்தி அங்கு அமைதியையே விரும்பினார் என்பது போலவும் சித்தரித்திருப்பதால் காங்கிரஸ் அரசும் இந்தப் படத்துக்கு உதவி செய்திருப்பதாகவும் ஈழ ஆதரவாளர்கள் குற்றம்சாட்டினார்கள். கேரளாவைச் சேர்ந்த ஜோன் ஆபிரகாமின் படம் என்பதால் மலையாளத்தவர்கள் தமிழர்களுக்கெதிரான காழ்ப்பை வெளிப்படுத்தும் மற்றொரு நிகழ்வாகவும் இந்தப் படத்தை ஈழ ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

தமிழகமெங்குமுள்ள ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் மெட்ராஸ் கஃபே படத்தைத் தடை செய்வதற்கான கோரிக்கையை இவர்கள் முன்னெடுத்தார்கள். சிலர் நீதிமன்றத்தை நாட, பலர் வன்முறைப் போராட்டத்தை கையிலெடுத்தார்கள்; அல்லது, கையிலெடுப்பதாக மிரட்டினார்கள். சென்னையிலும் மற்றைய பகுதிகளிலும் மெட்ராஸ் கஃபே வெளியாகவிருந்த அரங்கங்களின் வாசலில் ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. படத்தின் சுவரொட்டிகள் கிழித்தெறியப்பட்டன. படத்தை வெளியிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்ற மிரட்டல் விடுக்கப்பட்டது. மும்பை, ஹைதராபாத், பெங்களூரு உள்ளிட்ட வேற்று மாநில நகரங்களில் உள்ள ஈழ உணர்வாளர்களும் படத்துக்குத் தடை கோரிப் போராடினார்கள்.

நீதிமன்றம் படத்துக்குத் தடை விதிக்க மறுத்துவிட்டாலும் திரையரங்க உரிமையாளர்கள் பின் விளைவுகளைச் சந்திக்க விரும்பாமல் படத்தை வெளியிட மறுத்துவிட்டார்கள். மெட்ராஸ் கஃபே இந்தி, தமிழ் என இரண்டு



பதிப்புகளும் தமிழகத்தில் மட்டும் இக்கட்டுரை எழுதப்படும் நாள்வரை வெளியாகவில்லை.


மெட்ராஸ் கஃபே ஒரு சாதாரண வர்த்தக படம் என்றும் அது எந்தச் சார்புடனும் எடுக்கப்படவில்லை என்றும் ஜோன் ஆபிரகாம் தெரிவித்தார். படத்துக்கு எதிரான போராட்டம் வலுத்துக்கொண்டிருந்தபோது, தணிக்கைக் குழு அனுமதித்துவிட்ட படத்தை யாரும் தடுக்கமுடியாது, என்றார். ஆனால், படத்தை அவர்களுக்குக் காண்பித்துப் பிரச்னையில் மாட்டிக் கொண்டார்.

மெட்ராஸ் கஃபே பட விவகாரத்திலும் தமிழக அரசு இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. ஈழ மக்கள் துயர் பற்றி தொடர்ந்து பேசிவருபவரும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முனைபவருமான தமிழக முதல்வர், இந்த விடயத்தைப்பற்றி எதுவும் கூறவில்லை. ஈழ மக்களுக்கான ஆதரவும் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவும் வெவ்வேறானவை என்று நினைப்பவர் அவர் என்பதிலிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம். தி. மு. க தலைவர் மு. கருணாநிதி, தடை விதிப்பதா இல்லையா என்று அரசு முடிவெடுக்க வேண்டும் என்று கோரினார்.

தமிழகத்தில் இந்தப் படத்தின் தடைக் கோரிக்கைக்கு கணிசமான ஆதரவு இல்லை. ஈழ விவகாரத்தில், அப்பாவித் தமிழர்கள்மீது பொதுமக்களில் பெரும்பாலானோருக்கு இருக்கும் கரிசனை விடுதலைப் புலிகளின் பால் இல்லை. ஈழத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு இலங்கை அரசைப்போல் புலிகள் அமைப்பும் காரணம் என்று வாதிடுபவர்கள் தமிழகத்தில் கணிசமான அளவில் இருக்கிறார்கள். அவர்களைத் தமிழர்கள்மீது அக்கறை இல்லாதவர்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஈழ விவகாரத்தில் கருத்து சொல்ல விரும்பாத பல அறிவுஜீவிகள் இருக்கிறார்கள். மறுபுறம், புலிகளை ஆதரித்துப் பேசியதனாலோ அல்லது இலங்கை, இந்திய அரசுகளின் தவறுகள், துரோகங்களைப்பற்றி பேசியதனாலோ கடுமையான தண்டனைகள் விதிக்கப்பெற்ற நிகழ்வுகளும் ஏராளம். இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் சித்திரவதைகளை ஆவணப்படுத்திய 'ஆணிவேர்' என்ற திரைப்படமும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலிகளுக்கு அப்பாற்பட்ட சக்திகள் ஈடுபட்டிருப்பதைப் பேசிய 'குற்றப் பரம்பரை' என்ற திரைப்படமும் அரசால் தடை செய்யப்பட்டு பெட்டிக்குள் கிடக்கின்றன. மெட்ராஸ் கஃபே விவகாரத்தில் கருத்து சுதந்திரம் பற்றிப் பேசுவோர் இந்தப் படங்களில் அந்த சுதந்திரத்தைப் பார்க்கவில்லை.

தமிழ்த் திரைப்பட இயக்குநர் பாலு மகேந்திரா, 'இலங்கைப் பிரச்னைபற்றி நான் உண்மை என்று நினைக்கும் விடயங்களைப் படமாக்க விரும்புகிறேன். ஆனால், அந்தப் படத்தை நான் வெளியிட்டால் நிச்சயம் நான் கொல்லப்பட்டுவிடுவேன்' என்று சில ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். இலங்கை அரசு, இந்திய அரசு, புலிகள் என யார் செய்த தவறைச் சுட்டிக்காட்டினாலும் பிரச்னையை சந்திக்க வேண்டியிருக்கும் என்ற நிலைதான் நிலவுகிறது.

பொதுமக்களுக்கிடையிலான கருத்துப் பகிர்தலையும் தகவல் பகிர்தலையும் தடுக்கும் இதுபோன்ற கடுமையான எதிர்வினைகள், பிரச்னைக்கான தீர்வை தள்ளிப்போடுவதைத்தவிர வேறெதனையும் செய்யப்போவதில்லை. கருத்து சுதந்திரம், உண்மை, ஒருதலைப்பட்சமான நிலைப்பாட்டைத் தவிர்ப்பது, எதிராளியின் நியாயங்களைப் புரிந்துகொள்வது, சகிப்புத் தன்மை ஆகிய மனிதநேயத்துக்குப் பயனுள்ள குணங்களை பழகிக்கொள்வதற்கு கடக்க வேண்டிய தூரம் இன்னும் அதிகம். ■


276 High Street North London E12 6SA UK Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448
இலண்டனில்
தரமான
தங்கத்திற்கு
Lakshmis
Jewellers

*"Make Your Dream Home Come True"*



**PARAM GNANASWARAN**
REAL ESTATE BROKER
Direct: 416-230-1107

RESIDENTIAL, COMMERCIAL & INVESTMENTS


RIGHT AT HOME

**RIGHT AT HOME REALTY INC., BROKERAGE**

HOME OFFICE:
**401-7045 EDWARDS BLVD,**
**MISSISSAUGA, ONT.L5S 1X2**
**PH# 905-565-9200**

MAIN OFFICE:
**202 DON MILLS ROAD**
**TORONTO, ONT.M3C 1W3**
**PH# 416-391-3232**





# Lycamobile

**Call the world for less**



## Call Sri Lanka

**Landline & Mobile**

# 5p /min

When you buy

**National Bundle** just for **£10** /30 Days

# 500 UK Minutes

# UNLIMITED

**UK Texts** | **Data** | **Lyca to Lyca**

To buy: dial *139*11044# or text 11044 to 3535

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile's Special International rates for National Bundle customers offer ('the offer') is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with the £10, £20, £30 or £40 National Bundles (not the £5 bundle).Promotional period: the offer is valid from 16th August to 31st October 2013 Lycamobile National Bundle ('the offer') inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Unlimited usage is subject only to a variation of speed from 3G to 2G for usage beyond fair use limit (for £10 and £20 bundle - 1000MB, for £30 and £40 bundle-3000MB) per month per SIM for fair use reasons to permit unlimited access. Allowances are valid for 30 days from the date of purchase. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), or if it is being used for tethering. Promotional period: the offer is valid from 16th August to 31st October 2013.

Lyca mobile

Call the world for less